சப்தரிஷிகள் திருவாய் மலர்ந்தருளிய

அநுபோக

ஜாதகரகசியம்.



கன்னிபுத்தூர்

அருணகிரி முதலியார்

அவர்களால்

டைடல்பேஜ் மாத்திரம் முராஹரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை 1930.

MURAHAR

சப்தரிஷிகள் திருவாய்மலர்ந்தருளிய

அனுபோக

ஜாதகரகசியம்.

இதை அனேக
சோதிடர்களனுமதியின்படி
ம-ா-ா-ஸ்ரீ செஞ்சி,
ஏகாம்பரமுதலியாரவர்களால்
ஏட்டுப்பிரதியும், அச்சுப்பிரதியும்கொண்டாராய்ந்து
யெழுதிமுடியப்பெற்று,

மதுரை புக்ஷாப் சோதிடசாஸ்திரி
S. கூடலிங்கம்பிள்ளை யவர்களால்,
பார்வையிடப்பெற்று

கோ. செல்லப்பிமுதலியார் அவர்களால்,

சென்னை,
ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1926.

உ

தேவிசகாயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் இந்த ஜுபோக ஜாதகரகசியம் என்னும் இந்நூல் ம-ா-ா-ஸ்ரீ செஞ்சி **ஏகாம்பரமுதலியார்** அவர்களால் எழுதிமுடிவுப்பெற்றதையான் சகல சுகந்தரத்துடன் நகல் பிரகாரம் அடியிற்கண்டபெயருக்கு ரிஜிஸ்டர்செயதிருப்பதால் இந்நூலிலிருக்கும் அம்ஸங்களையாவது புத்தகத்தின் பெயரையாவது மாற்றி இந்நூலை எவர்களாயினும் என்னனுமதியின்றி அச்சிற்பதிப்பிக்கின்றவர்களும் பதிப்பிக்கின்ற அச்சுக்கூடத்தலைவர்களும் 1867௵த்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவில் 6-வது விதியின்படி மேற்படியார்களால் செய்யும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகவும், ஜவாப்புதாரிகளாகவு மிருப்பார்களென்றும் யாவரும் தடையின்றி கவனிப்பீர்களாக.

இப்படிக்கு,

☞ **கோளப்பஞ்சேரி-செல்லப்பமுதலியார்.**

ஜீவகாருண்ணியம் விலாசமச்சுக்கூடத்ததிபர்

நெ. 54. நம்மாழ்வார்வீதி சென்னை.

உ

பொருளடக்க அகராதி.

பொருள்.	பக்கம்.	பொருள்.	பக்கம்.
நட்பாட்சி நீசம்பகை	1	சூரியன்	22
சூரியன்	1	சந்திரன்	22
சந்திரன்	2	அங்காரகன்	22
அங்காரகன்	2	புதன்	23
புதன்.	2	வியாழன்	23
குரு	2	சுக்கிரன்	23
சுக்கிரன்	3	சனி	24
சனி	3	இராகு கேது	24
இராகு	3	இலக்கின பாவம்	25
கேது	3	இரண்டாம் பாவம் நேத்தர பலன்	32
சாரநிலை அரியும்	4	வாக்கு ஸ்தான பலன்	34
சாரநிலைக்கு முன்பார்வை	4	வித்யா பலன்	35
வீட்டின்பார்வை	4	தனபலன்	36
தசைவருடமறிய	5	மூன்றும் பாவம் சகோதர பலன்	41
திக்கறிய	5	சகோதர பாவம் சகோதர நஷ்டம்	42
கிரகங்களின்தொழில்	5	பெண்சகோதரம்	42
மூலதிரகோண சக்கரம்	6	சகோதரமின்மை சகோதர மடிவு	43
இராசிநாழி சக்கரம்	6	சகோதாசங்கை	43
ஜாதகபலன்	7	வெகுசகோதரம்	44
கோசாரப்பலன்	20	பெண்சகோதர மின்மை	44
சூரியன்	20	நான்காம்பாவம் வாகனபலன்	45
சந்திரன்	20	மாதுர்பலன்	48
அங்காரகன்	20	பரவிஷையம்	51
புதன்	20	ஐந்தாம்பாவம் பிதாபலன்	53
வியாழன்	21	ஆறும்பாவம் வழக்கின்பலன்	53
சுக்கிரன்	21	ஏழாம்பாவம் களத்திரபலன்	62
சனி	21		
இராகு கேது	21		
மேற்படி கிரகங்கள் கெடிதிபிடம்	22		

பொருள்.	பக்கம்.	பொருள்	பக்கம்.
எட்டாம்பாவம் ஆயுள்பலன்	69	அகங்கெடும் நஷ்டம்	82
தீர்க்கவியாதி அபமிருத்து	72	நிர்ப்பாக்கியன் இரந்துண்பானெனில்	82
நன்மையான வாழ்வு	73	அச்சம்நோய் சேரதாரன் கோன்சொல்லுதல்	82
பரவதாரோகணம் சிரோவியாதி	73	பத்தாம்பாவம் கர்வபலன்	83
பரிமளாதிவஸ்திரகிரைய விக்கிரையங்களால் ஜீனம்	74	பதினோராம்பாவம் தனலாபம்	87
வனசஞ்சாரம்	74	வெகுஆயுசுபலன்	88
பரதேசத்தில் மரணம்	74	பனிரெண்டாம்பாவம் தனபலன்	93
நிவாஸஸ்தலம்	74	வியாதியரியும்படி	97
ஆயுசு	75	வியாதிதோன்றும் மிடம்	98
மரணகாலம்	75	நாய்கடி	100
மரணதிக்கு	75	பாம்புகடி	100
பூரணஆயுசு	76	ஆயுதவிரணங்	100
ஒன்பதாம்பாவம் பாக்கியபல	77	ஜீவன்பலன்	101
பிதுர்பாக்கியம்	79	கேந்திரபலன்	103
குருபலன்	81	மாரகதிசை	104
தருமம்	81		



சிறப்பாயிரம்,

அகவல்.

தார்புகழுலகின் தரணியின்மீதிற்
கார்புகழ்பல்லோற் கண்டுமேகளிக்க
சித்தாஞ்சந்த ரிஷிகள்முற்காலம்,
சுத்தமாயுரைத்தச் சோதிடநூலே
கண்டுமேயுரைக்குங் கணிதவல்லோரை
கொண்டுமேயாய்ந்துக் குவலயமீது
அநுபவஜாதக ரகசியமென்னும்
மனமகிழ்நூலின் மான்மியமிதினிற்
நேசமாமிராசி பன்னிரெண்டினிலும்
பேசியநவக்கோள் பதிந்திடும் ஸ்தானமும்
நட்பாட்சியுச்சம் நீசமும்பகையும்
நுட்பமாய்க்கண்டு நுவன்றிடமேற்றும்
சாறனிலேயும் சாற்றுமுன்பார்வையும்
ஏரியவீட்டில் யிசைந்திடும் பார்வையும்
தசைவருடங்கள் தானறிந்திடவும்
திசையெனக்கிரக திக்குகள்நிலேயும்
மூலமாந்திரி கோணராசிகளும்.
சாலவேகோள்செய் சாற்றுந்தொழிலும்
ஓதுமிராசி யோக்கும் நாழிகையும்
சாதகப்பலனுஞ் சாறங்கோசாரம்
தங்கியராசி தனில்நவக்கோள்கள்
பொங்கமாம்நன்மை துன்மையாமிடமும்
கூரியலக்கினப் பாவப்பலனும்
நேரிலிரெண்டாம் பாவநேத்திரமும்
வாக்குத்தானம் வியாதியின்பலனும்
நோக்குந்தனமும் முகமுங்குடும்பமும்
மூன்றும்பாவஞ் சகோதரம்வெள்ளி
தோன்றிடுங்கேள்வி காதுடனடிமை
நான்காம்பாவம் நவில்வதுதாயார்
பாங்காங்கல்வி பூமியும்பந்து

அகவல்.

சுகமுட னுரைக்குஞ் செய்தல்வியாபாரம்
இலக்னமேயின்ன மியம்பிடக்கேளீர்
ஐந்தெனும்பாவந் தருளியபுதல்வர்
தொந்தமாமாதுலன் பிதாஞானமபுண்ணியம்
ஆறதாம்பாவ மரைவதுரோகம்
கூறதாஞ்சோரஞ் சிறைசத்ருவழக்கு
ஏழாம்பாவ மியல்களத்திரமும்
வாழதாங்காம மாரகம்வித்திரை
யெட்டதாம்பாவ மியம்பிடுமாயுள்
கெட்டவமிருத்து கருதும்வியாதி
ஒன்பதாம்பாவம் பிதாகுருதருமம்
பன்புருபாக்கியம் பிரபுத்துவங்கள்
பத்தாம்பாவம் பயின்றிடுங்கருமம்
சுத்தமாஞ்ஜீவனங் கீர்த்தியாதாரம்
பதினொறும்பாவம் பகர்ஜேஷ்டபிராதுர்
துதிபெருமிலாபந் துலங்கியயிஷ்டம்
பனிரெண்டாம்பாவம் பகர்வதுவிரையம்
தனியெனச்சயன மோகமனித்தியநோய்
பன்னியவியாதிப் பலனதுவறிக
துன்னியவியாதி தோன்றுமோரிடமும்
நாய்கடியோடு நல்லரவங்கடி
ஆயுதவிரணத் தால்வரும்வினையும்
சிவனமோடு செப்புங்கேந்திரபலன்
தாவனமாரக திசையதுவரிக
சூக்ஷமாய்க்கான ஜெகத்துள்ளோர்க்கு
சாக்ஷியாயிதனைக் கண்ணுறவென்றே
பெரியவர்சிறியவர் பேசியபலரும்
அரியவிந்நூலை யகமதுக்களிக்க
பேசும்வேளாளக் குலமெனுஞ்செஞ்சி
நேசரேகாம்பரர் நிகழ்த்தியவிதனிற்று
குற்றமற்றனையுங் கொண்டுமேபொறுத்து
சிற்றடிபோலே செய்னேமதித்து
இத்தரைமீதில் யிதைப்படிப்போர்கள்
சுத்தமாயுலகில் சுகமுடன்வாழ்க.

உ

தேவிசகாயம்.

சப்தரிஷிகள் திருவாய்மலர்ந்தருளிய

அனுபோக

ஜாதகரகசியம்

விநாயகர் துதி.

கலிவிருத்தம்.

நீதியாஞ்சத்தரிஷிகள் நிகழ்த்திய
சாதகவனுபோகந் தனைத்தொகுத்
தோதினேமுதற்காண்டம் மற்றுள்ளதை
ஈதிலோதுமிறை வனைப்போற்றியே.

நூல்.

கிரகங்களின்-நட்பு-ஆட்சி-உச்சம்-நீச்சம்-பகை-அறியும்

விருத்தம்.

1-வது, சூரியன்.

சூரியன்மேடமுச்சஞ் சொல்லருந்துலாநீசம்
வீரியவிடையும்வினை விளங்கிபகண்டுகன்னி
கூரியமகரந்தேளுங் கும்பமும்பகையதாகும்
ஏரியசிங்கமாட்சி யெனவிதித்தனர்மேலோரே.

(இ-ள்.) சூரியன் மேடராசிக்கு உச்சம், துலாத்திற்கு நீச்சமாகும், ரிஷபம்-மிதுனம்—கடகம்-கன்னி-மகரம்-விருச்சிகம்-கும்பம் இந்த ஆறுராசியையும் பகையென்றறியவும், சிங்கராசியில் ஆட்சியென்றறிவீர்கள்-எ-று- (1)

2-வது, சந்திரன்,

சந்திரன்விடையிலுச்சஞ் சார்ந்திடுந்தேளில்நீசம்
சிந்தைமானறியுமேடம் சிங்குடம்பகையதாகும்
விந்தைசேர்வீணைகன்னி விளங்கியசிலைமீன்நட்பாம்
எந்திரக்கடகமாட்சி யெனவிதித்தனர்மேலோரே

(இ-ள்.) சந்திரன் ரிஷபத்திற்கு உச்சம், விருச்சிகத்திற்கு நீச்சம், மகரம்-சிங்கம்-மேஷம்-துலாம் இவைகளுக்குப் பகையென்றறியவும், மிதுனம்-கன்னி-தனுசு-மீனம்-நட்பாகும், கடகம்- ஆட்சியாகும்-எ-று

3-வது, அங்காரகன்.

செவ்வாய்க்குமகரமுச்சம் சிறந்ததோர்கண்டுநீசம்
வெவ்வியசிலையுஞ்சிங்கம் மீன்கும்பபகையதாகும்
செவ்வியவிடையும்வீணை செட்டியுங்கன்னிநட்பாம்
மௌவ்வியமேடந்தேளும் மாட்சியதாகும்பாரே.

(இ-ள்.) செவ்வாய்க்கு மகரம் உச்சமாகும், கடகம் நீச்சமாகும், தனுசு-சிங்கம்-கும்பம்-மீனம்-பகையாகும், ரிஷபமும் - மிதுனமும்-துலாமும்-கன்னியும்-நட்பாகும், மேஷமும்-விருச்சிகமும் ஆட்சியென்றறியவும்-எ-று. (3)

4-வது, புதன்.

புதன்கன்னியுச்சமாகும் புகன்றிடும்மீனம்நீசம்
அதனுடன்சிங்கமேற ஆனதோர்பகையதாகும்
விதமுறும்வீணைமேடம் வில்லுமான்கண்டுநட்பாம்
பதமுறும்வீணைகன்னிப் பகர்ந்தனர்ஆட்சியென்றே.

(இ-ள்.) புதன் கன்னிக்கு உச்சமாகும், மீனத்திற்கு நீச்சமாகும் சிங்கத்திற்குப்பகையாகும், மேஷமும்-ரிஷபமும்-தனுசு-மகரம்-நட்பாகும், மிதுனமும்-கன்னியும்-ஆட்சியாகும்-எ-று (4)

5-வது; குரு.

குருவுமேகடகமுச்சம் கூறிடும்மகரநீசம்
வருவெனமேடந்தேளும் வகுத்திடும்பகையதாகும்
கூரிவிடைவீணைகன்னி ஆனதோர்செட்டிஜாடி
தருவென்னநட்பதாகும் தனுசுமீனாட்சியாமே.

(இ-ள்.) குருவிற்கு கடகம் உச்சமாகும், மகரம் நீச்சமாகும், மேஷமும் விருச்சிகமும் பகையாகும், சிங்கம்-கன்னி-மிதுனம்- துலாம் ரிஷபம்-நட்பாகும், தனுசும்-மீனமும்-ஆட்சியென்றறியவும்-எ-று. ()

6-வது, சுக்கிரன்.

சுக்கிரன்மீனமுச்சம் சொல்லுநுங்கன்னிநீச்சம்
சிக்கெனக்கடகந்தானும் சேரிலோபகையதாகும்
தக்கதோர்சிலேதேள்வீணை தகரமாலைஜாடிநட்பாம்
மிக்கதோர்விடைகோல்தானும் மேலெனவாட்சியாமே.

(இ-ள்) சுக்கிரன் மீனத்திற்கு வுச்சமாகும், கன்னிக்கு நீச்சமாகும், கடகத்திற்கு பகையாகும், தனுசு-மிதுனம்-மேடம்-ரிஷபம்-மகரம்-நட்பாகும், துலாவும்-ரிஷபமும்-ஆட்சியாகுமென்றறியவிம்எ-று.

7-வது, சனி.

மந்தனுக்கிரையிலுச்சம் மரிவியமேடம்நீச்சம்
வந்திடக்கடகசிங்கம் வன்னிதேள்பகையதாகும்
சித்திபவிடையும்வீணை சிலைகன்னிமீனம்நட்பபாம்
சுந்தரமகரகும்பம சூழ்ந்திடிவாட்சியாமே.

(இ-ள் சனி துலாத்திற்கு உச்சம், மேடத்திற்கு நீச்சம், கடகமும்-சிங்கமும்-விருச்சகமும்-பகையாகும், மகரமும்-கும்பமும் ஆட்சியென்றறிவீர்களாகவும்-எ-று. (7)

8-வது இராகு

அரவுதேளுச்சமாக அரையலாம்விடையால்நீசம்
மரியொடுமேடம் நண்டுவருஞ்சிங்கம்பகையதாக
அரிவைமான்சிலையுங்கும்பம் ஆனமீன்நட்பதாகும்
இருவர்சேர்மிதுனமாச்சியெனவகுத்தனர்மேலோரே.

(இ-ள்) இராகுவிற்கு விருச்சிகம் வுச்சமாகும், ரிஷபத்திற்கு-நீச்சமாகும். மேஷமும்-கடகமும்-சிங்கமும்-பகையாகும், மகரம்-தனுசு-கன்னி-மிதுனம்-மீனம்-நட்பாகும், மிதுனம் ஆட்சியென்றறியவும்

9-வது, கேது.

கேதுவும்ஜாடியுச்சம் கெடுதியாம்புலியும்நீசம்
தீதுசெய்நண்டுமேடம் தெரிந்திடும்பகையதென்று
ஓதிடும்விடையும்வீணை வுற்றதோர்நட்பதாகும்
ஆதியாம்சிலைதேள்கன்னி மீனுமான்ஆட்சியாமே.

(இ-ள்) கேதுரிஷபத்திற்கு வுச்சம் சிங்கத்திற்கு நீச்சம்-கடகமும் மேடமும்-பகையாகும்.ரிஷபமும்-மிதுனமும்-நட்பாகும், தனுசு கன்னி-மகரம்-மீனம்-ஆட்சியாகும் (9)

சார நிலையறியும் விபரம்,

——(○)——

விருத்தம்.

சூரியனுமொருதிங்களாகுமப்பா
சொல்லிகின்றசகிதானுமிரெண்டேகால்நாள்
கூறியசெவ்வாய் தனக்கொன்றரையாமாதம்
குறித்தபுந்தியோர் மாதங்குருவோருண்டாம்
வீரியமாஞ்சுக்கிரனுமாதமொன்றும்
விளங்கியமந்தனுக்கிரண்டோடரையாமாண்டு [யதாக
சீரியதோர்ருகுகேதுவருடமொன்றை பரமனுக்காடொன்றரை
தீர்க்கமுடன்ராசிநின்றுசெல்லும்பாரே.

(இ-ள்) சூரியனுக்குசாரநிலை ஒருமாதம், சந்திரனுக்கு ரெண்டே கால்நாள், செவ்வாய்க்கு மாதம் ஒன்றரை, புதனுக்கு மாதம் ஒன்று குருவிற்கு வருடம் ஒன்று, சுக்கிரனுக்கு மாதம் ஒன்று சனிக்கு வருடம் இரண்டரை இராகு கேதுகளுக்கு வருடம் ஒன்றரை யென்று அறியவும்-எ-று. (1)

சார நிலைக்கு முன்பார்வையறியும் விபரம்.

அருக்கனுமேலைவந்துநாளாகும்பாரு
ஆனதொருசசிமூன்றநாழியாகும்
பெருக்கவேசெவ்வாயுமெட்டுநாளாம்
புகனுமொருகணக்கனுமேயேழுநாளாம்
உரைக்கவேகுருவுரெண்டுமாதமாகும்
உறுதியுள்ளபுகர்யேழ்நாள்சனியார்மாதம்
மிருக்கவேஇருபாப்புமாதமூன்றும்
இதன்பார்வையெனவகுத்தார் மேலோர்தானே.

(இ-ள்) சூரியனுக்கு நாள் அஞ்சு, சந்திரனுக்கு மூன்றுநாழிகை, செவ்வாய்க்கு நாள எட்டு, புதனுக்கு நாள் ஏழு, குருவிற்கு மாதம் இரண்டு, சுக்கிரனுக்கு நாள் ஏழு, சனிக்கு மாதம் ஆறு, இராகு-கேதுவிற்கு மாதம் மூன்று இவைமுன்பார்வையென்று அறியவும்-எ-று

வீட்டின்பார்வையரியும் விபரம்.

கதிரவனுஞ்சசியுமேயேழைநோக்கும்
காணும்மரர்சேய்நாலேழெட்டென்றோது
துதியானபுதனுமேயேழைபார்க்கும்
துலங்கும்பொன்னஞ்சேழுவொன்பதாகும்

பதியானசுக்கிரனுமேழேக்கானும்
பகருமோர்காரியமூன்றஞ்சுபத்தாம்
சதியானராகுவுடன்கேதுதானும்
சாற்றுமொருமூன்றேழுபதினொன்றுமே.

(இ-ள்.) சூரியனும் சந்திரனும் பார்வை ஏழாமிடம், செவ்வாய்ப் பார்வை 4-7-8, புதனுக்கு பார்வை 7, குருவிற்குப் பார்வை 5-7-9, சுக்கிரனுக்குப்பார்வை 7, சனிக்குப்பார்வை 3-5-10, இராகு-கேதுக ளுக்குப்பார்வை 3-7-11 இவ்விதமறியவும்-எ-று. (3)

தசைவருடமறியும் விபரம்.

பகலவனுக்காறுண்டுதானென்றோது
பார்த்தறிவாய்சசிபத்துசேய்க்கேழாகும்
இகலவேபுந்தியுமேபதினேழாகும்
இறைவனீரெட்டுவெள்ளிக்கிருபதாகும்
அகலவேமுடவன்பத்தொன்பதென்னு
அரையுமொருராகுவுமேபதினெட்டாகும்
திகலுருவேகொடியோனுமேழதென்று
தமையுடன்திசைவருடந்தெரிந்திடீரே.

(இ-ள்) சூரியனுக்கு திசை வருடம் 6. சந்திரனுக்கு திசை வருடம் 10. செவ்வாய்க்கு வருடம் 7. புதனுக்கு வருடம் 17. குருவுக்கு வருடம் 16. சுக்கிரனுக்கு வருடம் 20. சனிக்கு வருடம் 19. இராகுவிற்கு வருடம் 18. கேதுவிற்கு வருடம் 7. இவ்விதமாக அறியவும்-எ-று. (4)

—(*)—

திக்கறியும் புபரம்

சூரியன்நடுதிக்காகுஞ் சுகமதிதென்கிழக்காம்
வீரியவாரல்தென்கீழ் விதுமகன்வழிகிழக்காம்
காரிமேர்க்பொன்வடக்கு கழர்புகர்கிழக்கதாகும்
சீருந்தென்மேற்குராகு கேதவன்வடகிழக்காம்.

(இ-ள்.) சூரியன்-நடுதிக்கு, சந்திரன்-தென்கிழக்கு, செவ்வாய்-தென்கிழக்கு, புதன்-வடகிழக்கு, சனி-மேற்கு. குரு-வடக்கு, சுக்கிரன் கிழக்கு, இராகு-தென்மேற்கு, கேது-வடகிழக்கி இவ்விதமாக அறியவும்-எ-று. (5)

கிரகங்களின் தொழிலறியும் விபரம்.

சூரியன்-அரசன், சந்திரன்-அரசன், அங்காரகன்-சேனாதிபதி புதன்-பிரதானி, குருமந்திரி, சுக்கிரன்-மந்திரி, சனி - குசன், இராகு-கேது-பசாசு.

	அங்காரகன்	சந்திரன்	
இராகு	மூலத்திருகோண மறியுஞ் சக்கரம்.		
சனி			சூரியன் கேது
தனுசு		சுக்கிரன்	புதன்

மீனம் சுவ	மேடம் சுவ	ரிஷபம் சுஜ	மிதுனம் ருவ
கும்பம் சுஜ	இராசிநாழிகை யறியும் சக்கரம்.		கடகம் ருஉ
மகரம் ருவ			சிங்கம் ருவ
தனுசு ருஉ	விருச்சிகம் ருவ	துலாம் ரு	கன்னி ரு

ஜாதகப்பலனறியும் விபரம்.

———(*)———

விருத்தம்.

ஜெனித்திடுமோர் குழவிகட்கு நன்மை தீமை
சீருறவேதானுரைக்கும் விபரங்கேளு
கணித்திடவே சிரவுதைய மானபோது
கண்டிடுவாய் முகூர்த்தமது வாகவேதான்
தனித்திடவே யுதையவீடுடனேயின்னம்
தானறிவாய் ஜென்மலக்கன மென்றேதான்
இனித்திடவே சசியிருந்த வீடுதானும்
இயம்புவாய் சந்த்ரலக்ன முடலென்றேதான்.

(இ-ள்) ஜெனனமாகும்போது குழவிகளுக்கு ஜாதகம் யெழுதவேண்டியக்கிரம மெவ்விதமெனில், சிரவுதையமாகும்போது அப்போது நடக்கும் நாழிகையாவது மணியாவதுக்கொண்டு ஜாதகம்யெழுத வேண்டியது உதையராசிபெதுவோ அந்தராசி உயிரென்று அறியவும் அதாவது ஜென்மலக்கினம். லக்கினத்திற்கு யெத்தனையாவது வீட்டில் சந்திரனிருந்தபோதும் அது சந்திரலக்கினமென்று உடலென்றும் அறியவும்-ஏ-று (1)

உதையமெனு மிராசிகொண்டு பெண்ணிபார்க்க
உத்தமனே யஞ்சுபத்தில் செய்வாயிற்கில்
விதியெனவே மாமனுக்குப் மாகாதப்பா
வினையாக சனியிருந்தால் குழவிக்காகா
மதியிருந்தால் மாதாவுக் காகாதென்று
மரிவியே ரவியிருந்தால் தந்தைசாவான்
ததியான சுபக்கிரகம் நோக்கில்லாமல்
தானிருக்கச் சசிக்கேழா மிடத்திற்கேளே.

(இ-ள்) உதையராசியைக்கொண்டு மற்றராசிகளை வலமாகயெண்ணிவரில் 5-10-ல் செவ்வாயிற்கில் மாமனுக் காகாதென் றறியவும், 5-10-ல் சனியிருந்தால் குழவிக்காகாது, சந்திரனிருப்பானுகில் தாயாருக்காகாது, சூரியன்யிருந்தால் தகப்பன்சாவான், ஆனல் சுபக்கிரகம் நோக்கில்லையாகில் சந்திரனுக்கு யேழாமிடப்பலப சொல்வேன் கேளும்-ஏ-று. (2)

சுங்கனுடன் முடவனுமே நிற்பானாகில்
சொல்லரிய அன்னையுமே மரணமாவாள்
அங்கனவே ரவிதனக்கு பேழாம்வீட்டில்
ஆரலொடு சனிநிற்கத் தந்தைசாவான்
பங்கமுறும் பாபக்கோள் தானுமேதான்
பனிரெண்டி லேறவுயிர் வுடலைப்பற்ற
தங்காது பிள்ளையது மாணமாகும்
தானறிய வோதுகிறே னின்னங்கேளே.

(இ-ள்) சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சுக்கிரனும் சனியும் நிற்பாராகில் தாய்மரணமாவாள், சூரியனுக்கு 7-ம்வீட்டில் செவ்வாயோடு சனிநிற்க தகப்பன்சாவான், பாபக்கிரகங்கள் 12-ஆமிடமும் உடலையும், உயிரையும் பற்றிநிற்க பிளளை மரணமாகும்-எ-று. (3)

செப்புமொரு வுதையத்திற் காறும்வீட்டில்
சூரியனும் நிற்கவே யதற்குமேழில்
தப்பிதமாய்க் காரியொடு வாரல்நிற்க
தந்தையொடு பிள்ளையுமே மரணமாகும்
அப்படியேயாறுமிடத்திற்சனியும்நிற்க
அன்னையொடு குழவியுமே மரணமாகும்
ஒப்புடனே கணிதநூர் செய்யும்வாறை
ஓதுகிறே னின்னமுந்தா னுகந்துகேளே.

(இ-ள்) உதையராசிக்கு 6 - ம் வீட்டில் சூரியன்நிற்க அவர்க்கு 7-ல் சனியும் செவ்வாயும்நிற்க தகப்பனோடு பிள்ளையும் மரணமாகும் 6-மிடத்தில் சந்திரன்நிற்ச தாயாரோடு பிள்ளைமரணமாகும்-எ-று.

உன்னிதஞ்சே ருதையத்தில் மந்தன்நிற்க
ஓதுமொருநாலதிலே செவ்வாய்நிற்க
நன்னயஞ்சேர் கதிரோனு மேழில்நிற்க
சுற்கிரகம் நோக்கில்லா திருக்கில்தகனும்
அன்னிதமா யன்றைப் பகலேதானும்
அருங்குழவி மரணமென வரிந்துகொள்ளு
சொன்னபடி ராகுகேது தையந்தன்னில்
சூழ்ந்திடவே யன்றிரவு மாணமாமே.

(இ-ள்) உதையராசியில் சந்திரனிற்க, அந்தக்காலில செவ்வாய்நிற்க, சூரியன் 7-ல் நிற்க. சுபக்கிரகம் நோக்கில்லாதிருக்க அன்றைப்

பகலே குழவிமரணமாகுமென்றறியவும். உதையத்தில் ராகுகேதுநி ற்கில் அன்றைய ராத்திரியே குழவிமரணமாகுமென்றறியவும்-எ-று.

ஜென்மமுடன் சந்திரலக்கினத்திற்றானே
 சேர்ந்துமே பாபக்கோள் வந்துநிற்க
நன்மைதருஞ் சுபக்கோளும் பார்த்துநிற்க
 நஷ்டமே னப்பிள்ளையது மரணமாகும்
தன்மையிலா அமரபக்ஷ சசிதனக்கு
 தான்பார்த்து முன்பின்னும் பாபர்நிற்க
அன்னையோடு குழவிபோ தமாதிக்கோள்
 அணுகிநிற்க கிரணமுண்டேல் அழுயுஞ்சேயே.

(இ-ள்) ஜென்மலக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும் பாபக்கிரக ங்கள்வந்துநிற்கில் அவர்களை சுபக்கிரகங்கள்பார்க்க பிள்ளைமரணமா கும். அமரபக்ஷத்து சந்திரனுக்கு முன்னும் பின்னுமாக பாபக்கிரக ம்நிற்க தாயாரோடு குழவிமரணமாகும். தாமாதிப்பஞ் சக்கிரகஞ் சூழ கிரணந்தீண்டில் ஜெனிக்கில் குழவியாதுமரணமாகுமென்று அறியவும்-எ-று. (6)

பூசமொடு சித்திரை பூராடநாளில்
 புகழ்சோம நிற்கமுதற் கால்ஜெனிக்கில்
தோஷமெனப் பிதாவவனு மரணமாவான்
 தொடுத்தரெண்டாங்காலன்னைசாவாள்மற்றும்
மோசமடாமூன்றாங்கால்மரணம்பிள்ளை
 மொழியுமொருநான்காங்கால்மாமன்சாவான்
வர்சமுடன்வொன்பதுபதினொன்றிற்றான்
 வந்துநிற்கச்சேய்சனியும்வழுத்தக்கேளே.

(இ-ள்) பூசநக்ஷத்திரம் சித்திரைநக்ஷத்திரம் பூராடநக்ஷத்திரம் இ ந்தநாளில் சந்திரனிற்க, முதற்காலில்ஜெனிக்கில் தகப்பன்மரணமா வான். இரண்டாங்காலாகில் தாயார்மரணமாவாள். மூன்றுங்காலாகி ல் குழவிசாகும். நாலாங்காலாகில் மாமன்மரணமாவான். 9 - 11 - ல் செவ்வாய்-சனி நிற்கில் பலன்கேளுங்-எ-று. (7)

கேட்டிடுவாய்வொன்பதிமேலபாம்புநிற்க
　கெடுதியைக்கேளிம்மூன்றுக்கிரகத்தாலே
நாட்டமுளபிதாவலனுமாணமாவான்
　நவிலுமின்னமேழெட்டில்சனிதானிற்க
கூட்டமுளகுழவியதுமர்ணமாகும்
　குணமானசுபக்கோள்நோக்கில்லாவிட்டால்
வாட்டிடுமேயொருபலனுமில்லையில்லை
　வரையுகிறேனின்னமுங்கேள்முன்னோர்வாக்கே.

(இ-ள்) 9-தில் பாம்புநிற்க இந்த மூன்றுகிரகமும்செய்யும் கெடுதியாதெனில், தகப்பன்மரணமாவான். 7 - 8 சனிநிற்கில் குழவிமரணமாகும் சுபக்கிருகங்களநோக்கில்லாதிருந்தால்ஒருபலனுமில்லை-எ-று.

நிலமகனுமூன்றினிலேவந்துநிற்க
　நேராகவுடன்பிறந்தார்மரணமாவார்
கலகமேழாமிடத்திலாரல்வெள்ளி
　காரியவனிற்கபிள்ளைமரணமாகும்
இலகசசியேழில்நிற்கவன்னைசாவாள்
　இரவியுமேயேழில்நிற்கக்குழவிசாகும்
நலமுறாநண்டுதிக்கமூன்றுநிற்பாபர்
　நற்கோள்பனிரெண்டுதிக்கமரணம்பிள்ளை.

(இ-ள்) செவ்வாய் லக்கினத்திற்கு 3-ஆமிடம்நிற்க உடன்பிறந்தார் ரணமாவார், 7-ஆமிடத்தில் செவ்வாயும்-சுக்கிரனும்-சனியும்நிற்கில், பிள்ளைமரணமாகும். 7-மிடத்தில் சந்திரன்நிற்கில் தாயார்மரணமாவாள் 7-ஆமிடம் சூரியன்நிற்க ஜெனனமானப் பிள்ளைமரணமாகும்,கடகலக்கினமாக 3-6-ல் பாபக்கிரகங்கள்நிற்க 12-ஆமிடம் சுபக்கிரகங்கள்நிற்க குழவிமரணமாகும்-எ-று. (9)

உதையத்திற்காறேழுபனிரெண்டெட்டில்
　உறுதியுள்ளசிரணைசசிதாநிற்கச்
சதியாகவவருடனேபாபர்சேர
　சாற்றுமொருசுபக்கோள்நோக்கில்லாதாக
மதியென்றஜீரணசந்திரனுக்குந்தான்
　மரிவியேநாலுமெட்டானவீட்டில்
விதியாகப்பாபக்கோள்நிற்குமாகில்
　மேவியதோர்குழவியுந்தான்மரணமாமே.

(இ-ள்) உதையராசிக்கு 6-7-8-12-ல் ஜீரணசந்திரன்நிற்க அவருடன் பாபக்கிரகங்கள்சேரசுபக்கிரகங்கள் பார்வையில்லாதிருக்க சந்திரனுக்கு 4-8-ஆமிடம் பாபக்கிரகங்கள் நிற்குமாகில் குழவிமரணமாகும்-எ-று. (10)

ஆதித்தன்சந்திரனங்கங்கூட
அதுவுதிக்கவடுத்தப்பனிரெண்டில்ருனும்
நீதியிலாப்பாபர்நிற்கரவியஸ்தமாக
நிகழ்த்துமொருப்பிரையதுவுமுதையமாக
சோதிமதிதனக் குப்பன்னிரண்டிலேதான்
சொல்லுமொருபாபர்நிற்கச்சுபர்நோக்கில்லா
மேதினியிலேயுதித்தபிள்ளைசாகும்
விளம்பியதோர்முன்னோர்கள்வாக்கிதாமே.

3909

(இ-ள்) சூரியன் சந்திரலக்கினஞ்சேர அதுவே லக்கினமாக 12-ஆமிடத்தில் பாபக்கிரகங்கள்நிற்க சூரியன் அஸ்தமாக சந்திரன் உதையமாகசந்திரனுக்கு12-ஆமிடத்தில் பாபக்கிரகங்கள்நிற்க சுபக்கிரகம் பார்வையில்லாதிருக்க குழவிமரணமாகும்-எ-று (11)

சுத்தமுளவுதையத்திற்கும்பனிரெண்டெட்டில்
சூழ்ந்துமேசந்திராதித்தர்நிற்ச
பத்தியதோர்பிள்ளைக்குரெண்டுகண்போம்
பார்க்கவேயொருவர்நின்றாலொருகண்போகும்
குற்றமுடன்பனிரெண்டாமிடத்தோர்தன்னை
கூடியேசனிசெவ்வாய்ப்பார்ப்பாராகில்
முற்றுமேயிருகண்ணுங்கெடுதியாகும்
மொழிந்திட்டமுன்னோர்கள்வாக்கிதாமே.

(இ-ள்) உதையாசிக்குப் 12-8-ல் சூரியன் சந்திரன்நிற்க குழவிக்கு இரண்டு கண்போகும். ஒருவர்நிற்கில் ஒருகண்போகும். 12-ஆமிடத்தோர்களை சனி-செவ்வாய் பார்ப்பாராகில் இரண்டுகண்ணும்போகும்-எ-று. (12)

ஜென்மமுடன் சந்திரனூர்லக்கினத்தை
செழுங்கிரகந்தானதுவேநோக்காதாகி
தன்மையுளசகியோடுபாபர்நிற்க
தான்பிறந்தோன்பரசாதகனேயாவான்

அன்னியராம்சோரபத்தாயின்றனென்று
அறியவேசசிபோடுரவிதானிற்கில்
நன்னயமாம்நால்ஜாதிக்கிழோனாகும்
நவிலுமதிலாரல்நிற்கப்புலையனாமே.

(இ-ள்) ஜென்மலக்கினத்தையும், சந்திரலக்கினத்தையும் சுபக்கிரகம் பார்க்காதிருக்க, சந்திரனோடு பாபக்கிரகங்கள்நிற்க, அப்போது ஜெனித்தகுழவி பரசாதகனாவான். சோரபக்தாயின்றனென்று அறியவேண்டில் சூரியனோடு சந்திரன்நிற்க நாலுஜாதியாருக்கும் கீழாகும் அவரோடு அங்காரகன்நிற்கில் புலையனென்று அறியவும்-எ-று.

சிக்கெனவேசுபக்கிரகநோக்கேயற்று
செழுமையுளசந்திரனைச்சனியேநோக்க
பக்குவமாய்ச்சசிசேயும்மேடனிற்க
பாலனவன்பிறந்திட்டாலிறந்தேயுன்பான்
மிக்கதொருஜென்மலக்கினத்தினோடே
மேன்மையுளசந்திரலக்கினத்தைத்தானும்
நிற்கவேசுபக்கிரகம்நோக்கேயற்று
நோரகமுடனவன்முழுநோக்கேநோக்க.

(இ-ள்) சுபக்கிரகம் நோக்கில்லாமல் சந்திரலக்கினத்தை சனிநோக்க சந்திரனும் செவ்வாயும் மேடராசியில்நிற்க அப்போதுஜெனித்திடும் குழவி இரந்துண்பான். ஜென்மலக்கினத்துடன சந்திரலக்கினத்தையும் சுபக்கிரகம் நோக்காதிருக்க சனி முழுபார்வை பார்க்க-எ-று.

விந்தையுடனதில்பிறந்தபிள்ளைதானும்
விளம்பிடுவாய்சீர்கேடனாவனென்றே
நிந்தையுளத்தீக்காவுறையிற்றானும்
நிகழ்த்துமொருஜென்மசனிகண்டந்தன்னில்
சந்திரந்தானிற்கவெபிறந்தோன்தானும்
சஞ்சலமாய்சிறைபுகுவானென்றேசொல்லு
பந்தமுறஞ்சாதகத்தின்பலந்தானின்னம்
பகருகிறேன்செவிகொடுத்துப்பரிந்துகேளே.

(இ-ள்) இப்படி பார்வையுற்றுப் பிறந்தபிள்ளை சீர்கேடனாவான். செவ்வாயுறையில் சனிகண்டத்தில் சந்திரநிற்கப் பிறந்தபிள்ளை சிறைபடுகுவான்யென்று அறியவும்-எ-று.

சனியவனுமுதையாகிதன்னில்நிற்க
    சார்ந்தமேயதிற்கேழில்பாம்புநிற்க
இனிதானக்கன்னியிலேவெள்ளிநிற்க
    இயம்புமொருவமரபக்ஷசசிதன்காலில்
வினையானபாம்பதுவுங்கூடநிற்க
    வந்துதித்தப்பாலனுக்குவரையக்கேளு
கனியானக்கையுடனேகாலுந்தானும்
    கண்டிதமாய்வெட்டுண்டுப்போகும்பாரே.

(இ-ள்). சனி உதையராசியில்நிற்க அவருக்கேழில் பாம்புநிற்ககன்னியில் சுக்கிரன்நிற்க அமரபக்ஷத்து சந்திரன்காலில் பாம்பு அங்கத்தில்நிற்க அப்போது சனித்தபிள்ளைக்கு கையுங்காலும் வெட்டுண்டுப்போகும்-எ-று. (16)

செவ்வாயின்அங்கசத்தேயிரவிநிற்க
    சீராகத்தானுமதுவுதையமாக
ஒளவியமாய்தேய்ந்தமைதின்றசந்திரன்
    அவனோடுபாம்பதுவுமொருகாலேரில்
ஓவ்வியேயப்பொழுதுவுதித்தபாலன்
    உடலதுவும்பிளப்புண்ணுமறிந்துகொள்ளு
இவ்விதமாய்ஜாதகற்குப்பலனைச்சொல்லி
    இப்புவியில்கீர்த்திபெறயின்னங்கேளே.

(இ-ள்) அங்காரகன் அங்கசத்தில் சூரியன்நிற்க அதுவே யுதையமாக தேய்ப்பிறைசந்திரன் தன்னோடு பாம்பும் ஒருகாலேற அப்போது ஜெனித்தப்பாலன் உடல்பிளப்புண்டுப்போகும்-எ-று. (17)

ஆனதொருவமரபக்ஷத்தம்மாவாசை
    அருங்கட்கஞ்சந்திரலக்கினந்தாநிற்க
ஊனமுள்ள யிரவியவனோடுகூட
    உள்ளதொருபாம்புநிற்கச்சுன்றுதையமாக
தானெனவேபிறந்ததொருக்குழவிதானும்
    தப்பாமல்வுடலதுவேபிளப்பேயுண்ணும்
நானெனவேகேதுராகுநோக்கப்பெற்று
    நவிலுமொருஜீரலசந்திரனுக்கேதான்.

(இ-ள்) அமரபக்ஷத்து அமாவாசையில் கடகலக்கினமாகி அதில் சந்திரன்நிற்க அவரோடு சூரியன்கூட பார்புநிற்க சனியுதையமாக பிறந்தபிள்ளை உடல்பிளப்புண்டுப்போகும்—இராகு-கேதுகள் நோக்கப்பெற்று ஜீரணசந்திரனுக்கு சொல்லக்கேளும்-எ-று. (18)

உடலதுவேசிலவாகப்பிறந்தோன்தானும்
உற்றதொருவன் தலையுமறுப்பேயுண்ணும்
தடையின்றிமேடவிருக்ஷகத்திலேதான்
தானெனவேசெவ்வாயும் வந்துநிற்க
முடவனுமேயங்கனவேயுதையமாக
மூன்றிடத்தில்புதனவனும்வந்துநிற்க
அடவாகத்தான்பிறந்தபாலன்தானும்
ஆகுமவன்குளிர்பெறுவானென்றுசொல்லே.

(இ-ள்) உடல் சிலவாகப் பிறந்தபிள்ளை தலையறுப்புண்டுப்போகும் மேஷ விருக்ஷகத்தில் அங்காரகன்வந்துநிற்க சனியுதையமாக 3-ஆமிடத்தில் புதன்நிற்க பிறந்தபிள்ளை குளிர்ந்துபோகும்-எ-று. (19)

ஆதித்தன்முதலானபேழுகோளும்
அமர்ந்துமேதானிருக்கவதிலேயாறு
சோதியாய்தன் தன்நன் வுச்சத்துநிற்க
சுத்தமுடன்சிங்கமேயுதையமாக
நீதியுளபொன்னவனும் நிற்கத்தானும்
நிகழ்துமொருவைர்தக்கோளுச்சமாக
ஓதியயிவ்வாறுகக்கிரகம்நிற்க
உதையமதுப்பொன்னவனுமாகயின்னம்.

(இ-ள்) சூரியனோடு முதலாய் 6-கிரகங்களும் அமர்ந்திருக்க அதில் 6-கோள் தன்தன் உச்சத்தினிற்க சிம்மராசி யுதையமாக அதில் வியாழன்நிற்க 5-கோள் உச்சமாக இவ்விதமாக கிரகங்கள்நின்று குருவு உதயமாக கேளும்-எ-று. 20

நாலுகோள்தன்தன் னுச்சத்துநிற்க
நன்றாகக்கும்பத்திற்சொல்லக்கேளு
மேலானப்புகர்தானுமுதையமாக
மைந்தனவன் வந்துதிக்கப்பலனேகேளு

சாலவேயரசனுக்குபரசனுவான்
 சாற்றமிக்தத்திரைகடல்சூழுலகமெங்கும்
ஏலவேயொருகுடைகீழாள்வனென்று
 இயம்பியமுன்னோர்வாக்குஇதுவென்றேமே.

(இ-ள்) 4-கோள் உச்சத்தில்நிற்க கும்பத்தில் சுக்கிரன் உதையமாக பிறந்தபிள்ளை அரசனுகும்-எ-று. 21

நண்டுதனில்பூரணமாஞ்சசிதாநிற்க
 நாட்டமுடன்ஆறுகோள்தன்னைநோக்க
கண்டிடுவாய்ரிஷபமதுவுதையமாக
 கலையவன்தானுதிக்கபின்னங்கேளு
விண்டதொருப்பாபக்கோளுச்சமாக
 விளங்கியமற்றவைக்கிரகமெல்லாம்
அண்டியதோர்நட்புடனேயுச்சமாக
 அவரவர்கள்நின்றிடவேயுதித்திட்டானும்.

(இ-ள்) கடகத்தில் பூரணசந்திரன்நிற்க 6-கோள் பார்க்க ரிஷபம் உதைமாக பிறக்கிலும் பாபக்கோள் உச்சமாக நிற்றக்கிரகங்க நட்பு உச்சமாகநிற்கப்பிறந்தானும்-எ-று. (22)

கன்னிதனில்புந்தியவன்வந்துநிற்க
 கருத்துடனேமீனமதத்தில்வியாழன்நிற்க
உன்னிதமாம்தனுசுதனில்மயாழன்நிற்க
 உற்றதொருமற்றக்கோளெல்லாந்தானும்
தன்னிகராமவரவர்கள்ஸ்தானந்தன்னில்
 தானிருக்கநட்புடனேயாக்ஷியாகி
சன்னல்மொழிமாதேகேள்பிறந்தபிள்ளை
 கடல்சூழுமுலகாளுமரசனுமே.

(இ-ள்.) கன்னியில் புதன்நிற்க மீனத்தில் சுக்கிரன்நிற்க, தனுசில் வியாழன்நிற்க மற்றக்கோள்கள் அவரவர் ஸ்தானத்தில் நட்புடன் ஆக்ஷியாகியிருக்க பிறந்தபிள்ளை அரசனுவான்-எ-று. (23)

கடகத்தில்வியாழனுமேயுதையமாக
 கதிரோனுமேடமுறவிடைக்கேழ்தன்னில்

அடவாகப்புகர்புந்தியதிலேநிற்க
அன்பாகப்பிறந்தானுமரசனுவான்
விடையதினிற்சசியுறுலகதிரோன்சிங்கம்
வியாழன்வில்லுறப்புகருமுதையமாக
தடையதிலேவியாழனங்கிசத்திலேதான்
தான்குழுவியுதித்தானுமின்னங்கேளு.

(இ-ள்.) கடகத்தில் வியாழன் உதையமாக சூரியன் ரிஷபத்தில் நிற்க சுக்கிரனும் புகனும் அதில்நிற்க பிறந்தபிள்ளை அரசனும். ரிஷபத்தில் சந்திரன்யேற சிங்கத்தில் சூரியன்யேற வியாழன் தனுசில் நிற்க சுக்கிரன் உதயமாக குருவங்கிசத்தில் பிரக்கில்கேளும்-எ-று.

சந்திரனுக்காறதனிற்புந்திநிற்க
சாற்றுமேழாமிடத்தில்வியாழம்நிற்க
விந்தையுளயெட்டதனிற்புகருநிற்க
விளங்கிடவேசாதகமானோன்தான்பூமிற்
பந்தமுறும்சத்துருவைஜெயங்கள்செய்து
பாரெங்குமோர்குடைக்கீழாள்வானென்று
சிந்தைமகிழ்ந்தேயுரைத்தார்முன்னோர்தானும்
ஜெகத்திலுள்ளமானிடற்குவேறுமென்றே.

(இ-ள்.) சந்திரனுக்கு 6-ஆமிடத்தில் புதன்நிற்க, 7-ஆமிடத்தில் குருநிற்க, 8-ஆமிடத்தில் புதன்நிற்க பிறந்தவன் சத்துருக்களை ஜெயஞ்செய்து இராஜ்ஜியமாள்வான்-எ-று. (25)

சனிமகரம்சேய்மேடஞ்சசிதான்கண்டு
சார்ந்திடவேவெள்ளிநிரைசிலேயிற்பொன்னும்
புனிதமுடன்ரவிதானும்புலியிற்நிற்க
புந்தியுமேவீணையுறப்புகலக்கேளும்
இனிதானசமமுடவனுச்சம்நிற்க
இரவிபுந்திஜென்மத்திற்காரில்நிற்க
கனியதுபோல்புகர்பொன்னுமாகூியாக
கடல்சூழுமுலகாளுந்தலைவானமே.

(இ-ள்.) சனி மகரத்தில்நிற்க, அங்காரகன் மேஷத்தில்நிற்க, சந்திரன் கடகத்திலநிற்க, சுக்கிரன் துலாத்திலநிற்க, தனுசில் குருநிற்க

சூரியன்-சிங்கத்தில்நிற்க, புதன்-ரிஷபமோ, சந்திரனும்-சனியும்-உச்சமாக, சூரியனும்-புதனும்-ஜென்மத்திற்கு 6-ஆமிடம்நிற்க, சுக்கிரனும்-குருவும் ஆக்ஷியாக கடல்சூழுலகாளும் அரசனவான்—எ-று ()

வெள்ளிதனிடு மதிகுருவுஞ்சிலையில்நிற்க
விருச்சிகத்தில்சேய்நிற்சக்கன்னிதன்னில்
தெள்ளுமணிபோள்புந்தியுதையமாக
தான்பிறந்தபாலனுமேயுலகையாள்வான்
கள்ளமிலாரவிமதியுமுச்சமாகி
காணவேயவருதையமாகயின்னம்
விள்ளபுந்திவினையிற்றேள்சேசுன்ஜாடி
வியாழன்நண்டேறவந்தோனரசனுமே.

(இ-ள்) சுக்கிரன்-ரிஷபத்தில்நிற்க, குருவும் சந்திரனும் - தனுசில் நிற்க, செவ்வாய்-விருச்சிகத்தில்நிற்க, கன்னியில்-புதன் உதையமாக பிறந்தபாலன் உலகமாள்வான். சூரியனும்-சந்திரனும் உச்சமாகி, அவர்களே உதையமாக, புதன்-மிதுனம்நிற்க, செவ்வாய்-கடகத்தில்நிற்க, சனி-கும்பத்தில்நிற்க, குருவுகடகமேற பிறந்தபாலன் அரசனுவான்-எ-று. (27)

மேடரவிசிலைபொன்னுமாகநிற்க
மருவியசந்திரனுக்கேழாம்வீட்டில்
நீடாகபுகர்பார்த்துநில்லாட்டானும்
நெருங்கியொருக்கால்சேரப்பிறந்தோன்தானும்
தாடாண்மையுடன்பொருமைவலுமையோடு
தனக்கீர்த்திஈகையுடனின்னங்கேளு
கோடாகநவரத்தினமுடையோனுகி
குவலயத்தில்குபேரனைப்போல்வாழ்வானுமே.

(இ-ள்) மேஷத்தில்-சூரியன்நிற்க, தனுசில்-குருநிற்க, சந்திரனுக்கு 7-ஆமிடத்தில் சுக்கிரன் பார்வையில்லாவிட்டானும், ஒருகாலில் சேர்ந்திருக்க பிறந்தபிள்ளை ஆண்மையோடும், பொருமையும்-வலுமையும்-தனமும்-ஈகையும்-நவரத்தினமுடையவனுப் பூலோககுபேரனெனவாழ்வான்-எ-று. (28)

சந்திரனும்விடைதனிலேநிற்கக்கேளு
சார்ந்துயேழாமிடத்துவியாழன்நோக்க
அந்தமுளபொன்முதற்நாலிற்பிறந்தோனின்னம்
அவருதையமாகசேய்மகரமநிற்க
சுந்தரமாம்புகர்அங்குசத்துதித்தோன்
சூழ்ந்துபொன்னிரைமதியுங்கூடிநிற்க
புந்திகன்னிநிற்கவெள்ளியுதையமாகப்
பிறந்தவனுங்கல்விக்குவரசனாவான்

(இ-ள்) சந்திரன்-ரிஷபத்தில்நிற்க, 7-ஆமிடத்து வியாழன்நோக்க-வியாழன் முதற்காலில் பிறந்தோனும், குருவுதையமாக, செவ்வாய், மகரத்தில்நிற்க, சுக்கிரன்-அங்குசத்தில் உதித்தபாலனும்; குருவும்-சந்திரனும்-துலாராசியில் கூடிநிற்க, புதன்-கன்னியில்நிற்க, சுக்கிரன் உதையமாக பிறந்தவன் கல்விக்கரசனும்-எ-று. (29)

சுக்கிரனுமீனமதிற்தனிலேநிற்க
சூழ்ந்துமேபொன்னவனுமுதையமாக
சிக்கியேதீகோள்வளர்மதியைநோக்க
ஜெனித்ததொருபாலனவனசீமானாகும்
சிக்கினவேபுகர்பொன்னோக்கத்திலாதல்
சனியுதையமாகவேபிறந்தோன்தானும்
மிக்கவேதனவானாய்வாழ்வானப்பா
மேதினியிலொருவருக்குமொன்றீயானே.

(இ-ள்) சுக்கிரன்-மீனத்தில்நிற்க, குரு உதையமாக, அங்காரகன் சந்திரனைநோக்க, பிறந்தபாலன் சீமானாவான். சுக்கிரன்-குருவு இவர்கள்நோக்கத்தில் சனியுதையமாகப்பிறந்தவன் மிக்கதனவானாகவாழ்வான். ஆனால், ஒருவருக்கும் உபகாரம் செய்யமாட்டான்-எ-று.

வளர்மதிக்குமுன்பின்னும்நற்கோள்நிற்க
வந்துதித்தோன்சாமளவும்செல்வனாகும்
தளராமல்அம்மதிக்குமுன்னேதானும்
தானிற்கப்பாலியத்தில்ஸ்ரீயுண்டாகும்
வளர்மதிக்குப்பின்னிற்கவிர்த்தாப்பியத்தில்
வந்துதவும்அவன்தனக்கேஸ்ரீதானப்பா
வளர்சந்திரலக்கனத்தைசுபர்கள்பற்றி
உச்சக்கோள்நோக்குதித்தோனரசியாமே.

(இ-ள்) சந்திரனுக்கு முன்னும் பின்னும் நற்கோள்நிற்க, பிறந்த பிள்ளை தன் ஆயுசுபரியந்தம் செல்வனாகயிருப்பான். சந்திரனுக்குமுன்னிருக்க, பாலியத்தில் ஸ்ரீயுண்டாகும். சந்திரனுக்கு பின்னிருக்க, விர்த்தாபியத்தில் ஸ்ரீயுண்டாகும். சந்திரலக்கினத்தை சுபர்கள்பற்றி உச்சக்கோள்நோக்க உதித்தோர் அரசியாவான்-எ-று. (31)

பந்தியுமேயுதையமாகசசிக்குயேழில்
பொன்னிற்கப்பிறந்தோன்சேனாதியாகும்
விந்தையுடனேபுகர்பொன்னுங்கூட
விளங்குமுடனுயிருக்கஞ்சாமிடத்தில்
தொந்தமுடன்வியாழம்புகர்கூடிநிற்க
துலங்கவேபுந்தியுமேயுதையமாக
வந்துதித்தப்பாலனேயேவரசர்போற்ற
வாணியைப்போல்கல்விவானாவானுமே

(இ-ள்) புதன் உதையமாக, சந்திரனுக்கு 7-ஆமிடத்தில்குருநிற்க பிறந்தபிள்ளை சேனாதிபதியாகுவான். சுக்கிரனும்-குருவுங்கூட உயிருடல் இவைகளுக்கு 5-ஆமிடத்தில் குருவும் சுக்கிரனும் கூடிநிற்க, 5-மிடத்தில் புதன் உதையமாக பிறந்தபிள்ளை அரசர்கள்போற்ற கல்விவானாயிருப்பான்-எ-று. (32)

கலிவிருத்தம்.

பொன்னுடன்புகர்புந்தியும்நோக்கிட
ஜென்மமானதோர்செல்வன்தனக்குமே
வன்மமேபாபர்செய்யுந்தன்மைள்
வாதித்தனேக்கண்டபனிபோல்பரக்குமே.

(இ-ள்) குருவும்-சுக்கிரனும்-புதனும்நோக்க, ஜெனனமானப்பிள்ளை பாபக்கிரகங்கள்செய்யும் கெடுதியெல்லாம் சூரியனேக்கண்ட பனிபோல்பறக்கும்-எ-று. (33)

கோசாரப்பலனறியும் விபரம்.

கலிவிருத்தம்.

(சூரியன்.)

ஆறுபத்துப்பதினொன்றுமூன்றினில்
சூரியனவன் றுலங்கியேநின்றிடில்
வீரியமானநற்பலனதைத்தருகுவான்
காரியம்யாவுமேகையதுக்கூடிடும்.

(இ-ள்) சூரியன் 6-10-11-3 இவ்விடங்களில் இருக்கில், நற்பலனைத்தருவதுமன்றி சகலகாரியமும் கைகூடுதலுண்டாம்-எ-று. (1)

(சந்திரன்.)

ஒன்றுமூன்றேழுபத்துப்பதினொன்றில்
நின்றிடச்சசிநல்லப்பலன்தரும்
கன்றுகாலிநற்கனகமும்வந்திடும்
சென்றபோர்பொருள்சேருமென்றறிகுவீர்.

(இ-ள்) சந்திரன் 1-3-7-10-11 இவ்விடங்களில் நிற்கில், நற்பலனைத்தருவதுமன்றி மாடுகன்றும்வரும், திரவியஞ்சேரும், போனபொருள்கிடைக்கும், திரேகசவுக்கியமுண்டாம்-எ-று. (2)

(அங்காரகன்)

காணமூன்றந்தாரேழுவொன்பது
பூணவேபதினொன்றுடன்பனிரெண்டில்
வேணவேவரவெகுபலன்தருகுவார்
நாணமின்றியேநாட்டினில்வாழ்வரே.

(இ-ள்) அங்காரகன் 3-5-6-7-9-11-12 இவ்விடங்களி லிருக்கில், நற்பலனைத்தருவதுமன்றி யாவரும்புகழவாழ்குவார்-எ-று. (3)

(புதன்.)

விந்தையாயொன்றரெண்டுமூன்றைந்தினில்
தொந்தநவம்பத்துப்பதினொன்றுபன்னெண்டில்
அந்தமாயவரன்புடன்நின்றிடப்
பந்தமகற்றிநற்பலனதுதருகுமே.

(இ-ள்-) புதன் 1-2-3-5-9-10-11-12 இவ்விடங்களில் நிற்கில், மனவியாகூலம்விலகி நற்பலனைத்தருவார்-எ-று. (4)

(வியாழன்)

இரண்டுஐந்துயேழ்வொன்பதுபதினொன்றில்
கண்டிடச்குருகருணையாய்நின்றிடில்
விண்டிடும்பொருள்வேலைபலன்தரும்
மண்டலத்தோர்கள்மகிழுடன்போற்றமே.

(இ-ள்) வியாழன் 2-5-7-9-11 இவ்விடங்களில் நிற்கில், பொருள் சேரும், புகழுண்டாகும், நல்லப்பிரபுக்கள் உதவியுண்டாகும்-எ-று.

சுக்கிரன்.)

பார்க்கவனென்றுரெண்டுமூன்றுநாலுடன்
ஏற்கபதினொறேழஞ்சில்நவம்நிற்க
தீர்க்கமானநற்பலனைத்தருவரும்
பூர்க்கவேபுகவ்பெருகவெண்ணுளுமே.

(இ-ள்) சுக்கிரன் 1-2-3-4-7-5-10-11 இவ்விடங்களில் நிற்கில், தீர்க்கமாக நல்லப்பலனைத்தருவார் புகழுண்டாகும்-எ-று. (6)

(சனி.)

ஒன்றுமூன்றுருவொன்பதஞ்சிலேழுடன்
நின்றிடப்பந்துப்பதினொன்றுபன்னெண்டில்
வென்றிடவேவெகுவெற்றியுண்டாகிடும்
நன்றெனநிகழ்யாவும்பலிக்குமே

(இ-ள்) சனி 1-3-6-5-7-9-10-11-12 இவ்விடங்களில் நிற்க, வெள்ளியுண்டாகும், தனதான்யங்கிடைக்கும்-எ-று, (7)

(இராகு-கேது.)

விள்ளுமொன்றுரெண்டுமூன்றுநடன்
உள்ளதோரேழுபதினொன்றுபன்னெண்டில்
கள்ளமிலாமலேவந்தவர்நின்றிட
தெள்மணிப்போல்நற்பலனதுதருவரே.

(இ-ள்.) இராகு-கேது 1-3-2-6-7-11-12 இவ்விடங்களில்வந்துநிற்க, நற்பலனைத்தருகுவார் நன்மையுண்டாம்-எ-று. (8)

—— (*) ——

மேற்படி கிரகங்கள்

கெடுதியிடமறியும் விபரம்.

——(*)——

வேறு - விருத்தம்.

சூரியன்.

நன்றாகஇராசிதானறிந்துக்கொண்டு
இலக்கனத்தையென்னிப்பார்க்கும்போது
ஒன்றைந்துநாலேழுமெட்டுதன்னில்
உதவாதசூரியருமிருப்பாராகில்
நின்றநிலைவிபரீதம்விளையுமப்பா
நிச்சயமாம்பழிமேயாடுவியாதியுண்டாம்
கன்றநோய்க்கலகமுடனில்லம்விட்டு
கலங்கிமெய்பரிதேசாந்திரம்போவார்தாமே.

(இ-ள்) சூரியன் கோசாரராசிக்கு 1-5-2-7-8 இவ்விடங்களில்நிற்க விபரீதமான கெடுதிநேரும். வியாதிமேயாடு கலகமுண்டாகும். கன்று நோய்க்காணும். அபவாதமானவழிநேர்ந்து வீட்டைவிட்டு ஓட்டும். தேசாந்திரப்போக்குமுண்டாமென்றறியவும்-எ-று. (1)

சந்திரன்.

சந்திரன்கெடுதியிடஞ்சாற்றக்கேளும்
சஞ்சலமாமிரண்டுநான்கைந்துமெட்டும்
பந்தமாயவர்தங்கிநிற்பாராகில்
பலன்மாறிகைப்பொருளும்விரையமாகும்
மந்தரவாதிவாய்மூடிநினைப்போலும்
மனவருத்தபாவமுடனின்றங்கேளு
சிந்தைதனில்நினைத்ததுவும்பலித்திடாது
செய்தொழிலும்சபலமதாயாகும்பாரே.

(இ-ள்.) சந்திரன் 2-4-5-8 இவ்விடங்களில் நின்றால், பலன்மாறும். கைப்பொருள்விரையமாகும் வாய்ப்பேச்சுசொல்லாது பந்தனமாகும். மனவியாக்கூலமுண்டாகும். செய்யுந்தொழில் சபலமாகும் நினைத்தகாரியமுடியாது-எ-று. (2)

அங்காரகன்.

செவ்வாயால்துன்பமென்றவீட்டையானும்
செப்புகிறேன்கவனமதாய்ச்சீராய்க்கேளு
ஒவ்வாதுவொன்றிரண்டுநாலுமெட்டோ
டுத்தமனேபத்ததுவும்வுதவாதப்பா.

இவ்வாறுகிரகமுள்ளோன்வாழ்க்கைதவனே
இபம்புதற்குவொருநாவல்முடியாகப்பா
அவ்வியமாய்ப்பிணியோடுஅலைச்சல்பட்டு
ஆராததுயர்வருமென்றுரைத்திட்டாரே.

(இ-ள்.) அங்காரகன் 1-2-4-8-10 இவ்விடங்களில்நிற்கில், வாழ்க்கை அவகேடாகும். மனதில் நயாமுண்டாகிசஞ்சலப்படுவன். திரேகத்தில்வியாதிகாணும். போஜனசவுக்கியமில்லாமல் அலைச்சல்பட்டுத் திரியவைப்பான்-எ-று. (3)

புதன்.

புதனிற்கும்பொல்லாதயிடத்தைக்கேளும்
புகன்றிடவேநான்காறுயேழுயெட்டில்
சதியாகயவர்தங்கியிருக்குமட்டும்
சார்ந்துமேயவருடனேபாபர்சேரில்
விதியாகமூளுமப்பாதுன்பம்மேலும்
வருமதொடுபந்துகளும்பகையதாவார்
நிதியோடுங்கல்வியதுபலியாதென்று
நிகழ்த்தியமுன்னோரின்வாக்கிதாமே.

(இ-ள்) புதன் 4-6-7-8 இவ்விடங்களில்நிற்க, அவருடன்பாபக்கிரகங்கள்நிற்க, துன்பமுண்டாகும். பந்துக்களேபகைபடுத்தும். கல்விபலிதமிராது-எ-று. (4)

வியாழன்.

குருவேதான்ஒன்றுநான்காறுயெட்டில்
கூரிடும்பத்துபனிரெண்டுமூன்றில்
கருமமாயவன்தங்கியிருப்பானாகில்
கஷ்டமுடன்மெய்தனிலேவியாதிகாணும்
உருகுலைந்துநின்றமேபுலம்பச்செய்யும்
உற்றதொருராமர்சீதைநளன்புரூரன்
பருவமுளதமயேந்திஜவர்பட்ட
பாடதுபோலாகுமென்றுபகர்ந்திட்டாரே.

(இ-ள்) வியாழன் 1-4-6-8-10-12-3 இவ்விடங்களில் நிற்கில்திரேகத்தில் வியாதிகாணும். உருவைக்குலைக்கும்.. ராமர்-சீதை-புரூரசக்கிரவர்த்தி-நளசசக்கிரவர்த்தி-பஞ்சபாண்டவர்-தமயந்தி இவர்கள் முற்காலத்தில்பட்டக் கதைபோல் செய்வார்-எ-று. (5)

சுக்கிரன்.

சுக்கிரன்தங்கும்பொல்லாயிடத்தைக்கேளும்
சொல்லுமொருஆறுயெட்டுபத்தோடின்னம

துக்கமேபனிரெண்டிலிருந்துவிட்டால்
துலையாதமனவருத்தநப்படுவாரப்பா
அக்காமாயமுறைகயவமானங்காணும்
ஆகாதப்பகைகளெல்லாபடுத்துத்தோன்றும்
சிக்கனமேவயிருந்தயிடம்விட்டுவேரே
சேரவேசெய்யுமென்றுசெப்பினரே.

(இ-ள்) சுக்கிரன் 6-8-10-12 இவ்விடங்களில் நிற்பானாகில், துலையாதமனக்கவலையுண்டாக்குவான். அவமானம்வருவிப்பான். எந்த இடமும் பகைபடுத்திவைப்பான். இருக்குமிடம்விட்டு வேறேபோகும்படி செய்வான்-எ-று. (6)

சனி.

வினையாகசனிநிற்குமிடத்தைக்கேளும்
விளம்புமொருநாலுரெண்டுயெட்டுதன்னில்
பிணியாளன்தங்கியேநிற்பானாகில
பில்லிசூன்னியம்பிசாசுயேவல்காணும்
அனியாயப்பகைநேரும்விபூதிகாணும்
அலச்சல்பட்டுநிற்ப்பானாதிபோலே
தனியாகதேசாந்திரமேறவைப்பான்
தானறிவீரென்றுமுன்னோர்சாற்றினாரே.

(இ-ள்) சனி 2-4-8 இவ்விடங்களில் நின்றால், பில்லி, சூன்னியம், பிசாசுபயம், ஏவல் இவைகளை செய்விப்பான். அனியாய மானபகையுண்டாக்குவான். வியாதிகாணும். அலச்சல்படுத்தி அனாதியாக்குவான். தனியாகதேசாந்திரமோட்டிவைப்பான் (7)

இராகு-கேது.

கேதுராகுகெடுதியிடங்கேளும்நன்றாய்
கஷ்டமப்பாநான்குமெட்டும்பத்துமைந்தும்
ஓதுமொருவொன்பதுவுமுதவாதப்பா
உள்ளபொருள்விரையத்தாலழிந்துபோகும்
மேதினியிலவன்தனக்குவெறிபோல்காணும்
மனம்போனப்படிபேசிமயங்கிநிற்பான்
நீதிமொழிதவரவைப்பானென்றுமேலோர்
நிகழ்த்தியகோசாரப்பலனிதாமே

(இ-ள்) இராகு-கேது 4-8-10-5-9 இவ்விடங்களில் நின்றால், பொருள்விரையமாக அழியும். பேயினைப்போல் அலையச்செய்வான், மனம்போனபடிக்கெல்லாம் பேசித்திரியவைப்பான். நீதியானமொழியை பிசகுசெய்விப்பானென்று மேலோர்கூறுகிறார்-எ-று. (9)

௰௨-ஆமிடம் மீனம்விரையம்-சயனம்-மோக்ஷம்-அனித்தியம் நோய்	மேஷலக்கினம் உதையம்-ஆண் இராசி சரயிராசி நால்கால்ராசி கால்உதையம்பகற்குரு கேந்தி	௨-ஆமிடம் ரிஷபம்நேத்திரம்-வாக்கு-தனம்-முகம்-குடும்பம்.	௩-ஆமிடம் மிதுனம்-சகோதரம்-வெற்றி கேள்வி-காது-டைமை
௧௧-ஆமிடம் கும்பம் சிரேஷ்டப் ராதர்-இலாபம் இஷ்டம்	1-வது. மேஷலக்கினமானால் இந்த சக்கரத்தை கொண்டு இராசிவிபரமறிந்துகொள்ளவும்.		௪-ஆமிடம் கடகம்-கேந்திரம்-தாயார்கல்விபூமி-பந்து-சகம்வியாபாரம்
௰-ஆமிடம்மகரம் கருமம்-ஜீவனம்-கீர்த்திகேந்தி ஆதாரம்			௫-ஆமிடம் சிங்கம் புதல்வர்மாதுலன்-பிதா-ஞானம்-புண்ணியம்.
௯-ஆமிடம்தனுசு-பிதா-தருமம் பிரபுத்துவம் பாக்கியம்-குரு	௮-மிடம் விருச்சிகம்-ஆயுள்தீர்க்கவியாதி அபமிருத்து	௭-மிடம் துலாம் களத்திரம்-காமம்-மாரகம் - சித்திரை கேந்திரம்	௬-ஆமிடம் கன்னி-ரோகம் சத்துருசோரம் சிறைவழக்கு

முதலாவது,

இல்க்கினபாவபலன்.

ஆதித்தன் ரிஷபத்திலாதல் சிம்பத்திலாதல் நிற்க, மற்றகோள்கள் உபயராசியிலும், கடகத்திலும், வலுத்துநிற்க, குழவி இரண்டென்று அறியவும். அங்காரகனுக்கு 8-ஆமிடத்தில் ஆதித்தன் நிற்க, மற்றக்கோள்கள் சராசியில் நிற்க ஒருபலனுமில்லையென்று அறியவும்.

சந்திரன்பாவராசியில்நிற்க, செவ்வாய் திருகோணமேற, சந்திரனுக்கு 2-ஆமிடத்திலும், 12-ஆமிடத்திலும் சுபக்கிரகங்கள்நிற்க

அப்போது ஜெனித்த குழவியோடுகூட பாம்புபிறக்கும். அல்லது, பாம்பாகிலும் பிறக்குமென்று அறியவும்.

4-ஆமிடத்தோனும், பாக்கியாதிபதியுங்கூடி லக்னெத்தில்நிற்க, சுபக்கிரகங்கள் பார்க்கப் பிறந்தவன் இராஜபூஜிதன். சனி-1 ஆமிடம் நிற்க, அங்காரகன் 7-ஆமிடம் நிற்க, சுக்கிரன் சந்திரன் புதன் இவர்கள் வியத்தானத்தில்நிற்கப் பிறந்தவன் தகப்பனுடைய ஊர் வாழ்ந்திருப்பானென்று அறியவும்.

இலக்கினத்தை சந்திரன் பாராதிருக்க, இராசியாதிபதி லக்கி னத்திலும், 5-ஆமிடத்திலும், சரராசி இவைகளில்நிற்க, சராங்கி சம்பெற்றுப் பிறந்தபாலன் தகப்பனே தேசாந்திரம் திரியவைப்பா னென்று அறியவும்.

சூரியனுக்கு 2-ஆமிடத்தில் பாவக்கிரகங்கள் பாவராசியில்நிற்க, தந்தை தேசாந்திரியாவன். பாவக்கிரகங்கள் பாவராசியில் நின்று சூரியனுக்கு 5-7-9-ஆமிடம் பாவர்நிற்க, தந்தைபரதேசத்தில் சிரை படுவானென்று அறியவும்.

அங்காரகனுக்கு 11-ஆமிடத்தில் சந்திரன்நிற்க, அப்போது ஜெனித்தக்குழவிக்கு ஈனமென்று அறியவும். சுபக்கிரகங்கள் பார்க் கில், குழந்தையை இன்னொருவர் வளர்ப்பார். பாபக்கிரகங்கள் பார் க்கில், குழவி சேதமாகும். பாக்கியாதிபதிபார்க்கில், தகப்பன் வா ழும் மனையில் ஜெனனமாகுமென்றறியவும்.

நீசஸ்தானத்தில் சுபக்கிரகங்கள்நின்று சந்திரனைப் பார்க்கில், மரத்தின்கீழ் ஜெனித்தப் பிள்ளையென்று அறியவும். பாபக்கிரகங் கள் நீச்சம்பெற்று சந்திரனைக்காணில், நீசர்வீட்டில் ஜெனித்தப்பிள் ளையென்று அறியவும்.

சந்திரனாகிலும், சுபக்கிரகங்களாகிலும், இராசியிலிருக்க பார் க்கப்பிறந்தசேய் மனிதரில்லா விடத்தில் ஜெனித்ததென் றறியவும். சந்திரனுக்கு 7-ஆமிடத்தில் சனிநிற்க, சனிக்கு 7-மிடத்தில் செவ் வாய்நிற்கப் பிறந்தசேயால் தாயார் தகப்பனுக்கு அரிட்டமோடு வரு த்தமுண்டாகுமென்று அறியவும்.

சனிக்கு 7-ஆமிடத்தில் செவ்வாய்நிற்கப் பிறந்தகுழவிக்கு ஈனமாம். இலக்கினாதி பாவரோடுக்கூடி 6-8-12 இவ்விடங்களில் நிற்கப் பிறந்தவன் ரோகவானு யிருப்பானென் றறியவும். ஜென்ம லக்கினாதி பதி பலனில்லாதிருந்தால் நோயுடையவனென்றறியவும்.

6-ஆமிடத்ததிபனும், 2-ஆமிடத்திபனுங் கூடிநிற்க, அங்காரகன் 3-ஆமிடம்நிற்க, இலக்கினத்திலேரக் காதரும். அல்லது, செவியில் ரோகமுண்டாகும். புதன் வீட்டில் சனிநிற்கில் புஞ்சனுகப் பிரப்பானென்று அறிந்துச்சொல்லவும்.

புதன்வீட்டில் ஜெனனமாக புதன் 6-ஆமிடத்தில்நிற்க 6-ஆமிடத்ததிபன் இலக்கினத்தில்நிற்க நலிப்படுவேன். சன்மாதியோடு புதனும், சனியுங்கூடில் வடிவனுகவும், குள்ளனுகவும் இருப்பானென்று அறியவும்.

மேஷத்திலாதல், விருஷபகத்திலாதல், மங்கலனிருக்க, சனி இலக்கினத்தில் நிற்க, 3-ஆமிடத்தில் சுக்கிரன் நிற்க, உடல் சிறுத்துக் குள்ளனுகயிருப்பான். அங்காரகன் உரையாகி சனிதிருகோணமேரா சிரைபடுவான்.

1-7-8 வியத்தில் சந்திரன் பாவருடனேகூடி சுபக்கிரகங்கள் நோக்கற்று உயிரிலாதல், கேந்திரத்திலாதல் நிற்கப் பிறந்தசேய் குருடாகும். வியம் 6-8 உடையவர்கள் பாவர்களாகில், பிறந்தசேய் துர்ப்பலனுடையவனும். சன்மாதிபதி பாவியாகி வியத்திலும், 6-8-ல் நிற்கில் நன்மையுண்டாமெனக் கூறுகிறூர் மேலோர்.

பாவக்கிரகங்கள் ஜன்மத்திலும், ஜன்மாதி பலமன்றி 12-ஆமிடத்திலும், கேந்திரகோணங்களும்பெரில் கோபியாவன். ஜென்மத்தானின்ற வீட்டோன் 8-12-ல் மேவில் துர்ப்பலன். ஜென்மாதிபதி கன்மாதிபதி, 8-ஆமிடத்தோன், சனி இவர்கள் திசை நடக்கும் போது துர்ப்பலன் நடக்கும். சனிசஞ்சாரத்தில் அரிட்டம் வருமென்றரியும்படி முன்னோர்கள் கூறுகிறூர்.

ஆதித்தன் 6-ஆமிடத்தில்நிற்க, அவர்க்கேழாமிடத்தில் சனி செவ்வாய்நிக்க, அரிட்டமாகும். சனி-அரவு ஜென்மத்திலும், அங்காரகன்-நாலிலும், சூரியன்-ஏழிலும், நாலிலும், வியத்திலும்நிற்க சந்திரனுக்கு இருபாலும், தீக்கிரகங்கள்நிற்க, குழவியோடு தாயாருக்

கும் அரிட்டமாம். நாற்கோள்கள் லக்கினத்திலும், 3-ஆமிடத்தில் தீயோர்களும், சுபக்கிரகம் 12-ல் நிற்கிலும் தீதுண்டாகுமென்று அறியவும்.

இலக்கினாதிபதி பாவனாகி விரயம் 6-8 இவைகளில்நிற்கில் நன்மையுண்டாம் சவுக்கியமுண்டாம். இலக்கினாதி யுக்த்தமத்திபனாகி 5-9-ல்-நிற்க பலனுண்டாம்.

சூரியன் - விரயம் 6–8-ல்-நிற்க, உருவு குறைந்த அங்கத்தை யுடையவனாகும். 9-11-2-ல்நிற்க, அல்லது–சிங்கத்திலாதல், மேஷத்திலாதல் நிற்க, திரேகசவுந்திரியனவன். குழலழகன்-சிவந்தவாயனென்று அறியவும்.

ரிஷபம்-மேஷம் - கடகம் இம்மூன்றுராசியும் இலக்கினமாக அதில் இராகு சூழ்ந்திட உத்தமமென்று அறியவும்.

இலக்கினாதிபதி 2 - ஆமிடம், 10-ஆமிடம் நிற்க, ஆகாவம். இலாபாபதி 10-ஆமிடம், 2 - ஆமிடம் நிற்க, அல்லது - 4 - 5-ல் நிற்க சுகமுண்டாகுமென்று அறியவும்

இலாபாதிபதி ஜென்மலக்கினத்திலாதல், சரராசியிலாதல்நிற்க, பாக்கியாதிபதி திசைநடக்க, அவர் உபையராசியில்நிற்க, 7-ஆமிடத்தோன் 7-ல்-நிற்க, இம்மூவர்திசையில் வாதைசெய்விக்கும். இம்மூவர் ஸ்தானத்தில், முதல்வர்நிற்கினுந் தீதாமென்றறியவும்

ஜெனனகாலத்தில் சூரியன் 8-ஆமிடம் நிற்கில், சுரம்காணும். சந்திரன் நிற்கில், ஜலகண்டம்வரும். அங்காரகன் நிற்கில், ஆயுதத்தால் பீடையுண்டாம். புதன் நிற்கில், வியாதி. வியாழன் நிற்கில் மிருத்யு சுக்கிரன் நிற்கில், தரித்திரமாம் சனி நிற்கில், தாயாருக்கு தோஷமுண்டாம். ஒருவரும் நிற்கலாகாது என்று கூறுகிறார்.

இலக்கினாதிபதி உச்சமாகி கேந்திரமேரி சுபக்கிரகங்களுடன் கூடிநிற்க, பாவர்மன்னியிருந்துப்பார்த்திட ஜெனனமாவாது நிச்சயமென்று அறியவும்

ஜென்மாதிபதி திர லக்கினத்தும் அவையே அங்கிசமாகி கேந்திரமேற அவன்யிருக்குந்தலத்தில் வெகுபலன்கிடைக்கும். சுபவங்

கிசம்பெற்று நிற்கில், அவன் சிவபரியந்தம் ஆபரணங்கள்பெற்று வாழ்வன். ஜென்மாதிபதி பலமற்று கேந்திரத்தில்நிற்க, அதிககோபமுடையவனாகி வியாதிப்படுவனென்றறியவும்.

ஜென்மாதிபதி 10-ஆமிடத்திலிருக்க, பத்தாமிடத்ததிபன் பலவீனனாக வியத்திலும், 6-8-லும், சுபர் நோக்கமிற்கில் தத்துபுத்திரனுவான். வயதுபூரணமுடையவன். இலக்கினத்தில் பாவர்கள்நிற்க, ஜென்மாதிபதி பலவானாகநிற்கில், பிணிக்கொள்வன். சுபர் ஜன்மத்தைப்பார்க்கில், பிணிகொடுமைசெய்யாதென்றறியவும்.

புதன் பாவாங்கிசத்தில் நிற்கினும், உபயவங்கிசத்தில் நிற்கினும் இரட்டைப்பிள்ளைபெறும். தனுசுலக்கினமாகி பிற்பாதியாகில், அதில்நின்றவர் சிங்காசனமேற, புதனும்-சனியும் இலக்கினத்தைப்பார்க்க, கருப்பைபோடகூட குழவியொன்று ஜெனிக்குமென்றறியவும்.

ஜென்மலக்கினத்தில் சூரியன்-புதன்-சுக்கிரன்-குரு இவர்கள் நிற்கில், அப்போது ஜெனித்த சேய்க்கு வலதுபக்கத்தில் மச்சமுண்டாம், அங்காரகன்-சனி-சந்திரன் இவர்கள் நிற்கில் இடது பக்கத்தில் மருவுண்டென்றறியவும். சூரியனுக்கு வயிற்றிலும், சந்திரனுக்கு சிரசிலும், செவ்வாய்க்கு இடுப்பிலும், புதனுக்குப் பக்கத்திலும், வியாழனுக்கு முகத்திலும், வெள்ளிக்குத் தொடையிலும், சனிக்குக் காலிலும் இவ்விதமாகக் கோள்நிலையைக்கண்டு மருவின் இருப்பிடங்கண்டுச்சொல்லவும்.

சூரியன் தனுசில்நிற்கப் பிறந்தவன்வார்த்தைப்பிரசண்டனுயும், சூரனுமாயுமிருப்பன். ஒருநாசியீனன் - தனமில்லாதவன். சிங்கத்தில்நிற்க, பிதுர்த்துவன் மேடத்தில் நிற்கப் பிறந்தவன் கண்ட மழகன்-தனவான். சந்திரன்வீட்டில் சூரியன் நிற்கப்பிறந்தவன் விழியுன்னதமாகயிருக்கும்-திரவியவான்-துலாம் இலக்கினமாக சூரியன் நிற்கப்பிறந்தவன் திரவியவான்-கண்ணில்லாதவனும்.

மேஷம் - ரிஷபம் - சிங்கம் இவைலக்கினமாகி, சனியும் - செவ்வாயும் கூடிபார்க்கில், பிறந்தபிள்ளைக்கு கொடி இரண்டுண்டாம். செவ்வாய் ஒருவன்பார்க்கில், கொடிசுற்றிப்பிறக்கும். சனிபார்க்கில், கருப்புக்கொடி சுற்றிப் பிறக்குமென்றறியவும்.

பாம்பினோடு ரவிகூடிநிற்கில், கொடிதலையில் சுற்றிப்பிறக்கும். ஜென்மாதிபதியும், அட்டமாதிபதியும் நெருங்கில், ரோகவானும். செவ்வாயும்-சனியும் ஜென்மத்தைப்பற்றிநிற்கில், கல்லடிப்படுவன். விழியுரக்கமுடையவனாக யிருப்பானென்றறியவும்.

ஜென்மம் திரராசியாகி, அதில்ஜென்மாதிபதி நிற்க, பிறந்தவன் அந்தவூருக்குக் கிராமாதிபதியாவன். அட்டமாதிபதி திரராசியில் நிற்க, பிறந்தவன் மரிப்பன். ஜென்மம் சரமாகில் தேசசஞ்சாரந் திரிகுவனென்றறியவும்.

ஜென்மம் உபையராசியாகில், சிலநாள் தேசந்திரிகுவன். சூரியன் ஜென்மாதிபதியாகில், மலையிடத்து சஞ்சாரஞ்செய்குவன், சிரசுநோய்கொஞ்ச முள்ளவன். செவ்வாய் கர்மாதிபதியாகில், ஆயுதத்தாலும், அக்கினியாலும் ஒருநோய்க்காட்டுமென்று அரியவும்.

புதன் ஜென்மாதிபதியாகப் பிறந்தவன், வித்தையும்-கணிதமும்-வியாபாரமும் பலிதமுடையவனுவான் வியாழன் - வெள்ளி வீடாகில், புத்தியோடு தனவானும். தான்பிறநதயிடம்விட்டுநீங்கான் சுபகாரியங்களுக் குதவிவானுகயிருப்பானென்று அறிபவும்.

சந்திரன் ஜென்மாதிபதியாகப் பிறந்தவன், சரீரக்காந்தியுள்ளவன்-சுகவான்-நாலைற்புல்லே விற்றுண்பான். சந்திரன் இலக்கினத்தைப்பார்க்கில், தகப்பன் அரசில்யிருக்க ஜனித்தவனென்று அறியவும், சரத்தில் சந்திரன்நிற்கப் பிறந்தவன் தந்தையைவருவிப்பானென்றறியவும்.

சுக்கிரனுக்கும், புதனுக்கும் நடுவில் சந்திரன்நிற்க, தந்தை அருகேயிருந்திடுவன். சூரியன் சரத்திலும், சந்திரன் பத்திலும்பிதாவுடைய தலத்திற்பிறந்தவனென்று அறிபவும் குரு— 6-லும், சனி. ஜென்மத்திலும், செவ்வாய் 7-லும்நிற்க, தந்தைதேசமென்றறியவும்,

மிதுனம் - கன்னி-துலாம்-கும்பம் இவைலக்கினமாகி, அங்காரகன்பார்க்க, ஜனித்தவன் வருமைப்படுவன். சனி-செவ்வாய்க்கூடி திருகோணத்தில் சந்திரனுடன் நிற்க, பிறந்தசேயை தாயார் பெறிந்துவிடுவாள். குருபார்க்கில், கைகொள்வாளென்றறியவும்.

சந்திரன் பாவர்வீடேறி ஜென்மத்தில் செவ்வாய்நின்று, சனி 7-ல்-நிற்க, வியாழன்நோக்க, ஒருவர்யெடுத்துவளர்க்க உய்வன்- பாம்பு-புதன்-குரு - சந்திரன் இவர்கள் சேர்ந்து ஜென்மத்திலிருக்க, பிறந்தபிள்ளை வம்மிசத்தைக்கெடுப்பானென்று அறியவும்.

இலக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும் தூமன்யிருந்திட வாழ்நாள் குறைந்திடும் - புகழ்நாசமாகும் சுக்கிரன் பரிவேடந்தங்க, மதிபோகும். புதன் தனுசில்நிற்க, குலங்கள்நசியும். குஜன்மேவில், தனம்போமென்றறியவும்.

இலக்கினம் மீனம்-கடகமாகி பிறந்தவர்களுக்கு திசைபலன் பார்க்கும்போது பாம்பின்திசையில் பாக்கியமோடு சோபனுதி சுப பலன்பெறுவரென்று அறியவும்.

இலக்கினம் மகரம் கன்னியாகப்பிறந்தவன்றனக்கு திசைபார்க்கில், கேதுதிசை வரும்போது பெல்லாம் இராஜசபானமானயோகம் வருமென்று முன்னோர் கூறுகிறார்.

ஜென்மம் சரராசியாகி சரத்தில் சூரியன்நிற்க பார்க்கப்பிறந்தவன், தூலசரீரனும். லக்கினம்சரமாக அயல்வீட்டோன் சரத்தில்நிற்க தன்தேசத்தைவிட்டு அயல்தேசந்திரிகுவானென்று முன்னோர் கூறுகின்றனர்.

இலக்கினபாவ பலன்

முற்றிற்று.

௰௧-ஆமிடம் மீனம் சிரேஷ்ட-ப்ராதுர்-இலாபம் இஷ்டம்	௰௨-ஆமிடம் மேஷம்-விரையம் சயனம் மோக்ஷம் அனித்தியம் நோய்.	ரிஷபலக்கினம் உதைய பெண்ராசி-ஸ்திர ராசி நாற்கால் ராசி காலோதயம் பகற் குருடு கேந்திரம்	௨-ஆமிடம் மிதுனம்-நேத்திரம்-வாக்கு தனம் முகம்-குடும்பம்.
௰-ஆமிடம் கும்பம் கேந்திரம் கருமம் ஜீவனம்-கீர்த்தி ஆதாரம்.	2-வது, ரிஷபலக்கினமானால் இந்தசக்கரத்தை கொண்டு-இராசிவிபரமறிந்துக்-கொள்ளவும்.		௩-ஆமிடம் கடகம் சகோதரம் வெற்றி-கேள்வி-காது அடிமை.
௯-ஆமிடம் மகரம்-பிதா-தருமம்-பிரபுத்துவம்-பாக்கியம் குரு.			௪-ஆமிடம சிங்கம் கோத்திரம்-தாயார்-கல்வி-பூமி-பந்துசுகம்-வியாபாரம்
௮-ஆமிடம் தனுசு-ஆயுள் தீர்க்க வியாதி-அபமிருத்து.	௭-ஆமிடம் விருச்சிகம் கேந்திரம்-களத்திரம் காமம்-மாரகம் நித்திரை.	௬-ஆமிடம் துலாம் ரோகம் சத்துருசோரம் சிறைவழக்கு	௫-ஆமிடம் கன்னி-புதல்வர் மாதுலன்-பிதா ஞானம் புண்ணியம்.

இரண்டாம்பாவம்

நேத்திரபலன்.

நேத்திரஸ்தானதிபதி திக்கோளாகி நிற்க, 8-ஆமிடத்தில் சனியும்-சந்திரனும்கூடி நிற்க, 6-ஆமிடத்தில் சூரியன் நிற்க பிறந்தப் பிள்ளைக்குப் பூனைக்கண்ணாம் நேத்திரஸ்தானதிபதி பாவனைப் இலக்கினதிபதியைமேவி 6- 8 - ல் நிற்கப்பிறந்தசேய் குருடாகுமென்று அறியவும்.

சுக்கிரன் நேத்திராதிபதியாகத்தோன்றி 8-ஆமிடத்தில்நிற்க, சூரியன் 6-ஆமிடத்தில் நிற்கப்பிறந்தானுக்கு, பிற்காலத்தில் கண்ணைப் உண்டாம். மேஷத்தில்-ரிஷபத்தில் சனியாகிலும், செவ்வாயாகிலும்நிற்க, ஊனமாகக் கொடிசுற்றிக்கொண்டு பிறக்குமென்று அறியவும்.

இலக்கினாதிபதியோடு 2-ஆமிடத்ததிபனும், சுக்கிரனுங்கூட, 3-ஆமிடத்தில்-சூரியன்நிற்க, பிறந்தசேய்க்குக் கண்ணிராது. சூரியனில்லாமல் சந்திரன்நிற்கில், மாலைக்கண்ணாகுமாமென்று மேலோர் கூறுகின்றனர்.

நேத்திராதிபதி சுக்கிரனும், லக்கினாதிபதியுங்கூடி 3 - ஆமிடத்தில்நிற்க, நேத்திரநோயுண்டாம். இலக்கினாதிபதியும், 2 - ஆமிடத்ததிபனும், சுக்கிரனும் ஒரிடத்தில் நிற்கில் அந்தகனாகுவானென்று அறியவும்.

நேத்திரஸ்தானாதிபதி சுக்கிரனாகி, ஜென்மாதிப்பதியைக்கூடி, 3-ல் நிற்க, நேத்திரரோகம். நேத்திராதி சந்திரனாகி, சுக்கிரனுடனே பிறண்டுநின்றால், நேத்திரம் ஒளிகொடாது. கடகம் இலக்கினமாக நேத்திராதிபதி சந்திரனாகி சுக்கிரனுடன் கூடிநின்றால், பிறவிக்குருடனாவானென்று முன்னோர் கூறுகிறார்.

சிங்கம் நேத்திரஸ்தானமாக சூரியனும், சுக்கிரனுங்கூடி சிங்கத்தில்நிற்க, அவரோடு எந்தஸ்தானாதிபதியேனும் காரகராகவந்தாலும், நேத்திரநோயுண்டாம். தனதுபதியாகில், நன்மை. சந்திரன் வியஸ்தானத்தில்நிற்க, ஒருகண்வூனம். கூட சூரியன்கூடில், 2-கண்ணும்போமென்றறியவும்.

இலக்கினத்தில் செவ்வாய்நிற்க, அஷ்டமாதிபதி நேத்திரஸ்தானத்திலிருக்க, அஷ்டமத்தில் பாவர்கள்நிற்க, நேத்திரநோயுண்டென்று முன்னோர் கூறுகின்றனர்.

சுக்கிரன் - சன்மாதிபதி - சந்திரன் இவர்கள்கூடி 6-8-லும், வியத்திலும பலமற்றுநிற்கில், மாலைக்கண்ணாகும். சூரியனும், சன்மாதிபதியும், 2-ஆமிடத்தோனும், சுக்கிரனும் ஒன்றாய்க்கூடி வியஸ்தானத்திலும், 6-8-லும் நிற்க, பிரவிக்குருடனாமென்று முன்னோர் கூறுகின்றார்.

நேத்திராதிபரைக்கொண்டு பார்வைப்பலன் சொல்லவேண்டில், செவ்வாயாகில் - மேல்பார்வையாம். சந்திரனும் - குருவுமாகில்-சமபார்வையாம். சுக்கிரன் - புதனாகில் - பக்கப்பார்வையாம். சனி - இராகுவாகில் - கிழ்ப்பார்வையென்று முன்னோர் கூறுகிறார்.

ஜென்மாதிபதியை - சனிபார்க்க, கண்ணேறுபாம். 2-ஆமிடத்தோனுடன் - சூரியன் கூடிநிற்க, குளிகனோடு - சனியும் நின்றுபார்க்க, கண்ணேறுபாம் அவ்வீட்டே சராசியாகி பாவர்கள் காணில், அவன்கண் துளிக்குமென்றறியவும்.

சூரியன் - பாவருடன்கூடி பலமற்று வியஸ்தானத்திலிருக்க, வலதுகண்போகும் செவ்வாய்பலமற்று வியத்திலிருக்க, இடதுகண் போகும், சூரியனும் - செவ்வாயும் - வியஸ்தானத்தில் கூடிநிற்க, இரண்டுகண்ணுந்தெரியாதென்று முன்னோர் கூறுகின்றனர்.

சனியுஞ் செவ்வாயுங்கூடி 2-12-ல் நிற்கில், விழிக்கூனமாம். சூரியனுஞ் சந்திரனும் வியத்தில் நிற்க, விழிநோயுண்டாம் பிறருக்குச் சொல்ல வேண்டில், சூரியன்-அங்காரகன் - சந்திரன்-வியாழன்-சுக்கிரன் இவர்கள் ஸ்தானத்தைக்கொண்டு சொல்லவேண்டுமென முன்னோர் கூறுகிறார்.

சூரியன்-சுக்கிரன் பலனில்லாதிருக்க, அவருடனே சன்மாதிபன்கூடில், பிரவி அந்தகனும். 5 - ஆமிடத்தோனும், 6-ஆமிடத்தோனும் சன்மத்திலிருக்க, சுக்கிரன் 2 - ஆமிடத்தோனைக் கூடிநிற்க, இரண்டுகண்ணும் பிடுங்கப்படுமென்று முன்னோர்கூறுகிறார்.

சூரியன் - செவ்வாய் - சந்திரன்-சனி இவர்கள், 6-2-8-லும், வியஸ்தானத்திலும் நிற்க, கண்ரோகமுண்டாம் 2-12-ல் சந்திரனும் சூரியனுங்கூடிநிற்க, 2-8-ல் பாவக்கிரகங்கள்நிற்க, கண்ணேயுண்டாமென்று முன்னோர் கூறுகின்றனர்.

வாக்குஸ்தானபலன்.

குடும்பஸ்தானாதிபதியோடு புதன்கூடி, 6-ஆமிடத்தில் நிற்கப் பிறந்தசேய் ஊமையாகும் 3-ஆமிடத்தோனும், இலக்கினாதிபதியுங்கூடில், ஊமையர்குமென்று முன்னோர் கூறுகின்றார்.

வாக்குத்தானாதிபதியோடு - புதன்கூடி கர்மம் 3 - 6 இவ்விடங்களில்நிற்க, ஊமையாம். இவருடன் களத்திராதிபதி தங்கள் ஸ்தானங்களில்சார்ந்து காரகராகிவந்தாலும் ஊமையாம். இவர்கள் தன்பதியில் உச்சமாகிநிற்கில், வாக்கூனமாய் மொழியுண்டாமென்று முன்னோர் கூறுகிறார்.

மாதுலனேடு, வாக்குஸ்தானதிபதிகூடி 6-8- வியத்தில்நிற்க, ஊமையாம். தந்தை - தாயார் — ஸ்தானத்திலும் இவ்வாறிருக்க, ஊமையாகுமென்று முன்னோர் கூறுகின்றார். மாதுலமென்பது - புதன்.

இலக்கினதிபதி- சுக்கிரனுடன்கூடி 6 - 8 -வியத்ய்ல்நிற்க, ஊமையாம். 2 - ஆமிடத்தோன் கூடினும் ஊமையாம். மற்றக்கிரகங்கள் கூடினும் ஊமையாகத் திரிவானென்று முன்னோர்கள் கூறுகின்றனர்கள்.

வித்தியா பலன்.

வியாழனும் - சுக்கிரனும்கூடி 2-ல்நின்று புதன்கேந்திரமூரிதிருகோணமேறில், வித்தை பலிதமுண்டாம் இவர்கள் 9 - 8-ல் - நிற்க, வித்தைப்பலியாதாம். புதன் உச்சமாக இருக்கில் வித்தைபலிக்குமென்று முன்னோர் கூறுகின்றனர்.

புதனும், 7-ஆமிடத்ததிபனும், வியாழனுங்கூடி கேந்திர - திருகோணம் பெரினும், அல்லது-தனது வீடாயினும், 2-ம் வீடாயினும் பகையில்லாதிருக்கில். திடமுள்ளவித்துவானுவானென்று முன்னோர் கூருகின்றனர்.

புதன் - கேந்திரத்தில் இருக்க, 2 - ஆமிடத்தோன் உச்சமாக சுக்கிரன் - உபயராசிமேவ, 3-ஆமிடத்தில் - சுபக்கிரகங்கள் நிற்க, சுக்கிரன் - உச்சமாக, பிறந்தபிள்ளை உலகமெங்கும்புகழ, சோதிடத்தில் வல்லவனுவானென்று கூறுகின்றனர்.

2 - ஆமிடத்தோனும் - வியாழன் - சுக்கிரன் இவர்கள் மூலத்திருகோண உச்சமாய்நிற்க, அவர்களை பாவர்நோக்காதிருக்க - சேராதிருக்க, தர்க்கசாஸ்திரவல்லவனுவானென்றனர்.

நலம்பெற்ற 2-ஆமிடத்தோனை குலஞ்சிறந்த குரு பலவானுகி நிற்க, அவர்களை பலம்சிறந்த சுக்கிரன்பார்க்க, பிறந்தசேய் நல்ல சாத்துர்யமான இலக்கணம் பேசுவானென்று முன்னோர் கூறுகிறார்.

பிறைக்கு இணையாகச்சேர்ந்து திருகோண கேந்திரத்தில் புதன் நிற்கில், தமிழ்வித்தைபெருக ஓதுவன் உயிரில்-செவ்வாய் ஒருவன் நிற்கில், தெலுங்குவித்வானுவான் கருங்கோள் நிற்கில். துருக்கர்

ஆரியர்பாஷை ஓதுவன்-நிபுணவித்வானுவான். சுக்கிரன்-வியாழன் இவர்கள் வேவில், சாஸ்திரங்களுக்கு வல்லவனுய், மதியோடு வித்து வானுவானென்று முன்னோர் கூறுகின்றனர்.

2-ஆமிடத்தோனும் - புதனும் உச்சமாய்நிற்க, ஜென்மத்தில் சூரியன்நிற்க, சனி 8 - ஆமிடத்தில்நிற்க, பிறந்தசேய் - கணிதம் ஓதுவன். இவனுக்கு கோபுராங்கிசத்தில் - சனிநிக, அங்காரகன்-அங்கிசத்தில் வியாழன்நிற்க, மறை ஓதுவன். 2-ஆமிடத்தோன்-சூரியனுக, அவரை புதன்பார்க்க, தர்க்கசாஸ்திர வல்லவனுவானென்று முன்னோர் கூறுகின்றனர்.

ஜென்மலக்கினத்தில் - சுக்கிரனும்-வியாழனும் இவர்கள் கலந்து நிற்க, குருவும்-சூரியனும் கலந்து சிங்காங்கிசத்தில் யேறி நிற்க, சுக்கிரன்-கடகலாங்கிசமேற, இந்தப்படி சனி அண்டியிருக்க, பிறந்தவன் ஆறுசாஸ்திரமுங்கற்று, அவனியெங்கும் கீர்த்தியுடையவனுகயிருப்பானென்று முன்னோர் கூறுகின்றார்.

ஜென்மலக்கினத்தில் - சனி - சூரியன் - குரு இவர்கள் நிற்கில், தனமுடையவனுய் புலவனுவான். சூரியனும் - சுக்கிரன் - புதன்-சந்திரன் - சனி — வியாழன் இவர்கள் ஒருவீட்டில்கூடி நிற்கில் பிறந்தசேய் பிரபல வித்துவானுமாய் — புயவலிமையுடையவனுய் - சாந்த குணத்தோடு வாழ்குவானென்று முன்னோர் கூறுகின்றனர்.

தனபலன்.

ஜென்மாதிபதிக்கு 2-ஆமிடத்தோர் நல்லவராக, 3-ஆமிடத்தில்-தீயோராக, 4-ஆமிடத்தில்-நல்லோராக, நன்மார்க்கம்பெற்று நிற்கப் பிறந்தவன் தனவானும். சன்மார்க்கமுடன் தனஸ்தானத்தை பாக்கியாதிபதி, இலாபாதிபதி பார்க்கில் நிற்கில் பிறந்தசேய், குபேரனைப் போல் குறவில்லாத தனவானுகவாழ்வானென்று முன்னோர் கூறுகின்றனர்.

ஜாதகன் லக்கினமுதற்கொண்டு இலக்கினதிபதியிருக்கும் வீடளவும்யெண்ணி கண்டத்தொகையை இலக்கினதிபதியைத்தொட்டுயெண்ணிவருகையில் பாவர்வீடாகில், தரித்திரயோகமென்று அறியவும், சுபர்கள் வீடாகில், தனவானுவான். ஜென்மலக்கினத்திற்கு, 2 - 5-12 இவ்விடங்கள் புனிதர்மனையாகில், தனவானென்று முன்னோர் கூறுகின்றனர்.

ஜென்மத்தில்-சனியும், 4 - ஆமிடத்தில் - சந்திரனும், 7-ஆமிடத்தில் - அங்காரகனும், கும்பத்தில்- சூரியனும் நிற்க, புதனும் சுக்கிரனும்கூடி ஒருவீட்டில்நிற்க, பிறந்தசேய் பூலோகவரசனைப் போல் தனவானுய் வாழ்வானென்று முன்னோர் கூறுகின்றனர்.

8-6-3-12-ல், பாவக்கிரகங்களிருந்து, இலக்கினத்தைப் பாராதிருக்கப் பிறந்தசேய்க்குச் செல்வமுண்டாம். சுபக்கிரகங்கள் நால்வரும் நீசராகி நீசர்மனையில் இருக்கில், தனவானுவானென்று கூறுகின்றனர்.

சந்திரன் - இலக்கினத்திலும், இலக்கினுதிபதி உச்சத்திலும் நிற்க, அல்லது -நீசர்மனையோ, தனவானுப். சந்திரனோடு உச்சம் பெற்ற - நற்கோள்கள் சேர்ந்திருக்க - குடும்பஸ்தான முச்சமாகி, சுபக்கிரகங்கள்நிற்க, பிறந்தசேய்க்குச் செல்வமுண்டெனகூறுகிறார்.

10 - ஆமிடத்ததிபனும் - ஜென்மாதிபனும் - குடும்பஸ்தனமாகி அங்கிசமோ, செல்வமுண்டாம். கேந்திரத்தில் - சுபர்கள்காணில் சிறுவயதில் செல்வமுண்டென கூறுகிறார்.

ஜென்மாதிபதியும், 3 - ஆமிடத்தோனும், பலவானுகவிருக்க, புருஷக்கோள்நோக்க, 3-ஆமிடத்தோனைசேர - கான, அண்ணன் தாய் - தம்பி - இவர்கள் - பரமாயிருந்து தனம்வருமென்று முன்னோர்கள் கூறுகிறார்.

இலக்கினத்திற்கும் - சந்திரனிருக்கும் வீட்டிற்கும் - இருபுரத்திலும் நல்லோர் நிற்கில் தனவானுகுவன். ஒருவீட்டிலிருக்கில் பாதி பலனும். ஒருபுரத்தில்நிற்கில், கால்பலன் தருமென்று முன்னோர் கூறுகின்றனர்.

3-ஆமிடத்தோன் 9 - மிடத்தானோடுகூட இருவரும் நன்மையாகவிருக்க, பிறந்தசேய்க்கு தமயனுடைய பொருள்கிடைக்குமென்ற மேலோர் கூறுகிறார்.

கிரகங்களைக்கொண்டுப் பொருள்வரும்விபரம் அறியவேண்டில், தாயார் சொத்தாகில், சந்திரன் - செவ்வாயென்றறியவும். புதனுகில் பகைஞ்சர் பொருள்கிடைக்கும். சூரியனுல் - நல்லவுரவோர்பொருள்கிடைக்கும். சுக்கிரனுகில்-மனைவியால் பொருள்கிடைக்கும். சனி

ன்றைல் - அடிமையுள்ளோர் பொருள்கிடைக்கும் - சேவகன் நிதியும் வந்தடையும். இந்தப்பலன்கூறுவது யெவ்விதமெனில் ஜென்மலக்கி னமும் - சந்திரலக்கினமும் 10-ஆமிடமுங்கொண்டு ஸ்தானம்விட்டு ஸ்தானம்மாறும் கிரகங்களைக்கொண்டு சொல்லவேண்டும்.

இலாபாபதி 9 - ஆமிடகதோனைக்கூடிநிற்க, பழைபதனங்கி டைக்கும். 10 - ஆமிடத்தோன்-பாக்கிய ஸ்தானத்தில் நிற்கினும் நற்கோளாகினும், உத்தமகிரகங்களின் மனையில் தருமவானுயிருக்கி னும், பிரயாசைப்படாமல் நிதிதேடுவான். வியாழன் 2-ஆமிடம் இருக்க, பொருள்கிடைக்கும் 10-ஆமிடத்தோன் மெலிவுற்று இரு க்கில், ஒருவரைசேவித்து தேடியபொருளும் அற்பமாகுமென்று கூருகின்றனர்.

10 - ஆமிடத்தோன் உத்தமனுகி பொருந்தி 10-ல் இருக்க, யாகாதி கருமங்கள்செய்வன். அருளோடு பொருள்தேடி சுகத்திருப் பன். 3-ஆமிடத்தோன் பலவானுக ஜென்மாதிபதி துர்ப்பலவானுக லாபாதிபதி 3-ஆமிடம் மருவ, உடன்பிறந்தார் பொருள்வந்துசே ரும். கர்மஸதானத்திலும், சந்திரலக்கினத்திலும் பெவர்கள்நின்றார் களோ, அந்ததிக்கிற்குரியவர்களுடைய தனங்கிடைக்குமென்றுமுன் னோர்கள் கூறுகின்றனர்.

தனஞ்சேருவது 9 - ஆமிடத்தோன் திசையில், 10-ஆமிடத் தோன் புசிப்பில், அப்போது நடக்கும் கோசாரத்தில், 4-ஆமிடத் தோன் 10-ஆமிடத்திலிருக்க, 10 - ஆமிடத்தோன் 4 - ஆமிடத்தி னும், அல்லது - அங்காரகனுடைய கேந்திரத்திலேனும் கலந்துநிற்க, பிறந்தோனுக்கு புராதனமாகக்காணி மனையுடன் 10 - ஆமிடத்ததி பன்நிற்கும் திக்கின் முதற்கொண்டு சேமமாகவாழ்வானென்று முன் னோர் கூருகின்றனர்.

ரிஷபத்தில்-சந்திரன், விருக்ஷகத்தில் - சூரியன்நிற்க, தனவா னும். சுக்கிரன்வீட்டில் - வியாழன் நிற்க, மகரத்தில் - குஜன்நிற்க, குருவோடு - சந்திரன்கூட, புதனும் - குருவும்கூடி இலக்கினத்தில் நிற்க கூட சுக்கிரனுமிருக்க, நிறைந்த தனவானுய்க் கல்விக்காரனு யிருப்பான். சுக்கிரன் உச்சம்பெற வியாழன் - லக்கினத்திலிருக்க, சந்திரனைப்பாவர்கள்பார்க்க, புகழோடு தனம்படைப்பானென கூறு கின்றனர்.

9 - ஆமிடத்ததிபன் 6 - ஆமிடத்தில்நிற்க, மாதுலனுடையபொருள்வந்துசேரும். 9 - ஆமிடத்ததிபன் - குருவாகி, 6 - மிடம்நிற்க மாமியார் கையில் இசைந்தப்பொருள்சேரும். 5 - ஆமிடத்ததிபன் சுபனும் பாக்கியஸ்தானத்தில்நிற்க, தன்புத்திரிக்கு மணஞ்சூட்டிவைத்து அந்தமருமகனால் தேடியபொருள்களெல்லாம் தன்வசமாகி வாழ்வாசென்று முன்னோர் கூறுகின்றனர்.

வியாழனும்,10 - ஆமிடத்ததிபனும், சுபனாகிநிற்க, இலக்கினத்ததிபனுக்கு, சூரியன் மித்துருவாய்க் கூடப்பிறந்தானுக்கு, பிதாவினுடைய பொருள்கிடைக்கும். சந்திரன்கூடத் தாயாருடையபொருள்கிடைக்கும். சனிகூடத் தன்பொருள் கிடைக்கும். புதன்கூடில் மித்துருதனங்கிடைக்கும் வியாழன்கூடில் பிறருடையபொருள்கிடைக்கும். சுக்கிரன்கூடில் தெருவை யென்னும் ஸ்திரீகளின்பொருள் கிடைக்கும் சனி. 6 - நிற்க, பொருள்கிடைக்கும். இராகு-கேதுகள் கூடில், யீனத்தொழில் செய்து பொருள்சேர்ப்பானென்று முன்னோர் கூறுகின்றனர்.

10 - ஆமிடத்ததிபன் - சுபக்கோளாயிருக்க, தக்கவீட்டில் சூரியனும் - சந்திரனும் அன்றி, வியாழன் நீசனமாகித் தீயோர் வீட்டிலிருக்க பிறந்தவன், திரவியமில்லாதவனும். 10 - ஆமிடத்ததிபன் 4 - ஆமிடம், கல்வியினால்திரவியந்தேடுவான்.

2 - ஆமிடத்திலும், கேந்திரத்திலும். சூரியன்நிற்க, 2 - ஆமிடத்தோன் 6-8-வியத்தில்நிற்க பிறந்தானுக்கு, தந்தையுடைய தனமில்லையென்று முன்னோர் கூறுகிறார்.

இலக்கினத்திற்கு அதிபனுக்கு, 2-ல் சனிநிற்கில், சந்திரனுக்கு 4 - ஆமிடத்ததிபன் - சுபக்கிரகங்களுடன் கூடி கேந்திரத்திலிருக்க, பிறந்த வனுடைய தந்தையின் பொருளை வேற்றோர் கைக்கொள்வர்- தன்னுடைய அமிசையினால் பொருள்தேடி பாக்கியவானப் அரசர்களின் உதவிப்பெற்று வாழ்வானென்று கூறுகிறார்.

புதனும், 4 - மிடத்ததிபனும், மகரத்தில் நிற்க, கேந்திரத்தில் சூரியன்நிற்க, சூரியனுக்கு 4 - ஆமிடத்தில்-சுபர்கள்நிற்க பிறந்தவனுக்கு பிதாவின்சொத்தில் ஒருகாசும்கிடையாமல் பரதேசம் திரிவானென்று முன்னோர் கூறுகிறார்.

2-ஆமிடத்ததிபன் மிகுந்திருந்து கேந்திரமேறி தனஸ்தானத் தானும் குலாவி உச்சமாகி யிருக்கத் தனபதியாய் விளங்கி அறிவுள்ளோனாய்ப் பொருள்தேடிவாழ்வானென்று கூறுகிறார்

2-ஆமிடத்ததிபன் இலாபத்திலிருக்க; பாக்கியாதிபதி 2-ஆமிடத்திலிருக்கப் பிறந்தவன் நல்லதருமகுணமுடையவனாய் நான்குலக்ஷம் பொன்தேடி அல்லலில்லாமல் வாழ்வானென்று கூறுகிறார்.

தனுசு லக்கினமாகி அதில் வியாழன்நிற்க, துலாத்தில் சனியுச்சமாக, இலாபபதி 4-ஆமிடத்தில்நிற்கப் பிறந்தவன் திரிந்துப் பொன்தேடி நீதிவழுவாமல் பலரையும் இரக்ஷித்து கோடிபொன் தேடுவானென்று கூறுகிறார்.

தனுசு - கும்பம் - மீனம் - கன்னி - ரிஷபம் இவைகளுல் நற்கோள்நிற்க, தேவயோகம்பெற்று நவக்கோடிச் செம்பொன்தேடி, இராஜ்யம் ஆள்வன், இலக்கினம் தனுசாகப்பிறந்தவனென்று முன்னோர் கூறுகிறார்.

திருகோணத்தில் - சுக்கிரன்கூட இலாபாபதி சுபவர்க்கமேறப் பிறந்தான், உலகில் கோடிபொன்தேடி வாழ்வானென்று முன்னோர்கள் கூறுகின்றனர்.

இரண்டாம்பாவபலன்.

முற்றிற்று.

௰-ஆமிடம் மீனம் கேந்திரம் கருமம்-சீவனம் கீர்த்தி ஆதாரம்.	௰௧-ஆமிடம் மேஷம்சிரேஸ்டப் பிராதர்இலாபம்இஷ்டம்	௰௨-ஆமிடம்ரிஷபம் விரையம் சயனம் மோக்ஷம் அனிதநியம் நோய்	மிதுன லக்கினம உதயம் ஆண்ராசி உபயராசி இருகால்ராசி தலை உதயம்இராகுருடு கேந்திர
௯-ஆமிடம் கும்பம் பிதாதருமம் பிரபுத்துவம் பாக்கியம் குரு	3-வது, மிதுனலக்கினமானால் இந்தசக்கரத்தை கொண்டு-இராசிவிபரமறிந்துக்-கொள்ளவும்.		௨-ஆமிடம் கடகம்நேத்திரம் வாக்குதனம் முகம்குடும்பம்.
௮-ஆமிடம் மகரம் ஆயுள் வியாதி அபமிருத்து.			௩-ஆமிடம் சிங்கம் சகோதரம் வெற்றி கேள்விகாது அடிமை.
௭-ஆமிடம் தனுசு கேந்திரம் களத்திரம்காமம் மாகரம் நித்திரை.	௬-ஆமிடம் விருச்சிகம்ரோகம் சத்துரு சோரம்சிறைவழக்கு.	௫-ஆமிடம் துலாம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்.	௪-ஆமிடம் கன்னி கேந்திரம் தாயார் கல்வி பூமி பந்து சுகம் வியாபாரம்.

மூன்றும்பாவம்

சகோதரபலன்.

அங்காரகன் 3-ஆமிடத்திலிருக்கினும், அல்லது - பார்க்கினும் துணைவரில்லையாம். 11 - ஆமிடத்திலிருக்கில் - மூத்தோருண்டாம். 2-ஆமிடத்திலிருக்க - துணைவர் வுடனே பிறக்கும், மும்மூன்றுகப் பார்த்து யெண்ணு ஆண்பெண்ணென்று அறியக்கூறுகிருர்.

3 - ஆமிடத்ததிபன் — அங்காரகன் 4-ஆமிடத்ததிபனைக் கூடில்-தனக்குப்பின் மூனுதுணைவர் பிறப்பார். தன்னுடைய தாயார் பங்கு மனை தனக்குவந்து சேருமென்று முன்னேர் கூறுகிருர்.

அங்காரகன் - இலக்கினத்தில்நிற்க, அந்த ஸ்புடத்தைக்கொண்டுயெண்ணி கருங்கோள்நிற்கும் இராசியைக்கண்டு அந்த இராசியில் வியாழன்நிற்க, இளையோனுக்கு அரிட்டம். கருங்கோள் இராசியில் அங்காரகன்நிற்க, அங்காரகன் ஸ்புடத்தில்சூரியன்நிற்க, பிறந்தசேய் உற்றோர் உரவோரறிய பார்விட்டு சிவபதமடையுமென்று முன்னோர் கூறுகின்றனர்.

மூன்றுமிடத்ததிபன் - இலாபாதிபதிக்கு உரவாகி, அமர்ந்து பலவானாகி, மித்ருவுடன்கூடியிருக்க, இலாபத்தில் சந்திரன்யிருக்க அவருடன்வந்துகூடிநிற்கப் பிறந்தசேய்க்கு துணைவருண்டாமென்று முன்னோர் கூறுகின்றார்:

கடகம்-விருச்சிகம்-மீனம் - இலக்கினமாகக்கண்டு, அதை ஒன்பதுபாகமாகப்பண்ணி அதில் 5-ம் பங்கில் பிறந்தகன்னிக்கு இலக்கினம் கடகமாகில், நூலதேகத்தை யுடையவளாகயிருப்பாள்விருச்சிகமாகில் - பேய்போல் கால்கைகள் குரிகிப்பெருத்து உருகுலைந்தியிருப்பாள. மீனமாகில் - முடமாகித்திரிவாளென்று முன்னோர்கள் கூறுகிறார்கள்.

சகோதரலாபம் - சகோதரநஷ்டம்.

சகோதரஸ்தானம் 3-ஆமிடத்ததிபன், சகோதரக்காரகனாகிய-அங்காரகன் - தனலாபத்திலும், கேந்திரதிருகோணங்களில், நட்பு-ஆக்ஷி - உச்சம் பெற்றுநிற்கினும் இப்படி சகோதரஸ்தானாதிபதியோடே கூடியிருந்தாலும் அவர்கள் ஆக்ஷியிலிருந்தாலும் அவர்கள் பார்வையுண்டானாலும், இவனுக்கு சகோதரலாப முண்டென்று முன்னோர் கூறுகின்றனர்.

இந்த சகோதரஸ்தானாதிபதி 6-8-12, அஸ்தமிச்சபகை நீசராசியிலே க்ஷீரணசேஷத்திரங்களிலே தான் இருந்தாலும், இந்த அதிபதிகளுடனே கூடியிருந்தாலும், அவர்கள்பார்வைபெற்றாலும் இவன் சகோதரநஷ்டமாம்.

பெண்சகோதரம்.

சகோதரராசி அதிபதிராசியுமாய் அந்தராசி பெண்ராசியும், அதிலே அந்த அதிபதியிருந்தாலும், இவன் யிருந்தராசிக்கதிபதியும்ஸ்ரீ

கிரகராசியிலேயிருந்தாலும், ஸ்ரீகிரகம்-நட்பு-ஆக்ஷி-உச்சமாய் நோக்கினும், ஸ்ரீகிரகங்கள் இந்த அடைடவே அதிபதிக்குண்டானால் இந்தப் பிள்ளைக்குப்பின் பிறப்பது பெண்ணென்று முன்னோர் கூறுகிறார்.

இப்படி ஸ்ரீகிரகம் ஆக்ஷிராசியிலே அந்தப்பிராதாவுக்கு அதிபதியிருக்க, அல்லது-புருஷகிரகத்துடனே கூடியிருந்தாலும், அவன் இருந்த இராசியாதிபதி பிரபலனாயிருந்தாலும் புருஷகிரக அம்கிசம், ஸ்ரீயாய்பிறக்கும். கிரகவலியறிந்துச் சொல்லும்படி கூறுகின்றனர்.

சகோதரமின்மை-சகோதரமடிபு.

சூரியன் பிராதுர்ஸ்தானாதிபதியுடன்கூடி அஸ்தமனமாகிஅந்த பிராதுர்ஸ்தானத்திலேயே இருந்தாலும், இவனிருந்த இராசியாதிபதி 6-8-12-ஆமிடத்தில் அஸ்தமான பாபசீரண நீசராம்கிசத்திலிருந்தாலும், இப்படிக்கொத்த கிரகங்களுடனேகூடி யிருந்தாலும், இவர்கள் பார்வையுண்டானாலும் இவனுக்குப்பின் பிள்ளையில்லையென்று முன்னோர் கூறுகின்றனர்.

இப்படியிருந்தகிரகம் தனம் - இலாபம் - கேந்திரம் - திருகோணம் சேர்ந்திருநதால்-இவனுக்குப்பின் சிலநாளில் பிள்ளையுண்டாகி பாலியத்தில் மரித்துப்போமென கூறுகின்றனர்.

சகோதரசங்கை.

3-ஆமிடத்ததிபதி சுபக்கிரகமுமாய் எவ்வண்ணமும் நட்பாட்சி யுச்சத்திலிருந்தாலும், இப்படி சகோதர கிரகங்களுடனே கூடியிருந்தாலும் இவர்கள் ஆக்ஷிராசியிலே இவர்களுடைய திருஷ்டியுண்டானாலும், இவர்கள் தனலாபகேந்திர திருகோணத்தி லிருந்தாலும், நட்பாக நயனத்தோடுபார்க்கினும், இவனுக்கு சகோதரலாபமுண்டு. தீர்க்கவாயுசுகமாய்-தனவானுமாக யிருப்பானென்று முன்னோர்கள் கூறுகின்றனர்.

இந்தப்படி பிராதுர்கிரகங்கள் எத்தனை கூடியிருந்ததோ அத்தனை சகோதரமுண்டென முன்னோர் கூறுசின்றனர்.

அப்போது கூடி யிருந்த கிரகங்களில், ஆண் கிரகங்களெல்லாம், ஆணென்றும். பெண்கிரகங்களெல்லாம், பெண்ணென்றும் தீர்க்காயுசு உண்டாமென கூறுகின்றனர்.

வெகுசகோதரம்.

3-மிராசியாதிபதி-பிராதுர்காரகனாகிய - அங்காரகனும், பிராதுர் ஸ்தானமாகிய மூன்றாமிராசியில் கிரகங்கள் உண்டானாலும் இந்த மூன்று பெயருடைய ஆக்ஷிராசிகள் புருஷராசியாக இந்தமூன்று பேரும் புருஷகிரகமுமாய் இவர்கள் நட்பாட்சியுச்சம் யெவ்வண்ணமாய் தனலாபகேந்திர திருகோணங்களிலிருக்க, இப்படிக்கொத்த கிரகத்துடனே கூடியிருந்தாலும், இவர்களுடைய ஆக்ஷிராசியிலிருந்தாலும், இவனுக்குப்பின் பிறக்கும்பேரெல்லாம் புருஷராம். இவனுக்கு சகலபாக்கியங்களுள்ள பிராதுர்கள் உண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

இம்மூவரும் மிருத்யூராசியாதிபதி கிரகங்களுடனே இந்தக்கிரமத்திலிருந்தால் இவனுக்கு தீர்க்கவாயுள் சகோதரரும் சகலபாக்கியமும் சம்பூரணமாக உண்டென கூறுகிறார்.

இந்தக்கிரகமத்தியிலே புருஷகிரக முற்பாதியும், ஸ்ரீகிரகம் பிற்பாதியும் கூடியிருந்தால் இவன் சகோதரர்கள் அளவில்லையாக யாவரும்மதிக்க வாழ்வாரென் கூறுகிறார்.

பெண்சகோதரமின்மை.

3-மிராசி புருஷராசியாய் இந்த ராசிக்கதிபதிகிரகம் ஸ்ரீகிரகமுமாய் இந்த ஸ்ரீகிரகம்புருஷகிரகராசியிலிருக்க, அந்தபுருஷகிரகராசி அதிபதியும் ஸ்ரீகிரகராசியிலே இவனுக்கு இலாபமாகிற 11-ஆமிடத்தில் நிற்க, இவனுக்குப் பிறக்கின்ற சகோதரம் பெண்ணாம். அது சுகத்தில்ல தீர்க்காயுசு உண்டாமென கூறுகின்றனர்.

இவர்கள் 3-பேரும் 6-8-12-ஆமிடத்தில் அஸ்தமன நீசகிரகங்களுடனே கூடியிருந்தாலும், சகோதரம் பாலியத்தில் மரிக்குமென முன்னோர் கூறுகின்றனர்.

இந்தப்படி இலாபமாகிய 11-ஆமிடத்திலிருந்தாலும் சிலநாள் அற்பசவுக்கியமெனக் கூறுகிறார்.

இவை களெல்லாம் அந்தந்த கிரமதிசை கால சக்கரங்களில், பலன்சித்திக்குமென முன்னோர் கூறுகிறார்.

மூன்றும்பாவபலன்

முற்றிற்று,

கூ-ஆமிடம் மீனம் பிதா தருமம்பிரபுத்துவம் பாக்கியம் குரு.	ய-ஆமிடம் மேஷம் கருமம் ஜீவனம் கீர்த்தி ஆதாரம்.	யக-ஆமிடம் ரிஷபம் சிரேஷ்டப்ராதுர் இலாபம் நஷ்டம்	யஉ-ஆமிடம் மிதுனம் விரையம்சயனம்மோக்ஷம் அனித்தியம் நோய்.
அ-ஆமிடம் கும்பம் ஆயுள் வியாதி அபமிருத்து	4-வது. கடகலக்கினமானல் இந்த சக்கரத்தைகொண்டு இராசிவிபரமறிந்துகொள்ளவும்.		கடகலக்கினம் உதயகேந்திரம் பெண்ராசி சரராசி பலகால்ராசி காலுதயராசி இராக்குருடு.
எ ஆமிடம் மகரம்கேந்திரம்களத்திரம்காமம் மாரகம்நித்திரை.			உ-ஆமிடம் சிங்கம் நேத்திரம் வாக்குதனம் முகம் குடும்பம்.
சா-ஆடம் தனுசு ரோகம் சத்துரு சோரம்விரவழக்கு	ரு-ஆமிடம் விருச்சிகம்புதல்வர்மாதுலன் பிதா ஞானம்புண்ணியம்.	ச-ஆமிடம் துலாம் கேந்திரம் தாயார் கல்வி பூமி பந்துசுகம் வியாபாரம்	ங-ஆமிடம் கன்னி சகோதரம் வெற்றிகேள்வி காது அடிமை.

நான்காம்பாவம்

வாகனபலன்.

சந்திரன் - வாகனதிபதி - ஜென்மாதிபதி இம்மூவர்களும் ஒன்றுய்கூடிநிற்கில், இவனுக்கு அசுவதானக்கிடைக்கும். இவங்களோடு சுக்கிரன்கூடில் - தண்டிகைகிடைக்கும். ஒசிவிலாதல் - வியத்திலாதநிற்கில் சிவிகையுண்டென்று முன்னேர் கூறுகின்றனர்.

பாக்கியாதிபதி - பாவனதி ஸ்தானத்தில் - குரு - சுக்கிரன்கூடியிருக்க, அல்லது - பார்க்க, இவனுக்கு கனகதண்டிவரும். இவரோடு - சந்திரன் பிரியமாகக்கூடிநிற்கில், இவனுக்கு பூச்சக்கரக்குடைகிடைக்குமென்று முன்னேர் கூருகின்றனர்.

வாகனாதிபதி - பாக்கியத்தில்நிற்க, பாக்கியதானாதிபதி - கேந்திரத்தைப்பற்ற, இவர்கள் நிற்கும் இராசி நல்லோர்மனையாக யிருக்க-சுபகிரகங்களோடேக்கூட, இலக்கினாதிபதி - வாகனஸ்தானத்திலும், கேந்திரத்திலுமேவ, இவனுக்கு கனகதண்டிகையும் - மிகுந்ததனமும், யானைவாகனமு முண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

சுக்கிரன் 4-ஆமிடத்ததிபனுடன் கூடினாலும், அல்லது - இருவரும் கேந்திரமேறினாலும், 4-ஆமிடத்தோன் - சூரியனுடன்கூடி கன்மத்தில்நிற்கினும், வாகனமுண்டாம். 4 - ஆமிடம் குருவிருந்தபோதும், வாகனமகிடைக்கும். குருவோடு - சுக்கிரன்கூடில் - தண்டிகைகிடைக்கும். சுக்கிரன்வாகனாதிபாகி - ஜென்மாதிபதியைக்கூடில், வெறுஞ்சஞ்சாரநேயனென்று முன்னோர்கூறுகிறார்.

சந்திரனுக்கு 3 - ஆமிடத்தில் - சுக்கிரன்யிருக்க, சுக்கிரனுக் 3 - ஆமிடத்தில் - சந்திரன்யிருக்க, ஒருவர்க்கொருவர்வினவி பார்த்திருக்க, குடும்பஸ்தானத்தை நல்லோர்நோக்க - அல்லது - பார்க்க, அல்லது - இலக்கினத்தைப்பார்க்கினும், இவனுக்கு வாகனங்கிடைக்குமென்று முன்னோர் கூறுகிறார்.

4 - ஆமிடத்ததிபன் - இலக்கினத்தில்நிற்க், இவனுக்கு பல்லக்கோடு செல்வமுண்டாய்வாழ்குவன். இலக்கினத்தில் - வியாழன் நிற்க, அவரை நல்லோர்பார்க்க, தண்டிகைவருமெனக் கூறுகிறார்.

வாகனாதிநின்ற இராசி ஆக்ஷி - உச்சயமாய் - சுபர்கள்வீடாகியும் கேந்திரமாகியுமிருக்க, சனித்தயிடம் சிறுகுடிசையாம். அந்தகிரகம் தாயாருக்கு இன்பமுண்டாகும். வாகனாதிபதி - சனி - குருவாகில், தண்டிகைகிடைக்குமாம். சந்திரனாகில் - பூச்சக்கரகுடை கிடைக்குமாம். சுக்கிரனாகில் - பல்லக்குண்டாம். பாம்பாக்கில் - யாவும்வருவரிதாம். புதனாகில் - விச்சித்திரப்பல்லக்கு ஏறுவானென்று முன்னோர் கூறுகின்றார்.

வாகனாதிநிற்கும் - இராசியோடுகலந்து - சுக்கிரன்நிற்கும் இராசியைக்கூட்டிக் கண்டராசியைச் சூரியன்வந்து சேரினும், கேந்திரமேறினும், திருகோண ஸ்தானத்தில்நிற்சினும், வாகனமுண்டாமென்று முன்னோர் கூறுகின்றார்.

சுக்கிரனுக்கு 3-7-லும் - சந்திரன்யிருக்க, சந்திரனுக்கு 3-7லும் - சுக்கிரன்யிருக்க, இவனுக்குவாகனமுமுண்டாம். 4-ஆமிடத்தான் - சந்திரனோடு - நல்லோருடன்கூடி - கேந்திரம்மேவிநிற்க வாகனமோடு திரவியந்தேடி நாட்டில் அரசனைப்போல் வாழ்வானென்று முன்னோர் கூருகின்றனர்.

4 - ஆமிடத்தாதி - மாதுர்ஸதானத்ததி - இலக்கினாதி இவர்களுடன்கூடிநிற்க, தீயார்களும்கூடி நிறைந்து ஒருவீட்டில்நிற்க, வந்த வீடு ஜென்மாதிபதியின் உச்சமனையாகில், இவனுக்கு பரிவாகனமோடு — புத்திமானாய்-மன்னர்களை நாளும் சேவித்துவாழ்வான். ஜென்மாதிபதியும், 4-ஆமாதிபதியும், நல்லோர்களும், கேந்திரத்திலிருக்கப் பலனுண்டாமென்று முன்னோர்கள் கூறுகின்றனர்கள்,

சூரியன் - சந்திரன் - சுபக்கிரகங்கள் இவர்கள் மூவரும் ஒன்றுய்க்கூடி கேந்திரத்திலிருக்க, ஆனைவாகனம்வந்துசேரும், ஜென்மாதிபதியும், 10-ஆமாதிபதியும் நிறைந்த சுபரோடுகூடி கேந்திரத்தில் நிற்க, மதகரியென்னும் ஆனைவாகனம்சேரும். பருவதத்தில்நல்லசவுந்திரியமுள்ள மனையாளை மருகுவன். ஜென்மாதி - இலாபாதி - நல்லோர்கள் இவர்கள் மூவரும்சேர்ந்து கேந்திரத்திலிருக்க, சிந்தூரமுண்டாம் - தனமுண்டாமென்று முன்னோர் கூறுகிறார்,

ஜென்மத்திலும், 10-ஆமிடத்திலும், உத்தமகிரகங்களிருக்க, ஜென்மாதிபன், 10-ஆமதிபனோடு விரும்பு நல்லோர் மேவிநிற்க, இவனுக்கு அரசரால் மாணிக்கவகைகள் கிடைத்து, சத்திரசாமரைகளோடு மிகவும் கீர்த்திமானாய் வாழ்வானென கூருகின்றனர்.

ஜென்மாதிபதி 10-ஆமிடத்திலிருக்க, 10 - ஆமிடத்தாதி 4-ஆமிடத்திற்கூட, 4-ஆமிடத்தோன் உச்சமாக, இவன் வேந்தனும் சுகவான் - வெகுலீலாவினோதன். 10-ஆமிடத்ததிபன், 4-ஆமிடத்தில்நிற்க, 4-ஆமிடத்தோன் 4-ல்-நிற்க, ஜென்மாதிபதி உச்சமாய் மேவ, பலவிதமான வாகனங்களுஞ்சேர்ந்து மன்னவனுவானென்று முன்னோர்கூருகின்றனர்.

2-ஆமாதியும் - இலாபத்தில்நிற்க, இலாபாதி - 2-ஆமிடம்மேவ 2-ஆமாதி-யுச்சமாகநிற்க, சகலவாகனங்களோடு அரசனுவானென்று கூறுகிறார். ஜென்மத்திற்கு 2-ஆமாதியும், இலாபாதி இருவரும்

2-ஆமிடத்திருக்க, 10-ஆமாதிபன் - உச்சமாகயிருக்க, தண்டிகை யுண்டாம் - பேர்பெறவாழ்வானென முன்னோர் கூறுகிறார்.

மாதுர்பலன்.

மாதுர்ஸ்தானாதிபதியும் - அட்டமாதிபதியும் - சந்திரனும்-சனியும் இவர்கள்கூடி சரராசிக்கு 5-9-ல் சனிமேவிடில், தாயாருக்கு அரிட்டம் சொல்லவும். நற்கோள்கள் - உச்சமாகிநிற்கில், நன்மையுண்டாமென கூறுகிறார்.

4-ஆமிடம், 2-ஆமிடம், 7-ஆமிடம் இதில் நிற்கு மூவரும் 4-2-7 இவ்விடங்களிலும், கடகந்திலும், அங்காரகன் - சனிநிற்க- 4-2-7- இவ்விடத்தில் - அங்காரமன்நிற்க - சனிபார்க்க, தாயாருக்கு அரிட்டமாமென்று முன்னோர் கூறுகின்றார்.

சனிக்கு 5-7-9-ஆமிடங்களில் - சந்திரன்நிற்க - வியாழன் பார்க்க, பலி இலக்கினத்தில்நிற்க, முனிவர் - சந்திரனைநோக்க, அங்காரகன் 5-7-ல்-நிற்க பிறந்தபிள்ளையை பிரர்கள்வளர்ப்பாரென்று முன்னோர்கள் கூறுகின்றனர்.

12-ஆமிடத்தினில் 2-ஆமிடத்ததிபன் அமர்ந்துகூடி நிற்கில், அன்னைக்கு அரிட்டம்வரும். அன்னையுடைய அதிபன் திசையாய் மாதுருஸ்தானத்திற்கு 9-ஆமிடம் - சனிநிற்க, அன்னைக்கரிட்டம்வரும். மாதுருதானத்திற்கு 8-ஆமிடத்தில்-சனியும், 4-ஆமிடத்தாதிபனும் கூடிநிற்கில், அன்னைக்கரிட்டமாம். 4 - ஆமிடத்தோனுடனே செவ்வாய்க்கூடி - அவர்க்கேழில் சூரியன்கூட இடருண்டாம். புதன் கூடியிருக்க நோயுண்டாமென கூறுகிறார்.

புதனும், 4-ஆமாதிபனும், தீயோர்வீட்டில்நிற்க, கோணத்தில் சனிநிற்க, மாதுர்த்தானாதிபதியுடன்-தானாதிபதிசேர்ந்துநிற்க, அன்னைக்கரிட்டமாம் 4-ஆமாதியுடன் - சனி - செவ்வாய் அணுகில் அவர்திசையில் அன்னைக்கரிட்டம்வரும். 5-ஆமிடத்தில்-செவ்வாய்நிற்க. சனியவருடன்மருவிநிற்க, அன்னைக்கு மரணம்வருமெனகூறுகிறார்,

புதன்-கன்னியிலும், மாதுர்தானாதி-வியத்திலும்நிற்க, 4-ஆமிடத்திலும், துலாத்திலும், மகரத்திலும், சந்திரன்நிற்க, இவர்க்கேழில்-சனிநிற்க, சுக்கிரனுக்குயேழில்-பூமிசுதன்நிற்க. மாதுர்தானத்திற்கு 2-ஆமிடத்தில்-நற்கோள்நிற்க, நன்றாமென முன்னோர்கூறுகிறார்.

சூரியனுடன்-சனிசேர-குடும்பஸ்தானத்திலிருந்து 3-ஆமிடத்ததிபனையும், சூரியனையும், இலக்கினத்தையும், 4-ஆமிடத்தையும், சனிபார்க்க-பலமற்றுயிருக்க நீக்கோள்கள்-உச்சமாக, தாய்க்கு அறிட்டமென முன்னோர் கூறுகின்றனர்.

இலக்கினத்தில் - சந்திரனும் — சுக்கிரன் மூன்றிலும் இவர்க்கு 7-ல் 5-ஆமிடத்ததிபன்நிற்க, அவருடன் சூரியனும், 3-ஆமிடத்தோனும்நிற்க, பகை-நீசமாக, இவரை-சனிபார்க்க, குடும்பஸ்தானத்தை அங்காரகன்பார்க்க, தாய்க்கு அறிட்டமென முன்னோர் கூறுகிறார்.

சுபக்கிரகங்கள் — மேஷத்திலும், இலக்கினத்திலும்நிற்க,மாதர்ஸ்தானத்தில்-சுக்கிரன்—புதன்-நல்லவர்களாகநிற்க, இவர்களுக்கேழில் சூரியன்நிற்க, சந்திரனுக்கு 7-ல், சனியிருக்க, தாயாருக்குத்தாயார் அறிட்டமாம். சுபக்கிரகங்களும்,நல்லசந்திரனும்நிற்கில், அன்னைக்கு அறிட்டம்செய்பாரென கூறுகிறார்

சனியும்-அங்காரகனும் 2-ஆமிடத்தையும், 4- ஆமிடத்தையும் பார்க்கில், ஜாதகமானசேய் விரையமாகும். அன்னைக்கு ஒருநோய்கானும், அதனால் அறிட்டமுண்டாம். வியாழன்பார்க்கில், அன்னைசில நாள் இருப்பாளென்று முன்னோர் கூறுகிறார்

4-ஆமிடத்தும், 2-ஆமிடத்தும் இருந்தவாகள், குடும்பாதிபன் பலத்தைப் பெற்றுயிருக்கில், அன்னைக்கு சவுக்கியமுண்டாம். 4-ஆமிடத்ததிபன் உச்சமாகி, அங்கிசத்தில் இருந்தால் குலத்துக்கொரு தண்டிப்பு உள்ளவளாக இருப்பாளென்று முன்னோர் கூறுகின்றார்.

சந்திரலக்கினத்திற்கு, 7—ல் செவ்வாய்நிற்கில், அன்னைக்கரிட்டமாம். மாதுர்தானத்திலும்-கடகத்திலும்-மகரத்திலும் - சந்திரன் நிற்கில், வயதுபூரணமாகும் இவருக்கு இரண்டுபுரமும் பொல்லாகிரகங்கள்நிற்க, சந்திரன் நடுவில்நிற்க, இவன்தாயாருக்கு அறிட்டமென முன்னோர் கூறுகிறார்.

மாதுர்ஸ்தானத்தையும், பிதுர்ஸ்தானத்தையும், சூரியன் - குருவுங்கூடி 6 - 8 - வியத்திலும் நீசமாகி நீசஸ்தானத்தில்நிற்க, பிறந்த சேய், தாய் தந்தைக்குப் பிரியமில்லாதப் பிள்ளையாவாளென்று முன்னோர் கூறுகின்றனர்.

மாதர்ஸ்தானத்திலும், பிதூர்ஸ்தானத்திலும், வியாழ நிற்கி னும், சந்திரனும் - சூரியனுங்கூடி மாதர்பிதூர்ஸ்தானங்களில் நிற்கி லும், இவன்தன் தாய்-தகப்பனுக்கும் மரணமுமுண்டாம். 4 - ஆமிடத் தோனும், 9 - ஆமிடத்தோனும் பலநிருக்கில், பாலனுக்குப்பரிவுசொ ல்லென கூறுகிறார்.

4-ஆமிடத்தோனும், 9-ஆமிடத்தோனும், தனத்திலும் - பாக்கி யத்திலும் - இலாபத்திலும் சுகாமாயிருக்கிலும், அல்லது - உச்சத்தி லும், கேந்திரத்திலும், திருகோணங்களிலும் மேவிநிற்கில், தந்தை தா யார் மைந்தர் சந்தோஷமாக வாழ்ந்திருப்பாரென கூறுகிறார்.

ஒன்பதாமதிபதியும், ஜென்மாதிபதியும், நான்காமாதிபதி இவர் கள் மூவரும் பலமற்றுயிருக்க, இவன்தாய் க்ர்ப்பமாக யிருக்கும் நா ளில்மரிப்பாளெனமுன்னோர் கூறிகிறார்.

சந்திரனும் - செவ்வாயும் 6-ஆமிடத்தோனும்கூடி 4-ஆமிடத் தில்நிற்கில், இவன்தாய் சோரம்போவாள். 4-ஆமிடத்தோனும் 9-ஆ மிடத்தினும், ஓராமிடத்மோனும்கூடி கோணம் - சேத்திரங்களில் மே வ, தாயாருடையகட்டை நன்றுமெனை கூறுகிறார்.

10 - ஆமிடத்ததிபனும், 4 - ஆமிடத்தோனும், அங்காரகனும், 6 8 12-ல் நீசஸ்தானத்தில்நிற்க, இவனுக்குப்பங்கு மனையில்லையாம் மற்றகிரகக்கள் பலமுற்றுநிற்க, மனைபங்குலாபமுமுண்டாம். 4-ஆமிட த்தோன் உச்சம் பெரில் மாடகூடமுண்டாமெனை கூறுகிறார்.

4-ஆமிடத்தோன் - சத்துருவீட்டிலும், நீசத்திலும்நிற்க, வியத் தானதிபதி - தனஸ்தானத்தில்நிற்க, ஜென்மத்தில் - சூரியன்நிற்க, 4-ஆமிடத்தோனுடன் நல்லோர்கூட, அல்லது - நோக்க, இவன்தன் பங்குமனையாவும் பரிபோமெனை கூறுகிறார்.

6-ஆமிடத்ததிபன் 10-7-ல்நிற்க, 9-ஆமிடத்தில்-சன்மத்திலும்- அங்காரகன்நிற்க, சுபக்கோள்பார்க்க, அல்லது - சேர, சத்துருவாயு ள்ள மனைகளெல்லாஞ் சேருமென கூறுகிறார்.

4-ஆமிடத்ததிபனும் - இலக்கினதிபதியும்கூடி 4-ஆமிடத்தில் நிற்க, இவன் ஒருவர்விட்டிலுருந்துவாழ்வன். 4-ஆமிடத்தோனுடன்

சேரும்பாவர் யெத்தனையோ அத்தனைவீடுகட்டி சேதமாகுமென

இலக்கினாதிபதி பலமற்ற 6-ஆமிடத்திலும், 4 - ஆமிடத்திலும் நிற்க, ஜன்மத்தைப்பாபர்காண, இவனுக்கு மனையில்லையென முன்னோர் கூறுகிறார்

வியஸ்தானாதிபதி 2-ஆமிடத்தில்நிற்க, வீடுகட்டி சகலபாக்கிய முஞ்சேர்ப்பன். வியஸ்தானாதியோடு எத்தனைகிரகங்கள் சேருகின்றதோ அத்தனை வீடுகட்டிச் சமர்த்தனாகவாழ்வானென கூறுகிறார்.

ஜெனனமான இராசி சரமாகில், பரதேசசஞ்சாரஞ்செய்குவன் அதில் சந்திரன் நிற்கில், சுதேசந்தன்னில்வாழ்வன். உபயராசியாகில், பரசேத்தில் சிலநாளும், சுதேசத்தில் சிலநாளுமாய் சஞ்சாரஞ் செய்குவானென முன்னோ கூறுகின்றார்.

12-ஆமிடத்தோன்வீடு சுபர்வீடாக, இவன் அரசரைசேர்ந்து வாழ்வன், திரராசியோன் வீடாகி இலபாதிக் குரவுபெற்றயிருக்கில், குஸ்தரர் மனைக்கு அருகில் வாழ்வானென் கூறுகின்றார்.

12 - ஆமாதிபன்-மாதுர்ஸ்தானம் - சகோதரஸ்தானம் - பிதுர்ஸ்தானம் - களஸ்திரர்தானம் — புத்திரஸ்தானம் இவைகளில்போய் நிற்கினும், 10-ஆமிடத்தாதிபனுடன் சேரினும், அவரவர்விடுதி அவரவர்களுக்குக் கிடைக்குமெனை முன்னோர் கூறுகிறார்.

பரவிஷயம்.

4-ஆமிடத்தை பாபக்கிரகங்கள் மருவிநிற்க, அல்லது - நோக்க, ஜென்மாதிபதிபலத்திருக்க, சுபக்கிரகங்களோடுகூடியிருக்க, அவர்கள் பார்வையுர, இவன்தன் விஷயம் பரவிஷயமெனக் கூறுகிறார்.

ஜென்மாதிபதி, 4-ஆபாதிபதி, பாக்கியாதிபதி இவர்கள் மூன்று பேரும், 6-ஆமிடத்தைச்சேர்ந்திருக்க சூரியன - அங்கிசத்தில் திடமாகநிற்க, 6 - ஆமாதிபனுடன் - பாம்பிருக்க, அல்லது - சனியுடன் மெவ, இவன்பரவிஷயமுள்ளானென முன்னோர் கூறுகின்றார்.

4-ஆமிடத்தாபனும், 6 - ஆமிடத்தாதிபனும், உடலைப்பற்றியும் பலாகவிரைந்துக்கூடினும், சந்திரனும்-சுக்கிரனும்-துர்ப்பலராக வி

ருக்க, 4-ஆமிடத்தை-பாவக்கிரகங்கள்நோக்க, 4-ஆமிடம் சந்திரன் விடாகிநிற்க, அவரோடு சுருங்கோள்கூட, ஜன்மாதி 4-ஆமாதி, 6 ஆமாதி, 9-ஆமாதி இவர்கள் நால்வரும் 7-ஆமிடத்தில் கூடியிருக்க, இவன பரவிஷயமாவானென முன்னோர் கூறுகிறார்.

சந்திரனையும், ஜென்மராசியையும், பாபக்கிரகமும், சூரியனும் நோக்க, சூரியனும்-சந்திரனும் 9-ஆமிடத்தில்நிற்க, பிறந்தசேய் பரசாதகனாவானென முன்னோர் கூறுகிறார்.

இலக்கினத்தில் சூரியனுஞ்-சந்திரனும்நிற்க, சூரியனும்-வியாழனும், நீசனாய், சனிவங்கிசத்திலிருக்க, பிறந்தசேய் பரசாதகனென முன்னோர் கூறுகின்றனா

ஞாயற்றுக்கிழமையில் சோதிநக்ஷத்திரத்தில் சந்திரன் திசையிலும், புதன்கிழமை ரேவதிநக்ஷத்திரம் இராகுதிசையிலும், அஸ்தமி நக்ஷத்திரமாகிப்பிறந்தசேய் பரசாதகனாவானென கூறுகிறார்.

சனிக்கிழமை அவிட்டநக்ஷத்திரத்தில் துவாதசியில் இன்னாளில்பிறந்தவன் பரசாதகனாவானென கூறுகிறார்

சூரியன் இருக்க, செவ்வாயங்கிசத்தில் அங்கிசாதிபதி வீடுஇலக்கினமாக, இலக்கினத்தை அங்காரகன் பார்க்க, இவன் தன் சிரசு பொடிப்படுமென கூறுகின்றனர்.

மூன்றாமிடத்ததிபன் சனியுங்கூடி, 5 - ஆமிடத்தைசூழினும், சூரியன் 6-5-4 இவ்விடங்களில் நிற்கில், இவன்தாய்போமென முன்னோர் கூறுகிறார்.

மாதுர் - பிதுர்த்தானாதிபதிகள், தன்மனைமாரி வலுகுறைந்து அஸ்தமனமாகவிருக்க, அன்னைமரணமாவானென முன்னோர்கள் கூறுகின்றனர்.

நான்காம்பாவபலன்

முற்றிற்று.

அ-ஆமிடம் மீனம் ஆயுள் வியாதி அபமிருத்து	கூ-ஆமிடம் மேஷம் தருமம் பிதாபிரபத்துவம் பாக்கியம் குரு	௰-ஆமிடம் ரிஷபம் கேந்திரம் கருமம் சிவனம் கீர்த்தி ஆதாரம்	௰க-ஆமிடம் மிதுனம் சிரேஷ்டபிராதர் இலாபம் இஷ்டடம்
எ-ஆமிடம் கும்பமகேந்திரம் களத்திரம்காமம் மாரகம் நித்திரை	5-வது, சிங்க லக்கின மானால் இந்தசக்கரத்தை கொண்டு-இராசிவிபரமறிந்துக்-கொள்ளவும்.		கஉ-ஆமிடம் கடகம் விரையம் சயனம் மோக்ஷம் அனித்தியப்போய்
சு-ஆமிடம் மரகம் ரோகம் சத்துருசோரம் சிறை வழக்கு			சிங்க லக்கினம். கேந்திரம்ஆண்ராசிஸ்திர ராசி நாற்கால்ராசிநிலையுதையராசி
தனுசுதல்வர் புமாதுலன் பிதா ஞானம் புண்ணியம்	ச-ஆமிடம் விருச்சகம்கேந்திரம் தாயார் கல்வி பூமிபந்து சுகம் வியாபார	ங-ஆமிடம் துலாம்சகோதரம்வெற்றிகேள்விகாது அடிமை	உ-ஆமிடம் கன்னிநேத்திரம் வாக்குதனம் முகம் குடும்பம்

3909

ஐந்தாம்பாவம்

பிதாபலன்.

5-ஆமிடத்தில் - சனிநிற்க, அங்காரகனோடு - சூரியன்கூடிநிற்க சுபர்கள் நோக்க, பல்னில்லையாம். பூசகத்தில் சுபர்நடுவே நிற்கில், அன்னைக்கன்னை அறிட்டமாம், மிஞ்சிப்பிழைக்கில், தந்தைக்கரிட்டமென முன்னோர் கூறுகிறார்.

ஜென்மலக்கினத்தில் நிற்கும் ஜன்மாதிபதியோடு 5-ஆமிடத்ததிபன்நிற்க, அல்லது - பார்க்க, ஒருவாஸ்தானத்தில் ஒருவர்மாறிநிற்க பெருமையாக புதல்வர்கள் பிறப்பாரென கூறுகின்றனர்

5-ஆமிடத்திலிருப்பவர் தோஷம்பார்க்கவேண்டில், சனியாகில், குழவிக்கும், தந்தைக்குமாம். சந்திரனாகில், அன்னைக்காம். புதனாகி லும், அன்னைக்காம். சூரியனாகில், தந்தைக்காம். கருங்கோளாகில், சுதனுக்காம. செவ்வாய்-கடகத்திலிருக்க, அம்மானுக்காம். சூரியன் 5-ஆமிடமேவ, இவனுக்கு சந்தானம் மத்திபமென கூறுகிறார்.

5-ஆமிடத்ததிபன், 5-ஆமிடத்தில் நிற்காமல், நோக்கில்லாமல், பகையுமில்லாமல், சுபாங்கிசத்தில் பதிந்துநிற்கில், ஆயுசுவுண்டாம். 5-ஆமாதிபன் ஆனில், தன்பதியில்நிற்கில், இவனுக்குப் புத்திரர்அற் பமாமென முன்னோர் கூறுகின்றனர்.

புத்திரதானாதிபதி யோகவானாய் புதன் வீடுயேற, புத்திரரில்லை யாம். நல்லோர்கூடிநிற்கில், புத்திரர்பிறந்து மரிப்பார். பாவர்சேரில், மகவில்லையாம். ரிஷபம்-கும்பம் உரையாகப் பிறந்தவர்களுக்கு மகவி ல்லையென முன்னோர் கூறுகின்றனர்.

7-ஆமிடத்தோன் உச்சம்பெற்று நீசமடையாமல் நிற்கில், முத் தாளுக்குப் புத்திரனில்லையாம். 7-ஆமிடத்தோன் உச்ச நீச்சமானா லும், அங்கிசத்திலிருந்தாலும், இளையாளுக்குப்புத்திரருண்டா மென முன்னோர்கள் கூறுகின்றனர்கள்.

5-ஆமிடத்தில் சூரியனோடு இராகு கூடியிருக்கில், தந்தைக் கும், மைந்தனுக்கும் பகையாம். திரவியசேதமோடு தேசாந்திரம் திரிகுவானென முன்னோர் கூறுகிறார்.

இலக்கினாதிபதியுடன் 4-ஆமாதிபன் உறவாகக்கூடியிருக்க, தந் தைக்குபின மைந்தர்கள் மிக்க செல்வமாக மேவுவாரென முன்னோர் கள் கூறுகிறார்.

இலக்கினத்தில் அங்காரகனும், இவர்க்கேழில் சனியும், 12-ஆ மிடத்தில் சூரியனும் குலவிநிற்க, ஆண்-பெண்-இரண்டுமில்லையாம். 5-ஆமாதிபன் 7-9-ல் பாவனாகில், புதல்வரில்லையாமென முன்னோர் கூறுகின்றனர்.

புத்திரஸ்தானமிருக்கும் அங்கிசத்தைத்தொட்டு இலக்கினம்வ ரைக்கும் யெண்ணி கண்டலக்கம் யெத்தனையோ அத்தனை புதல்வர் பெறுவாரென்று கூறுகிறார்.

யோகஸ்தானத்தில் சந்திரன்நிற்க, அவர்க்கு 7-ல் சூரியன்நிற்க சனிக்கு 7-ல் புதன்நிற்கினும், அல்லது இரட்டைராசியில் சூரியன் மேவினும், அவரை செவ்வாய்பார்க்க, யோகம் மூன்றென முன்னோர் கூறுகின்றனர்.

உதையராசியினும், ஒற்றைராசியிலும் சூரியன்நிற்க, இரட்டைராசியிலும், ஒற்றைராசியிலும் சந்திரன்நிற்க, அங்காரகனும்-புதனும் பார்க்க, சந்திரனும்-சனியும் அம்சிசத்திலும், இலக்கினத்திலும் நிற்க இவன்தனக்கு நவியுண்டாமெனக் கூருகின்றனர்.

அட்டமாதிபதி 5ஆமிடத்திலிருக்க, 5-ஆமிடத்தாதிபதி 8-ஆமிடத்திலிருக்க, சுபர்நோக்குயிலலாதிருக்க, புத்திரரில்லையாம். 5-ஆமிடத்தோன் வியத்திலும் 6-8-லும் இருக்க, மைந்தரில்லையென முன்னோர் கூறுகிறார்கள்.

மைந்தர்ஸ்தானத்தில் சனிநிற்க, அந்தஸ்தானம் புதன்வீடாக, அதனில்சனியும்-அங்காரகனும் அமர, அல்லது-பார்க்க, 5ஆமிடத்தோன்நோக்க, இவன்தத்துபுத்திரனாக வாழ்வானென்று முன்னோர்கள் கூறுகின்றனர்.

மீனலக்கினத்திற்கு 5-ஆமிடத்தில் சூரியன் உச்சமாக நிற்க, பெண்பிள்ளைகள் பெருவன். 5-ஆமிடத்தோன்-அங்காரகன் 6-ஆமிடத்தோன் இவர்கள் மூவரும் நேசமில்லாமல்பார்க்கில், இவனுக்கு சத்துருக்களால் பீடைவருமென முன்னோர் கூறுகின்றனர்.

4-ஆமிடத்தில்சுக்கிரனநிற்க, மாதுர்ஸ்தானத்தில்சூரியன்நிற்க, சனியோடு சந்திரன் பிதுர்ஸ்தானத்தில் நிற்க, தாயாருடைய கரத்தால் குழவியிறந்துவிடும். 5-ஆமிடத்தில் சுக்கிரன் மூர்க்கனாகயிருக்க, தீதாமென் கூறுகிறார்.

புத்திரஸ்தானதிபதியும் - சந்திரனும்-சுக்கிரனும் இவர் மூவரும் மாதுர்ஸ்தானத்தில் நிற்க, இராகு உயிரில் நிற்க, மாதுர் அம்சிசத்தில் நின்றோர்களை நேயமில்லாத கிரகங்கள்பார்க்க, பெண்பிள்ளையே பெறுவாரென முன்னோர் கூறுகின்றனர்.

சந்திரனின்ற ஸ்தானத்திற்கும், இலக்கினத்திற்கும், 5-ஆமிடத்தில் பிதுர்காரகன்நிற்க, சுபக்கிரகங்கள்பார்க்க, சிறுபாலரில்காரியம் முதற்கெடுமென கூறுகின்றனர்.

புத்திரஸ்தானத்திற்கு 5-ஆமிடத்தில் கேது நிற்க, அல்லது-இராகு நிற்க, ஜென்மாதிபதி 5-ஆமிடத்தில் நிற்க, வாலிபத்தில் மைந்தர்களைப்பெற்று வாழ்வாரென கூறுகிறார்.

ஜென்மாதி 7-ல்-நிற்க, 4-ஆமாதியும், 7-ஆமாதியும் ஒரு வீட்டில் நிற்க, அரவோடு 2-ஆமாதியும் சனிவீடாக பிறந்தசேய் சமர்த்தனாக வாழ்வன். 2-ஆமிடத்தோன் 5-ல்-நிற்க, மகவுண்டாமெனக் கூறுகிறார்.

5-ஆமிடத்தாதிபன் ஸ்புடத்தில் சனிவாங்கிய இராசியினில் சூரியன்நிற்க, புத்திரனுண்டாம். சூரியன் ஸ்புடத்தில் அங்காரகன் வாங்கிய இராசியில் சனிவரும்போது திரேகமிராதென கூறுகின்றனர்.

5-7-9-வியத்தில் இவ்விடங்களில் ஒன்றில் நட்பு-ஆக்ஷி-உச்சமாகயிருக்க, நிருபன் மதியைக்காண, தந்தைக்கு அதிக செல்வமுள்ள புத்திரன் பிறப்பான். சந்திரனை சுக்கிரன்காண, வெகு போதகனாக இருப்பானென கூறுகின்றனர்.

போகாதிபதி, 5-ஆமாதிபதி, இலாபாதிபதி இவர்கள் பொருந்திமித்துருவாகயிருக்க, 5-ஆமாதி உச்சனுப் சுபனுப் மோகமாய் இலாபத்திலிருக்க, முறைதவராதபுத்திரனும். 5-ஆமாதியோடு யெத்தனை கிரகம் கூறுகின்றதோ அத்தனை புதல்வருண்டாமென கூறுகிறார்.

5-ஆமாதிபனும்-சூரியனும்-அனுகில், வெகுபுத்திருண்டாம். 5-ஆமாதிபனும்-பாம்பு-8-ல்-கூடிநிற்கில், தத்துபுத்திரனுவன். 5-ஆமாதிபனுடன் பாம்பு சூரியனுங்கூடில், மிருகம் போலிருப்பானென கூறுகின்றனர்.

மிதுனம் இலக்கினமாக, துலாத்தில் அங்காரகனிருந்திட, இவன் கர்த்தை முன் மூவருக்கும் விரோதமாக யிருப்பன். பொல்லாதவஞ்சகராவர். கிரகங்கள் இப்படி நிற்காதிருக்கில், சுகமுடன் வாழ்வாரென கூறுகிறார்.

10-ஆமிடத்திறைவனை 5-ஆமிடத்தாதிபன்பொருந்தியிருக்கில், புண்ணியவானுய் உத்தமர்வீட்டு புதல்வனுப் வருத்தமின்றித் தனந்தேடி வாழ்குவானென கூறுகிறார்.

5 - ஆமிடத்தாதிபனும், அங்காரகனும்கூடி 5-ஆமிடத்தில்நிற்க, சனிநோக்க, இவன் தத்துபுத்திரனுவான். 5-ஆமிடத்ததிபனும், அங்காரகனும். சனியும், இலாபத்தில்நிற்க, அங்காரகன்பார்க்க, அல்லது நிற்க, இவன் அன்னியர்களிடத்தில்போய்வளர்வன். சனிஅமிசத்தில் நிற்க, சூரியன் 5-ஆமிடம்யேற, புத்திரரில்லையென கூறுகின்றனர்.

5-ஆமிடத்ததிபதி சூரியன் சனியினுடைய அங்கிசமேறி சனி பார்த்திடவும், அல்லது - 5-ஆமிடத்தில் அமரவும், இவன் பரவிஷய புதல்வனகப்பிறந்து வல்லவனகவாழ்வான். 5-ஆமிடத்தில் அங்காரகனும், சனி அங்கிசத்திலும்சூழ, இவன் கருச்சுரோணிதன மென முன்னேர் கூறுகிறுர்.

இலக்கினத்தில் சந்திரன்யிருக்க, 6-ஆமிடத்தில் சுக்கிரனநிற்க இவன்தனக்கு புதல்வரனேகருண்டாம். சூரியனும் சந்திரனுங்கூடி, இனிமையாக கேந்திரத்திலிருக்க, பிதருக்கு உரிமைபொன் முஞ் செய்யான். உபயராசியாகில், மரணகண்டம் இரண்டு வருமென முன்னேர் கூறுகிறுர்.

சுபக்கிரகங்கள் 5-ம் வீட்டைப்பார்க்க, அல்லது - 5-ஆமிடத்தோனுடன் இராகுவிருக்க, இவனுக்கு நாகசாபத்தினல் புதல்வரில்லையாம. நாகப்பிரதிஷ்டைசெய்ய மைந்தருண்டாம். கேந்திரகோணத்துள் அல்லலாய் சுபக்கிரகங்கள் சுற்றிலும்பார்வையிருக்குமாயின் மைந்தரில்லையாம். ஜெபம்செய்ய மைந்தாருண்டாமென முன்னேர் கூறுகின்றனர்.

5-ம் வீட்டாதிபனுடன் 6-ஆமிடத்தோன்கூடி சுபக்கிரகம்பார்க்க, இவன்தனக்கு அண்டாத சத்துருவின் சாபத்தினல் மகவில்லையாம். 5-ம் வீட்டில் 5-ஆமாதிபதி மீண்டனகவிருக்க, இவரை சுபக்கிரகங்கள்பார்க்க, தெய்வசாபத்தினல் புத்திரயாகஞ் செய்வானென முன்னேர் கூறுகின்றனர்.

4-ஆமிடத்தும் தீயோர்கள்நிற்க, அந்தஅதிபனுடன் சனிகூட, 12 - ஆமிடத்தில் பாவக்கிரகங்கள் பற்றி நிற்க, இவனுக்கு சாபத்தினல் புதல்வரில்லையாம். ஓமங்கள்-ஜெபங்கள் அனேகமாகச் செய்விக்கும், அதனல் மைந்தருண்டாமெனக் கூறுகிறுர்.

2-ஆமிடத்திலும், 12 - ஆமிடத்திலும் சுபர்கள்நிற்க, அது பாவர் மனையாக, பாக்கியாதிபதி வியஸ்தானத்திலிருக்க, 5 - ஆமிடத்திலும், ஜென்மத்திலும் பாவர்கள்நின்று அஸ்தமனமாகிக்கூடில், புத்திரரில்லையாமெனக் கூறுகிறார்.

ஜென்மத்திலும், வியத்திலும், 8 - ஆமிடத்திலும், சனி நிற்க, மீனத்தில் பாபக்கிரகங்கள் நிற்க, புதல்வரில்லையெனச்சொல்லவும். 10 - ஆமிடத்தில் சுக்கிரனும் நிற்க, அல்லது - 10 - ஆமிடத்திலும், 8-ஆமிடத்திலும்இராகுநிற்க, 5-ஆமிடத்தில்8-ஆமிடத்ததிபன் நிற்க, பாபக்கிரகங்கள் ஜென்மத்தில்நிற்க, புத்திரரில்லையெனக் கூறுகின்றார்.

புத்திர காரகனுடையஸ்புடத்தையும், 5 - ஆமிடத்தாதிபனுடைய ஸ்புடத்தையும்கூட்ட, அதில் வியாழன் வருங்காலில் மதலை தோன்றி இராசிஅங்கிசமட்டும் மேஷமுதலாக யெண்ணிப்பார்க்கில், பாபர் நின்றதேசமாம் பிறந்தசேயென முன்னோர் கூறுகின்றனர்.

5-ஆமிடத்தில் சந்திரன்நிற்கில், பிறந்தசேய் ஒன்றும் பிழைக்காதென முன்னோர் கூருகின்றனர்.

9-ம் வீட்டிற்குடையவன் குருவாநிற்க, சனி அவரைநோக்க, புதனோடு சூரியன்கூடில், பிறந்தசேய்தன்னை அன்னியர் வேறுவாரென கூறுகிறார்.

5-ஆமிடத்திற்கதிபன் பாவனாகி, 6-8 - 12-ல் சூரியனோடு கூடினும், அல்லது - சுபர்கள் திருஷ்டியுரினும், 5-12-2-ல் நிற்கினும் நாசமாமெனக் கூறுகிறார்.

புத்திரஸ்தானாதிபதியும், 7-ஆமாதிபதியும், கேந்திரகோணத்தில் பாவராகிநிற்க 6 – ஆமிடத்ததிபன் அவரையடுத்தாலும், அல்லது பார்த்தாலும், சுத்தமாகப்புத்திரரில்லையெனக் கூறுகின்றனர்.

ஐந்தாம்பாவபலன்

முற்றிற்று.

௭-ஆமிடம் மீன கேந்திரம் களத்திரம்காம மோகம் நித்ரை	௮-ஆமிடம் மேஷம் ஆயுள் வியாதி அபமிருத்து	ரிஷபம் பிதா கருமம் பிரபுத்துவம்பாக்கியம் குரு	௰-ஆமிடம் மிதுனம் கேந்திரகருமம்-சீவனம்கீர்த்தி ஆதாரம்
௬-ஆடம் கும்பம் ரோகம் சத்துரு சோரசிரை வழக்கு	6-வது. கன்னிலக்கின மானல் இந்த சக்கரத்தை கொண்டு இராசி விபரமறிந்துகொள்ளவும்.		௰௧-ஆமிடம் கடகம் சிரேஷ்டபிராதர் லாபம் இஷ்டம்.
௫-ஆமிடம் மகரம் - புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்			௰௨-ஆமிடம் சிங்கம் விரையம் சயனம் மோக்ஷம் அனித்தியம் நோய்
௪-ஆமிடம் தனுசு-கேந்திரம் தாயார் கல்வி பூமி பந்துசுகம் வியாபார	௩-ஆமிடம் விருச்சிகம் சகோதரம்வெற்றிகேள்வி காது அடிமை.	௨-ஆமிடம் துலாம் நேத்திரம் வாக்குதனம் முகம் குடும்பம்	கன்னி லக்கினம், கேந்திரம் - பெண்ராசி உபயராசி தலைஉதயம் இராக்குரு

ஆரும்பாவம்

வழக்கின் பலன்.

6-ஆமிடத்தில் நல்லோர்கள்மேவ, இவன்தன்தாய் அகத்தார்கள் வழக்கிட்டு தனத்தைப்பிரித்துக் கொடுமென ராஜாங்கமேறி அவர்கள் பக்ஷமாகக்கெலிப்பாரெனக் கூறுகிறார்.

சுபக்கிரகங்கள் நட்பு-ஆக்ஷி-உச்சம்பெற்று 6-ஆமிடத்தில் நிற்கில், புவியில் வலியனாகயிருப்பன். இவனைக்கண்டவர்கள் யாவரும் விகாதமாகச்சொல்வர். தன்வம்மிசத்தோர்களை மெலியசெய்விப்பானென கூறுகின்றார்.

6-ஆமிடத்தில் கடினமாகியதீக்கோள்நிற்க, இவன் யெல்லாருக்கும் பொல்லாதவனுகி தங்கள்வம்மிசத்திற்கெல்லாம் மிடியனுகியும் உலகில் யாவருமபுகழ வாழ்வானென முன்னோர் கூறுகிறார்.

6-ஆமிடத்தில் மருவியதீக்கோள்களின் வலுவினால், இவன் சிங்கத்தைப்போல யாவருங்கண்டு அச்சங்கொள்ளும்படி தீரனுகவும், இவனுக்கு யெதிரியான சத்துருக்கள் இவன்தனக்குக் கைகூப்பி நிற்கவும், குபேரனைப்போல் செல்வமுண்டாகி வாழ்வானென முன்னோர்கள் கூறுகிறார்.

கருங்கோளாகிய இராகு 6-ஆமிடத்தில்நிற்க, இவனுக்குகாலில் விலங்குவந்து தடையாகநீங்கும் யாவரும்போற்றக் கூத்நிமானுகவும் யிருப்பன். தேள்முதல் பலவிஷங்களும் இவனைதீண்டாதென முன்னோர் கூறுகின்றார்.

6-ஆமிடத்ததிபன் பாவனுகி கேந்திரத்திலிருக்க, இவனை உலகத்திலியாவரும் போற்றப்பிரதாபனுகவும் கொடியோர்களுக்கு மிண்டனுககூறுவானெனக் கூறுகிறார்.

6-ஆமிடத்ததிபனும், இலக்கினுதிபனும், சூரியனுடன் கூடிநிற்கில், சுரகெண்டம்வரும். சந்திரனுடன்கூடில், ஜலகண்டம்வரும். அங்காரகனுடன்கூடில், ஆயுதகண்டம். சனிகூடிநிற்கில், சோரர்களால்வருங்கண்டம். சுக்கிரன்கூடில், ஸ்ரீகளால்வருங்கண்டம். அரவு கூடில், விஷத்தினுல்வருங்கண்டமென முன்னோர்கள் கூறுகிறார்.

ஜென்மாதிபதியும், 4-ஆமாதிபதியும், தனுதிபதியும், அட்டமாதிபதியை 6-ல்-கூடில், அஜீரணத்தால்வருங்கண்டம் இலக்கினுதியோடும், வாகனுதியோடும், சனிகூடில், விஷபக்ஷணத்தால்வருங்கண்டம் 4-ஆமாதியுடன் சனிசேர்ந்து ஜென்மலக்கினத்தில்நிற்க, பெரியவிஷபக்ஷணத்தால்வருங்கெண்டமென கூறுகின்றனர்.

இலக்கினுதியோடும், வாகனுதியோடும், பாம்புகூடில், பந்தனமான மரணம்வரும். நல்லோர்வீடாகி இலக்கினுதிபதி 7-ம் வீட்டில் ஏகிநிற்க, 7-ஆமிடத்ததிபன் இலக்கினத்தில்நிற்க, இவன்தன் ருதைக்கும்-தாய்க்கும் மரணம்பண்ணுமென கூறுகின்றனர்.

பெருமைதாழ்ந்த 6-ஆமதிபனோடு பெரும்பாவராகியகிரகங்கள் கூடி, இலக்கினத்திலும், 8-ஆமிடத்திலுமிற்க, இவன்தனக்கு சித்தப்பிரமைகொண்டு அங்கத்தில் விரணமுண்டாகும். உருமையுள்ள அவரவர் ஸ்தானங்கள் 8-லு மிருக்கில், மேற்கூறிய பிணிபென்று சொல்லவும். தாயார் தகப்பனர் பிரர்தாய் மைந்தர் இவர்களுக்கும் இவ்வாராக ஸ்தானங்களைக்கண்டு சொல்லவேண்டுமென முன்னோர் கூறுகின்றனர்.

6-ஆமிடத்தில் சுபக்கிரகங்கள்மேவ, 6-ஆமிடத்ததிபன் கேந்திரத்திலிருக்க, சுபகிரகங்கள்பார்த்திட, உபகாரங்கள்செய்வன். ஒருக்காலமும் நலிவில்லாமல்வாழ்வன். தீக்கோளாகினும் நன்மையடைந்து எதிரிகளுக்கு யெதிரியாவானெனக் கூறுகிறார்.

சூரியனும் சனியும் ஒருவர்க்கொருவர் இசைந்துப்பார்க்கில்பிறந்தசேய் அலியாம். சனிநோக்கினும் அலியாம். அங்காரகன் இரட்டைராசியிலும், ஒற்றைராசியிலும், சந்திரலக்கினத்திலுமருவ, சந்திரன் அங்கிசத்தேயிருக்க, சூரியன்நின்றவீடு சுக்கிரன்வீடாக பிறந்த சேய் அலியாமென கூறுகிறார்.

ஜென்மத்தில் சந்திரனிருக்க, சூரியன்-புதன்-சந்திரன் - மூவருமிரட்டைராசியிலிருக்க, மற்றகிரகங்கள் இம்மூவரையும்அங்காரகன் நோக்க, மாதர்களை இகழுவானென முன்னோர் கூறுகின்றனர்.

ஆறும்பாவபலன்

முற்றிற்று.

௬-ஆமிடம் மீனம் ரோகம் சத்துரு சோரம்பிணி வழக்கு	௭-ஆமிடம் மேஷம் கேந்திர களத்திரம் காமம மாகரம் நித்திரை	௮-ஆமிடம் ரிஷபம் ஆயுள் வியாதி அபமிருத்து	௯-ஆமிடம் மிதுனம்- பிதா தருமம்- பிரபுத்துவம் பாக்கியம் குரு
௫-ஆமிடம் கும்பம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்.	7-வது, துலாம் லக்கினமானால் இந்தசக்கரத்தை கொண்டு- இராசிவிபரமறிந்துக்-கொள்ளவும்.		௰-ஆமிடம் கடகம் கேந்திரம் கருமம் சீவனம் கீர்த்தி ஆதாரம்
௪-ஆமிடம் மகரம் கேந்திரம் தாயார் கல்வி பூமி பந்து சுகம் வியாபாரம்			௰௧-ஆமிடம் சிங்கம் சிரேஷ்டப்ராதுர் இலபம் இஷ்டம்
௩-ஆமிடம் தனுசு சகோதரம் வெற்றி கேள்வி காது அடிமை	௨-ஆமிடம் விருச்சிகம் நேத்திரம் வாக்கு முகம் தனம்குடும்பம்.	துலாம்லக்கினம் கேந்திரம் சரராசி ஆண்ராசி இருகால்ராசி பகற்செவிடு	௧௨-ஆமிடம் கன்னி விரய சயனம்மோக்ஷ அனிதயம் நோய்.

ஏழாம்பாவம்

களத்திரபலன்.

ஜெனனகாலத்தில் சுக்கிரனோடு வியாழன்கூடில், இராஜ கன்னிகையாம். சூரியனும் அங்காரகனுங்கூடில், க்ஷத்திரிய ஸ்திரியாம். சந்திரனும் புதனுங்கூடில், வைசியகுலமாதாம். சனிகூடில், சூத்திர கன்னிகையாம். பாம்புகூடில், புலைபர்குலத்திற்பிறந்தகன்னிகையாய் பெருமையோடு இருப்பாளென முன்னோர் கூறுகிறார்கள்.

களத்திரதானாதிபனைக்கூடி எத்தனைக்கோள் நிற்கின்றதோ அத்தனை களத்திரமுண்டாம். களத்திரகாரகன் சுபனாய் உற்றிடக்காண, உத்தமம் பாவர்கள்காண, மத்திபமாம். இராகு-கேதுகள் இருவரில்

ஒருவர் களத்திரஸ்தானத்தில் உற்றிடக்காணில், உத்தமமென முன்னோர் கூறுகிறார்.

களத்திரலக்கினாதி கலந்து தன்மனையில் நிற்கில், இவன் பல்ஸ்திரிகளைகூடியபின் விவாகமாகும். களத்திராதிபதியும், குடும்பாதிபதியும், பாவர்களும், வெள்ளியுங்கூடினும், 3-1-6-ல் மருவிநிற்க, மனையாளுக்கு ஈனமுண்டாமென கூறுகிறார்.

இலக்கினாதிபதியீனமாகி, 7-ஆமாதிபனுடன்கூடி, வியத்திலும் 6-8-லும்-நிற்க, விவாகமில்லையாம். 7-ஆமிடம்சுத்திபாக, 7-ஆமிடத்ததிபனோடு ஊனமில்லாகிரகங்கள் கூடி நிற்கில், விவாகமொன்றுயெனக் கூறுகிறார்.

சுக்கிரனும் அங்காரகனும் 7-ல்-நிற்கில், விதவை வஸ்திரியை மணம்புரிகுவான். சந்திரனும் அங்காரகனும் 6-ஆமாதிபும்கூடி 4-ஆமிடத்தில் நிற்க, அல்லது-மாதர்ஸ்தானத்திலும், ஜென்மத்திலும், 9-6-லும், இன்னார்களும் கூடிநிற்கில், இவன் தனக்கு மாருவிஷயமுண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

7-ஆமிடத்தில் பாவர்கள்நிற்க, இவன்களத்திரத்திற்கு ரோகமுண்டாம். சூரியனோடு பாம்புகூடி, 2 - ஆமிடத்தில்நிற்க, வெகுநோய்க்காட்டும். 2-ஆமிடத்தை பாபர்கள்பார்க்கில் - நிற்கில், பிணிகொண்டு வாழும். குடும்பம் யேழைபாகுமென கூறுகிறார்.

7-ம்-வீட்டிற்கதிபன் சரராசியில் நிற்கில், இவன்தனக்கு தாரம் இரண்டுடன்வாழ்வன். உபயராசியில்நிற்கில், மாதர்கள்பலருண்டாம் ஸ்தானத்தைநோக்கி அக்கோள்களால் பலன்கள்கூடும். இலக்கினத்தாதி சுக்கிரன்வீட்டில் சூழினும், அல்லது - சுக்கிரனைக்கூட, அல்லது - சுக்கிரன்பார்க்க, துய்யஸ்திரியுள்ளவனுமென கூறுகிறார்.

2-ஆமாதியும் சுக்கிரன் வாகனாதி இவர்கள் மூவரும் 6-8-12-ல் மேவி, சல்லாபமாகநிற்க, இவர்களை பாவர்கள்வந்துக்கூடில், இவன் மாலைசூட்டுங்கன்னிகை யில்லாளென கூறுகின்றனர்.

7-அமாதிபன் கேந்திரகோணத்திலுமிருக்க, இவன்தனக்கு யே கதாரமுண்டாம். சுக்கிரன் பாபருடன்கூடி ஜென்மத்திலும், 6-8-ம் இருக்க, வேசியர்க்குயினியமெமென முன்னோர் கூறுகிறார்.

7-அமாதியும், குடும்பாதியும் இவர்கள் கேந்திர திருகோணங்க ளில்நிற்க, அல்லது அவர்கள் மனேயில் பிரிபநாகயிருக்க, அனேகதா ரங்கள்செய்து வாழ்வானென கூறுகிறார்.

தாரககாரகனும் 7-அமாதிபனுந்தனித்துக்கூடிநிற்க, மத்தியிலும் 7-அமிடத்திலும், பாவர்கள்நிற்க, அல்லது - நோக்கவிருந்தால் பாரி யாளுக்கு அநிட்டம் பண்ணுமென்று முன்னோர் கூறுகின்றனர்.

சனியும் சூரியனுங்கூடி கன்னியில் நிற்க, அந்தவீடு ஜென் மலக்கினமாக, சூரியன் மீனராசியில் மேவிநிற்க, மனவியர்க்கு தன் பத்தோடு அநிட்டம்வருமென முன்னோர் கூறுகிறார்.

இலக்கினத்திற்கு 7-ல் சந்திரன்நிற்க, சந்திரனுக்கு 7-ல் சுபக் கிரகங்கள்பார்க்க, பொருத்தமான பெண்டீருண்டாம். பாபக்கிரகங் கள் தீண்டிநிற்கில், மணம்புரியாத வஞ்சகனாயிருப்பானென முன் னோர் கூருகின்றனர்.

7-அமாதிபனும் தாரகர்கள்நீசமாகி, வியத்திலும், 6-8-லும்நிற்க மனையாளுக்குநினமாம். சுக்கிரன்வீட்டிலும், சூரியன்வியத்திலும், 6-8-லும்-நிற்க, இவன்தன்மனவி யாவருக்கும் மீறினவளாய் இருப் பாளென முன்னோர் கூறுகிறார்.

7-அமாதிபன் பாவர்வீட்டில் நிற்கில்-பார்க்கில், இவன்தனக்கு விவாகம் தூரதேசத்திலாகும். களத்திராதிபன்சுபாங்கிசமேறிநிட்ட த்தில்அரும். 7-அமாதிபன் திசையைப்பிடித்து சொல்லவேண்டுமெ ன முன்னோர் கூறுகிறார்.

சூரியனுக்கு நடுவும், சந்திரனுக்கு தென்கிழக்கும், செவ்வாய் க்கு தெற்கும், புதனுக்கு வடக்கிழக்கும், குருவிற்கு வடக்கும், சுக் கிரனுக்குக் கிழக்கும், சனிக்கு மேற்கும், இராகுவிற்கு தென்மேற் கும், கேதுவிற்கு வடமேற்கும் இவ்விதமாக கிரகங்களின் திக்கைய றிந்து சொல்லவேண்டுமெனக் கூறுகிறார்.

7-ஆமிடத்தோன் - வியத்திலிருக்க, 8-ஆமிடத்தோன்-பாவனுக யிருக்க, இவர்களை தக்கக்கிரகங்கள் எத்தனைப் பார்க்கின்றதோ அத்தனை தாரங்களுண்டாம். களத்திராதிபன் ஒக்க பாவருடன் 7-ல் நிற்க, அவருடன் பாம்புகூட, அதற்கு கேந்திரத்தில் பாவர்கள் பார்த்திருக்க, இந்தசாதகனுக்கு நாலுதாரமெனக் கூறுகிறார்.

களத்திராதிபதியாகிய 7-ஆமிடத்ததிபன் சூரியனுடன்கூடில் அல்லது-6-8-வியத்திலிருக்கில், இந்தசாதகன் வாலிபத்தில் மனையாளை விண்ணுலகம் சேர்ப்பன். களத்திராதிபன் - நற்கோளுடன்கூடில், இவர்களை சூரியனும், வினைக்கிரகங்களும் பார்த்திடில், இவன்தன் களத்திரம் பாவியாகயிருப்பாளென முன்னோர் கூறுகின்றார்.

சனிபாவனுய், 7-ஆமிடத்ததிபனுகி, 6-8-12-ல் மேவி நிற்கில் இந்தசாதகன் விதவை ஸ்திரீயைச் சேர்வான். 7-ஆமிடத்ததிபன், 4-2-ல்-நிற்கும் பாம்போடு கூடினும் நாடினும், அல்லது-6-8-வியத்தில் தாவியிருக்க, ஈனகுலத்துமாதரைசேர்வானெனக் கூறுகிறார்.

7-ஆமாதிபன் - சனியின்வீட்டில்நிற்க, சனிபார்க்க அல்லது. 7-ஆமிடத்திலிருக்க, 9-ஆமிடத்ததிபன் 8-லாயினும், சனிவீட்டிலாயினும் பெருக்கவந்திருக்க, இந்த சாதகனுக்குவருமனைவியை பிறர்கள்சேரவிடுத்து, அதனுல்வரும் பொருளால் ஜீவனஞ்செய்துவாழ்வானெனனக் கூறுகின்றார்.

7-ஆமாதிபன் பிரபலனுகி, மித்துருக்களைக்கூடில், அல்லது-இலாபத்திலிருக்க, அதில்யெத்தனை கிரகங்களிருக்கின்றதோ அத்தனை மனைவியருண்டாம். அந்தகிரகங்களுக்குள்ள தேயத்திலிருந்து கிடைக்குமெனச்சொல்லவும். கிரகங்கள் உபயராசியில்நிற்கில், மனைவியர் சுபமுடனிற்பார் சரராசியாகில், சிலதுமனைவியர்களுக்கு அறிட்டம் நேருமென முன்னோர் கூறுகின்றார்.

கன்னியாராசி இலக்கினமாக, சந்திரனுஞ்-சனியும் கேந்திரத்திலிருக்க, மனைவியை சதமாகமணம்புரிந்துப் பூபதியாகவாழ்வான். 7-ஆமிடத்தில் சுக்கிரனும் சன்மத்தில் குருவும் அல்லவில்லாமலிருக்க, இந்த சாதகனுக்கு மனைவியர் அனைகர்கள் வரய்த்தும், ரக்ஷிக்க மாட்டானெனக் கூறுகிறார்.

ரிஷபத்தில்சுக்கிரன் - அங்காரகன் - சந்திரன்-சூரியன் இவர்கள் நாடி ஓரிடத்தில்கூடில், இந்தசாதகன் மனைவியில்லாமல் பிணிபனாக த்திரிகுவான். பிதுர்க்காரகனையச் சூரியனும், புதன்-சனி-வெள்ளி இவர்கள் நயக்துரில், மனைவி-மக்கள்களை ஓட்டிவிட்டு பிணியோடு தேசம் திரிவானெனக் கூறுகிறார்.

ஜென்மாதிபன் அங்கிசாதிபதிவீட்டில்நிற்க, களத்திர ஸ்தான த்தில்குருவந்திருக்க, இவன்தனக்கு மனமுண்டாம். ஜென்மத்திற்கு 7-ம் இராசி அங்கிசத்தில் குருபலவானய்வந்து நிற்கில் பாரியாளுண் டாமெனக் கூறுகிறார்,

குடும்பாதிபதியும், களத்திராதிபதியுங்கூடிப் பாவருடன் கன்ம ஸ்தானத்திலிருக்க சனித்தோன்றில், பரதாரத்தின் ஸ்திரீயின்சொல் கேட்டு இச்சிப்பன். 6-ஆமிடத்திலும், பாக்கியஸ்தானத்திலும் அட மாகநிற்கில், மேற்கூரியவாறு நடப்பானெனக் கூறுகிறார்,

சுக்கிரனும், 7-ஆமாதியும், 6-ஆமாதியுங்கூடி இவர்கள் மூவரும் ஒருவீட்டில்நிற்கில், மாதரில்லையாம். 2-ஆமாதி, 3-ஆமாதி இவர்கள் சேர்ந்து 6-8-12-ல் கூடியிருக்கில். ரோகம்காட்டுமென முன்னோர் கூருகின்றனர்.

ஜென்மாதியும், 7-ஆமாதியும், கேந்திரக்கோணத்தில் கூடியிரு க்க, அந்தவீட்டோன் இலக்கினத்தில்மேவ, பலவானாக அவர்திசையி லாதல்-புசிப்பிலாதல் இந்தசாதகனுக்கு மணங்கூடுமென முன்னோர் கூறுகின்றனர்.

சப்தமாதி - அட்டமாதியோடு பாவராயினும், சத்துரு துர்ப்ப லராயினும், சந்திரன்-வியத்திலும், சூரியன்-அங்காரகனுடன் கூடினு லும், இந்த சாதகனுக்கு ஒத்தவிவாகம் இரண்டென கூருகின்றனர்,

7-ஆமாதி, 2-ஆமாதி இவர்களிருவரில், யாவரேனும் ஒருவர் பலவீனராயிருக்க, அந்தவீட்டில் பாவர்கள்நிற்க, இந்த சாதகன்ம ணம் இரண்டுசெய்து வாழ்வானெனக் கூறுகின்றனர்.

2-ஆமிடத்தில் பாவர்கள் வந்திருக்க, 7-லும் பாவர்கள்நிற்க, அ ந்தராசி சுகமானதாக அதைப்பாவர்கள்நோக்க, இந்த சாதகனுக்கு நல்லவிவாகம் இரண்டென முன்னோர் கூறுகிறார்.

ஜென்மத்திலும், 2-லும், 7-லும் பாவர்களாகயிருக்க, களத்திராதிபதி நீசமனமாகச் சத்துருவீட்டில் நிற்கில், இந்த சாதகனுக்கு களத்திரம் இரண்டெனக் கூறுகின்றனர்.

களத்திராபதி - கேந்திரகோணத்தில் நிற்க, பாவியர் சேத்திரம் நட்புபெற, அதில் 10-ஆமிடத்தோன்கூட, 7-ஆமிடத்தோன் சுபசேத்திரங்காண, இந்த சாதகனுக்கு தேவியர்கள் அனேகமாக மணம்புரிவானெனக் கூறுகின்றனர்.

7-ஆமிடத்தில் சூரியன் பலவானுகயிருக்க, சுக்கிரனும்-குருவும் வலுவுபெற்றிருக்க, குடும்பாதிபதி அங்கிசத்திலிருக்க, இந்த சாதகன் அதிரூபமுள்ள தனபதியானப்பெண்ணை மணம்புரிவானென முன்னோர் கூறுகிறார்.

இலாபாதிபதியும், 7-ஆமாதிபதியும் பலவானுகிகூடி திருகோணத்திலிருக்க, இவர்களை சுபர்கள்பார்க்க, இந்த சாதகன் நேயமானப் பெண்கள் அனேகரை மணம்புரிந்து சுபஜீவனுக வாழ்வானெனக் கூறுகிறார்.

2-ஆமாதியும், 7-ஆமாதியும், இலக்கின கோபுராங்கிசத்திலிருக்க, 10-ஆமாதி, 7-ஆமிடத்திலிருக்க. இந்த சாதகன் நல்லகளத்திரமாகக்கொள்வானெனக் கூறுகின்றனர்கள்.

களத்திராதிபதி சுபராசியிலேறில், அங்கிசம் நல்லவீடாய் சுக்கிரன்நிற்க, அல்லது-10-ஆமிடத்ததிபனுடன் பலவான்கள்கூட, இந்த சாதகன் மோகனப்பெண்ணை மணம்புரிவானெனக் கூறுகின்றனர்

களத்திராதி வியாழனுடன் கூடினுலும், அல்லது-பார்வையுற்று பலமானராசியில் நின்றாலும், சுக்கிரன் பலவானுகயிருக்க, இவனுக்குவரும் களத்திரம் தானதருமமுள்ளவளாகயிருப்பாளெனமுன்னோர் கூறுகிறார்.

இலக்கினம் தனுசு மீனமாகி அதில்புதனிருக்க, மித்துருவோடு சந்திரன் நீசமற்றமனமாயிருந்து அங்கிசமேறினும், அல்லதுசத்துருவின் சொந்த அங்கிசமேறினும், பாவர்கள் களத்திரத்திலிருக்க, இவன்தன்களத்திரம் வேசியராகி குலந்தாழ்வாகுமென கூறுகிறார்.

களத்திராதிபதியும், சூரியனும் பாவருடன்கூட, பாவர்கள் இராசியில் சிறந்துயிருக்க, பாவர்கள் நோக்கமானாலும், சனியும்-சேயு அங்கிசமானாலும், சோரம்போவாள். வெளியாகாமலிருக்குமென, முன்னோர் கூறுகின்றனர்.

களத்திராதிபதி சுக்கிரனுகி பாவருடன் கூடியிருக்க, பாவர்கள் பார்க்க, அல்லது - சததுவங்குசத்திலும் பாவரங்கிசத்திலும் அமர்ந்திருக்க-இவன்தன் களத்திரம் அன்னியர்பால் சஞ்சரித்து சோரம் போவாளென முன்னோர் கூறுகின்றனர்.

7-ஆமுடத்தோனும், 6-ஆமுடத்தோனும்பாவருடன் 2-ஆமிடமிருக்க, அங்காரகன்பார்க்க, இந்தகளத்திரத்திற்கு விபசாரத் தொழிலால் சுதனுண்டாம் இலக்குனதிபதியு, 6-8-12ல் இருக்க, இந்த சாதகன் 12-தாரங்கொள்வானென முன்னோர் கூறுகின்றனர்.

இலாபாதியும் களத்திராதியும் கூடினாலும் பார்த்தாலும், பலவானுகி திருகோணத்திலிருந்திடில், இந்த சாதகனுக்கு விவாகமொன்றும் கள்ளமனமுடையாளென முன்னோர் கூறுகிறார்.

இலக்கினத்திற்கு 7-லும், வியத்திலும், சந்திரன் பொருந்தியும் பாவரங்கிசமேறியுமிருக்கில், சுக்கிரன் பாவரோடியிருக்க, இந்த சாதகனுடையமனைவிகையாலவனைக்கொல்வாளெனமுன்னோர்கூறுகிறார்.

ஏழாம்பாவபலன்.

முற்றிற்று.

௫-ஆமிடம் மீனம்புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்.	௬-ஆமிடம் மேஷம் ரோகம்சத்துரு சோரம் சிறை வழக்கு.	௭-ஆமிடம் ரிஷபம் கேந்திரம் களத்திரம் காமம் மாரகம் நித்திரை.	௮-ஆமிடம் மிதுனம் ஆயுள் வியாதி அபமிருத்து.
௪-ஆமிடம் கும்ப கேந்திரம்தாயார் கல்வி பூமிபந்துசுகம் வியாபாரம்.	8-வது, விருக்ஷக லக்கினமான இந்தசக்கரத்தை கொண்டு-இராசிவிபரமறிந்துக்-கொள்ளவும்.		௯-ஆமிடம் கடகம் தருமம் பிதா பிரபுத்துவம பாக்கியம் குரு
௩-ஆமிடம் மகரம் சகோதரம் வெற்றிசேவ்விகாது அடிமை.			௰-ஆமிடம் சிங்கம்கேந்திரம்கருமம் சீவனம் கீர்த்தியூதாரம்
௨-ஆமிடம் தனுசு நேத்திரம் வாக்குதனம் முகம் குடும்பம்	விருக்ஷகலக்னமகேந்திரம்பெண்ராசி ஸ்திரராசிபலகால்ராசிதலை யுதையராசிபகற்செவி	௧௨-ஆமிடம் துலாம்விரையம் சயனம்மோக்ஷம் அனித்தியம் நோய்	௰௧-ஆமிடம் கன்னிடரேஷ்டபிராதர் இலாபம் இஷ்டம்.

எட்டாம்பாவம்.

ஆயுள்பலன்.

அட்டமாதிபதி பாக்கியாதிபதியாகயிருக்கினும், அட்டமாதிபதி பாவியாகயிருக்கினும் ஐபமில்லையாம். அட்டமத்ததிபன் நற்கோள் அட்டமாதிபதியை பார்க்கில்,பிறந்தசேய் நூராண்டு புவிமீதயிருப்பானென முன்னோர் கூறுகின்றனர்.

பாபர்கள் செவ்வாயைப்பற்றியபுசிப்பில் சனி திசையில் புத்தியிலும் அட்டமாதிபதி திசை ஊன் புசிப்பிலும் கோசாரப்பலன் நன்றாயிருக்க வருத்தமாறுமெனக்கூறுகிறார்.

கடகமுதலாய் ஆறுராசியிலும் வியாழனிருக்க, மகர முதலாக வாறுராசியிலும் சனிநிற்க கடகம் கேந்திரமாக, சுக்கிரன் சூரியன் அதில்நிற்க, தீர்க்க ஆயுளுடன்வாழ்வானெனக் கூறுகிறார்.

மகரமுதலாக ஆறுராசியிலும் சனியிருக்க, கடகமுதல் ஆறுரா சிக்குள் சந்திரன்யிருக்க, கேந்திரத்தில் சூரியன் நிற்க,இவன்தனக்கு தீர்க்கவயதாம். 8-ஆமிடத்தில் அங்காரகனிருக்க, சூரியன் உரையா க அங்கிசத்திலிருக்க, கேந்திரமேற, நூறுண்டெனக் கூறுகிறார்.

மிதுனம் முதலாக ஆறுராசியிலும் சனிநிற்க, தனுசு முதலாக ஆறுராசியிலும் திருகோணகேந்திரந்தனனில் புதனும் சுக்கிரனும் நி ற்கில், பிறந்தசேய் தீர்க்கஜீவனாம்மென முன்னோர் கூறுகிறார்.

குருவும் சுக்கிரனும் 4-ஆமிடத்திலிருக்க, ஜென்மத்தில் அரவு யிருக்க, இவர்க்கு நடுவில் சனியிருக்க, இவன்தனக்கு வயது நூறும். யென்க் கூறகிறார்.

ஜென்மலக்கினமுதல் 4-ஆமிடம்வரையில் நாலுகிரகங்கள்நிற்க, புதன் சுக்கிரனைப்பார்க்க, சிலவருடமிருப்பானும். புதன் தோற்றமில் லாமலிருக்கில்,வயது 33-ம். வெள்ளிநிற்கில்,வயது 66-ம். சூரியன் நி ற்கில். 100-வயதென முன்னோர் கூறுகிறார்.

அட்டமாதிபதி அட்டமத்தில் அமர்ந்திருக்க, சந்திரன் பாவரு டன்கூடி,2-6-8 சூழ்ந்திருக்கில், இவன்தனக்குவயதுபதினெட்டாம். தருமவானும்மென கூறுகிறார்.

கும்பம் ஜென்மலக்கினமாக, இதற்கெட்டாமிடம் அங்கிசமாகி அதில் சனி நிற்க, இராகு கேந்திரத்தில் இல்லாதிருக்க, (பிறந்த சாதக னுக்கு வயது 60-யென முன்னோர் கூறுகின்றார்.

தனுசு இலக்கினமாக, அதில் வியாழன்நிற்க, சனி கருமாதிபதி பாம்பு இவர்கள் மூவரும் ஒன்றாய்கூட,10-ஆமிடம்,5-ஆமிடங்களில் நிற்க,மற்ற கிரகங்கள்கேந்திரமேற,சன்மாதிபதி8- ஆமிடத்திலிருக்க, பிறந்த சாதகனுக்கு28-வயதெனமுன்னோர் கூருகின்றனர்.

8-ஆமாதிபதி அங்கிசத்திலிருக்க, சுபக்கிரகங்கள் கேந்திரத்தி லிருக்க,மட்டமாதிபதி பாவத்திலிருக்க, வயது 66. சனி திசைடீ

க்க ஜென்மாதிபன் ஜென்மத்திலிருக்க, 8-6-ல் 7 ஆமிடத்தோனிருக்க இவன் தனக்கு வயது 50-தாமென முன்னோர் கூறுகின்றனர்.

7-8-6-ஆமிடத்தில் நல்லோர்களிருக்க, 3-11-லும், சுபக்கிரகங்களிருக்க, தீர்க்கவாயுளுண்டாம் 8-ஆமிடத்ததிபன் உச்சமாக,ஜென்மாதிபனே இனிபகிரகங்கள்கான கேந்திரத்திலிருக்க, இந்த ஜாதகனுக்கு வெகுவயதாமென கூறுகின்றனர்.

ஜெமாதிபன் தனக்கும்சனிக்கும்உடாவாகில், தீர்க்காயுளுண்டாம். சூரியனுகில் 8-ஆண்டாம். இலக்கினைநிபதிபகையாலும்,8-ஆண்டென முன்னோர் கூறுகிறார்.

அற்பவயதுள்ளோர்கள் அவிட்டநக்ஷத்திரத்திலிறப்பார். பூரணவயதுள்ளவர்கள்பாணி-ரேவதிநக்ஷத்திரத்திலிறப்பார்கள். மத்திபவயதுள்ளோரும், அற்பவயதுள்ளோரும் மற்றநக்ஷத்திரத்தில் இறப்பாரென முன்னோர்கள் கூறுகிறார்.

ஜென்மாதிபதி பாவாம்சிசத்திலிருக்கில், கற்பம் தரிக்கில், அற்பவயதாம் சுபாம்சிசத்திருக்கில்,மத்திமவயதாம், ஜென்மாதிபனே நல்லோர்கான, வர்ப்பத்தினில் தீர்க்கமுண்டாம். இவ்விதமாகக் கண்டு உரையுமென முன்னோ கூறுகின்றார். 3909

சூரியன் உதையமான இராசிமுதல் காலேயளவுங்கூட்டி. அதனே வெதிராகவெண்ணி இரண்டரையிலீந்தால் உரைலக்கினமாம். ஜென்மத்தோன்வீடு ஒற்றையாகில், சூரியன்முதலாம் ஜென்ம்வீடு இரட்டையாகில் ஜென்மமுதலாமென கூறுகின்றார்.

சாத்தில் சரமாகில் தீர்க்கமாம்.ஸ்திரமாகில் மத்திபம். ஸ்திரமதில் ஸ்திரமாகில் தீர்க்கமாம். சரபாகில் மத்திபமாம் ஸ்திரத்தில் உபயம்பெறில் தீர்க்காயுளாம். உபயராசியில் உபயமாகில் மத்திபமாம். அதில்,சரமாகில், வயதர்ப்பமாம் இபயத்தில் தீர்க்கவயதாம். அல்லது பூரணவயதாமென கூறுகின்றார்.

திரிகோணகேந்திரங்களில் நல்லோர் நிற்க, ஜென்மாதிபதி குருவோடு4-ஆமிடத்தில்நிற்க, பிறந்தசாதகன் நூறாண்டளவும் வயதுபெற்று யிருப்பன். ஜெமாதிபதியோடு 8-ஆமாதிபன்கூடி 6-ஆமிடத்தில் சனிபார்க்க நிற்கில், வாலேவயதில் அரிட்டம்வரும். இலக்கினத்தில்

அங்காரகனும், 8-அமிடத்திப்சந்திரனுமிருக்க, சனிகாண அறிட்டமா மென கூறுகிறார்.

தீர்க்கவியாதி, அபிமிருத்து இவைகளின் பலன்.

அட்டமாதிபதியும் அங்காரகனுடன்கூடி 6-12-ல் இருக்கில், துஷ்டர்களின் ஆயுதத்தால்மரணம்வரும். இவர்களை இனிய கிரகங்கள் சூழ, கண்டகாயப்படும். 8-அமாதின் வியத்திலும், 6-8-ல்பாபருடன் கூடிநிற்கில், கள்ளர்களால் அரிட்டமுண்டாம். இலக்கினதியும், 8-ஆமாதியும் சேர்ந்து ஒருவீட்டில் நிற்கில் சலகண்டம் மருமெனக்கூறுகின்றனர்.

8-அமிடத்தாதியும் வாகனதியுங்கலந்து 6-8-12-ல் நேர்சத்துருமனையாகமேவ, வாகனங்களால்மரணம்வரும். 8-ஆமதிபன் சனி அங்கிசத்தில் வந்துநிற்க, மாநித்லேறிவிழுந்திறப்பன். ஜென்மாதியும் 8-அமிடத்தோனும் நீசாங்சிசம்புகாமல் சனிவர காலாமுறுத்துவா மெனகூறுகிறார்.

காலமூர்த்தியோடு 8-ஆமாதிபதியும் இலக்கினதியும் கூடில் கலடியாலேனும் இடியெனுமபட்டு மரணமாவான்இனமான கிரதங்கள் சேர்த்து மட்டமாதி அங்கிசத்தில் செரிந்து பன்னிரண்டு 8-6-ம் இராகுநோக்க, குன்மவியாதியினல் மரணமடைவானென முன்னேர். கூறுகின்றனர்.

ஜென்மாதிபதியேனும் அட்டமாடபதியேனும் குளிகனேடுகூடி வியத்திலும், 6-8-லும் மேவிநிற்க, நடந்திடும்போது கரங்களில் பினைப்பட்டு நலிந்து அந்த நோயினல்மடிவமன். இவர்களை சுபக்கிரகங்களைகாணில் கைகால் ஊனமாயிருப்பானெனக் கூருகின்றார்.

ஜென்மத்தில் சனியும் குளிகனுங்கூடி நிற்க, வியம் 6-8 ல் சந்திரன் நிற்க, மரணமாவான். சூரியனிருக்கும் புடத்தையும், கண்டனிருக்கும்புடத்தையுங் கூட்டி, அந்தஇராசியினில் சூரியனிருக்க நேரயகொண்டு துன்பமடைவானென முன்னேர் கூறுகின்றனர்.

ஆதித்தனுட புடத்தையும், குளினுட பிடத்தையுக்கூட்டிகடந்த இராசியில் சூரியன்வருங்காலத்தில் நலியுண்டாம். சந்திரன்புட

த்தையும் குளிகன்புடத்தையும் கூட்டி கண்டாராசியில் சந்திரன் வருங்காலம் கடுஞ்சுரம்வருமென கூருகின்றனர்.

ஜென்மாதிபதி 8-ஆமாதிபதியும்கூடி லாபத்தில் இலாபாதி பதியோடுகூடி நிற்க, இவர்களுடன் பாவரேனும், தீக்கோளேனும் வந்துகூடில் வருத்தத்துடன் உயிர்விடும்போது அரிகியிருப்பார்கள். இவன்தனக்கு இலாபதிசையில் மரணமென முன்னோர் கூறுகிறார்.

10-ஆமிடத்ததிபதி துர்ப்பலனாக மாரகாதி திசைவரில் பொசிப்புள்ளவர் பலனாய் இருவர்களுக்கும் விரோதமுடன் பகையாயிருக்கில் மரணமுண்டாமென கூறுகிறார்.

4-ஆமாதிபதியுடன் 8-ஆமாதிபதியுங்கூடி தனதுவீட்டிலிருக்க, இவன் இறப்பது தாதைவாழும் பதியாம். வியத்திலும் - 6-லும் இருக்கில் தூரதேசத்தில்போய் இறப்பான்யென கூறுகிறார்.

பகலில் உதித்தானுக்கு குளிகன் உரைவீடாக 5-9-ல் சனி வருங்காலத்தில் இடுக்கமுண்டாம். இரவிலுதித்தால் குளிகனுக்கு 7-ஆமிடத்திலும், திருகோணத்திலும் சனிவரும்நாளில் இந்த ஜாதகனுக்கு கண்டம்வருமெனக் கூறுகிறார்.

அஷ்டமஸ்தானாதிபதி சுபக்கிரகமாய் அஷ்டமத்தில் நின்றகிரகமும், ஆயுருகாரகனாகியசனியும், அஷ்டமராசிக்கதிபதியும் இம் மூன்றுக்கிரகங்களும், தனலாபகேந்திர திருகோணங்களில் நட்பாச்சி யுச்சம்பெற்று. நிர்க்கினும், இந்த கிரகங்களுடன்கூடி நிர்க்கினும், இவர்கள் பார்க்கினும், இவர்களிருந்த இராசியாதிபதியும்இப்படிக்கொத்த இராசிகளிலிருந்தால் தீர்க்காயுசெனக் கூறுகிறார்.

நன்மையான்வாழ்வு கூறுகின்றது.

பாபக்கிரகங்கள் 3-6-11-ல் இருக்க,பிறந்தஜாதகன்நன்மையுண்டாகி வாழ்வான்யென முன்னோர் கூறுகிறார்.

பரவதாரோகணம் சிரோவியாதி கூறுகின்றது.

தேகாதிபதி இரவியுமாய் தேகலக்கினத்தில் யிருக்கினும் நோக்கினும் கிரிஸ்தளத்திலே திரிகுவன். சிரோவியாதியுடையவனாகயிருப்பானெனக் கூறுகிறார்.

பரிமளாதி வஸ்திரகிறைய விக்கிரியங்களால் ஜீவனங் கூறுகின்றது.

மேற்கூறியபடி மதியிருக்கில் ஸ்திரிசங்கமும், வெகு சங்க முண்டானவனுமாய் பரிமளவஸ்திராதிகிறைய விக்கிரியங்களினலே ஜீவனஞ்செய்வானெனக் கூறுகின்றனர்.

குஜனுைல் அக்கினியால் பாத்தியமுடையவனுமாய் சூரனுமாய் விரணவியாதிகளுமுண்டாய், ஆயுத அப்பியாச முடையவனுமாய், குரூரனுமாய் பாவியுமாய் திரிகுவானெனக் கூறுகின்றனர்.

புதனுைல் கெணிதசாஸ்திரமரிந்தவனுமாய் பிரமவீணனுமாய் அன்பும் அடக்கமுமுண்டாய் வியாபாரத்தினுலே வயறு வளர்ப்பானெனக் கூறுகின்றனர்.

குருவானுைல் சுயதேசத்திலே பிராமண வித்தியாப்பியாசனுமாய் சரீரம் அழகுண்டாய் வாழ்ந்திருப்பானெனக் கூறுகிறுர்.

சுக்கிரனுைல் பிர்மகர்ப்பமுண்டாய் ஆயுசுகர்ப்பமுண்டாய் அருள்பெற்றுவாழ்வானெனக் கூறுகின்றனர்.

வனசஞ்சாரங் கூறுகின்றது.

சனி தேகாதிபதியாய் தேகத்தில் நிர்க்கினும், தேகராசியை நோக்கினும், இந்தஜாதகன் வனத்தில் திரிகுவானெனக் கூறுகின்றனர்.

பரதேசத்தில் மரணங் கூறுகின்றது.

அஷ்டமாதிபதியோடு ஒருவரில்லாமல் தாங்களேயிருந்து அந்த லக்கினமும் மகரமாய் கிரகங்களும் சரக்கிரகமானுல் பர தேசத்தில் மரணமடைவானெனக் கூறுகின்றனர்.

நிவாகஸ்தலங் கூறுகின்றது.

ஜென்மலக்கினம் ஸ்திரலக்கினமுமாய் அந்த தேகாதிபதியும் அங்கேயிருந்தால் சுயதேசத்திலிருக்கப் பிராப்தியுண்டென முன்னோர் கூறுகின்றனர்.

அஷ்டமராசி உபையராசியானால் சமீபகிராமத்தில் மரணமென முன்னோர் கூறுகிறார்.

அஷ்டமராசி சரராசியானால் அன்னியகிராமத்தில் மரணமென கூறுகின்றனர்.

தேகாதிபதி சரராசியிலிருந்தால் பிறந்தஜாதகன் தேசாந்திரந் திரிவானெனக் கூறுகிறார்.

ஸ்திரராசியானால் சுயதேசத்திலும், உபையராசியானால் உபைய தேசத்திலும் மரணமெனக் கூறுகின்றனர்.

ஆயுசு கூறுகின்றனர்.

அஷ்டமசந்தகிரகங்கள் மூவரும் நீசசத்துருக்களாய் பாபராய் க்ஷீணராயிருக்க, இப்படியிருந்தகிரகங்களிட ராசியிலிருக்கினும் இவர்களுடன்கூடினும், நோக்கினும் இவர்களிருந்தபடி 6-8-12 ஆம் டத்திலிருக்கினும் இந்தஜாதகனுக்கு ஆயுசுக்ஷீணம் அந்த அதிபதி இப்படியிருக்கினும் ஆயுசு க்ஷீணமாமெனக் கூறுகிறார்.

மரணகாலங் கூறுகின்றது.

அவர்கள் யெந்தராசியிலிருந்தார்கள் அந்தராசிகாரனுக்கு நாச மெனகூறுகிறார். இவர்கள்பார்வையுண்டானாலும் நசிக்கும்.

ஜெனனகாலத்தில் 10-ஆமிராசியாதிபதி 6-8-12 ஆமிடத்திலிருந்தால் 12- ஆமிராசியாதிபதி மகாதிசை ஜெனனகாலத்திலே வந்தால் அந்தமகாதிசையிலே மரணமாமென்று கூறுகிறார்.

மரணதிக்கு கூறுகின்றது.

அஷ்டமாதிபதி ஜென்மலக்கினத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்று யிருந்தால் ஆயுசு முக்கால்வரிசையெனக் கூறுகிறார் பகை நீசமாகில் அர்ப்பமிட்டம்.

தேகாதிபதியும் அஷ்டமாதிபதியும் கூடியிருந்தபோது அவருடன் எத்தனைகிரகங்கள் கூடியிருந்தார்கள் அந்தகூடியிருந்த இராசியாதிபதியும் அங்கிருக்க அந்தஸ்தானம் இலாபஸ்தானமாக அந்ததேகாதிபதியுடன் எந்தராசியாதிபதிகள் கூடியிருந்தார்கள் அத்தனைபேரும் மரணகாலத்தில் அண்டையில் கூடியிருப்பார்களெனக் கூறுகிறார்.

இந்த அதிபதிகள் கூடியிருந்த இராசி எந்ததிக்கு அந்ததிக்கு மரணம். இதுகளெல்லாங் கிரகவலியறிந்தும் கண்டுசொல்வதெனக் கூறுகின்றனர்.

பூரண ஆயுசு கூறுகின்றது.

அஷ்டமாதிபதி உச்சனுகினும் அல்லது சுபக்கிரகங்கள் அவரைப்பார்க்கினும் பூரணஆயுசோடு யிருப்பானென கூறுகிறார்.

எட்டாம்பாவம்.

முற்றிற்று.

௪-ஆமிடம் மீனம் கேந்திரம் தாயார் கல்வி பூமிபந்து சுகம் வியாபாரம்.	௫-ஆமிடம் மேஷம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம்புண்ணியம்.	௬-ஆடம் ரிஷபம் ரோகம் சத்துரு சோரம சிறை வழக்கு.	௭ ஆமிடம் மிதுனம் கேந்திரம் களத்திரம் காமம் மாரகம் நித்திரை.
௩-ஆமிடம் கும்பம் சகோதரம் வெற்றி கேள்வி காது அடிமை.	9-வது. தனுசுலக்கின மானுல் இந்த சக்கரத்தை கொண்டு இராசி விபரமறிந்துககொள்ளவும்.		௮-ஆமிடம் கடகம் ஆயுள் தீர்க்க வியாதி அபமிருத்து.
௨-ஆமிடம் மகரம் நேத்திரம் வாக்கு தனம் முகம் குடும்பம்			௯-ஆமிடம் சிங்கம் தருமம் பிதா பிரபுத்துவம் பாக்கியம் குரு.
தனுசு லக்கினம் கேந்திரம் ஆண்ராசி உபய ராசி நாற்கால் ராசிகால் புதையம் இராசெவி	௰௨-ஆமிடம் விருச்சிகம் விரையம். சயனம் டமோக்ஷம் அனித்யம் நோய்.	௰௧-ஆமிடம் துலாம் சிரேஷ்ட பிராதுர் இலாபம் இஷ்டம்	௰-ஆமிடம் கன்னி கேந்திரம் கருமம் சீவனம் கீர்த்தி ஆதாரம்,

ஒன்பதாம்பாவம்

பாக்கியபலன்.

9-ஆமிராசியாதிபதியும், பாக்கியகாரகனுகிய குருவும், பாக்கியஸ்தானத்திலிருந்தவரும், ஆகிய மூன்றுபேரும் சுபக்கிரகமுமாய் நட்பாட்சியுச்சம்பெற்று எவ்வண்ணமுமிருக்க, இந்த கிரகங்களுடன் கூடியிருக்கினும், இப்படிக்கொற்றவர்கள் பார்க்கினும், இவர்கள் தனலாபகேந்திர திருகோணங்களில் சேரினும், இவர்களிருந்த ராசியாதிபதிகிரகங்களும், இவர்களைப்போலிருந்தால் பிறந்தஜாதகன் பட்டவர்த்தனனுவான். அல்லது அவனுக்குச் சமானமான அயிஸ்வரியனுக யிருப்பானென்ன முன்னோர் கூறுகிறுர்.

இந்த கிரகங்கள் மூன்றுபேருட மகாதிசைக்குள்ளே இலாபாதிபதி பொசிக்கிறபோது மகாபாக்கியஞ் சித்திக்கும் யென முன்னோர் கூறுகிறார்.

இலக்கினத்திற்கு பாக்கியராசியாகிய 9-ஆமிராசியாதிபதியுடனாகிலும், பாக்கியகாரகனாகிய குருவுடனாகிலும், பாக்கியஸ்தானத்திலிருந்து மித்துருகிரகத்தினுடனாகிலும், இவனிடலாபஸ்தானமாகிய பதினோராமிடத்ததிபதி நட்பாட்சியுச்சம்பெற்று பாக்கிய தனலாபகேந்திர திருகோணங்களிலிருந்தால் லாபாதிபன் பாக்கியாதிபன் இவர்களிருவர் மகாதிசையிலும், கீர்த்தியும் அயிஸ்வரியமும், அர்த்தலாபமும் உண்டென முன்னோர் கூறுகிறார்.

இவர்களிருந்த இராசி பாரியஸ்தானமானால், பாரியலாபமும், வாகனாதியும், பூஸ்திதிகளுமுண்டாய் வாழ்வானெனக் கூறுகின்றனர்

பாக்கியாதிபதியும், லாபாதிபதியும் நட்பராய் தனஸ்தானத்திலிருந்தால் வெகுதனலாபமுண்டெனக் கூறுகின்றனர்.

தேகராசியிலாகிலும், தேகாதிபதியுடனாகிலும்கூடி நட்பாகநின்றால் தேகமிருக்குமட்டும் அர்த்தலாபமும், பௌஷ்யபாக்கியமும் உண்டாமெனக் கூறுகிறார்.

தேகாதிபதி, பாக்கியாதிபதி, லாபாதிபதி இந்த மூவரும்வாகனஸ்தானமான 4-ஆமிராசியில்கூடியிருந்தாலும் இந்த அதிபதிகளுடன் 9-ஆமிராசியில் கூடியிருந்தாலும், பார்வையுண்டானாலும் இவன்தேகமுள்ளமட்டும் நரவாகனமுண்டெனக் கூறுகிறார்.

தேகாதிபதிக்கு குரு நட்பாக, வாகனஸ்தானத்தில்தான் அல்லது வாகனாதிபதி குருவுமாய் தேகாதிபதியுங்கூடி நட்பராய் வாகனஸ்தானமான 4-ஆமிராசியிலிருந்தால் பூரணநரவாகன பிராப்தியுண்டெனகூறுகின்றனர்.

இலக்கினாதிபதியும், புத்திரஸ்தானாதிபதியும், 4-ஆமிராசியாதிபதியும் நட்பராய் 4-ஆமிராசியிலிருந்தால் பிதுர்ரூச்சியம்அத்தனையும் இந்தஜாதகனுக்கு ஆயுசுவுள்ளமட்டும் சித்திக்குமென கூறுகிறார்.

புத்திரஸ்தானாதிபதி பிதுர்ஸ்தானமாகிய 9-ஆமிடம் பாக்கியஸ தானத்திலிருந்தால் இந்த புத்திரனும் பிதாவும் அன்யோன்யமாக இருப்பாரெனக் கூறுகிறார்.

இலாபஸதானத்திற்குக் கர்த்தனும், பாக்கியஸதானத்திற்குக்கர்த்தனும், இந்த யிருவரும் உத்தஸ்தானத்திலிருந்தால் பூர்வபாக்கியம் அயிஸவரியமுள்ளதெல்லாம் இந்த ஜாதகன் அநுபவித்துக்கொண்டு வருவானென முன்னோர் கூறுகின்றார்.

பாக்கியஸ்தானத்திற்கும், லாபஸ்தானத்திற்கும் கர்த்தருனயிருவனும், லாப பாக்கிய கேந்திரதிருகோணங்களிலிருக்க, அந்த ராசியாதிபதியும் உத்தமஸ்தானங்களிலிருக்க இப்படியிருந்தால் பூர்வபாக்கியத்தைப்பார்க்கிலும், ஐயிஸ்வரியம் கிடைக்குமென முன்னோர் கூருகின்றனர்.

பாக்கியஸதானத்திற்கு கர்த்தன் குருசுக்கிரன் புதன் மதி இவர்கள்வலிப்பெற்று அந்த இருசிகளிலே ஆட்சியாயிருந்தால் சர்க்குரு சேர்வையும் தனபாக்கியமும், சகலபாக்கியமுமுண்டாம். பிதுர்பாக்கியமும் குரு மாதுலம் இத்தனையும் இந்த ஜாதகனுக்கு சம்பூரணமாகக்கிடைக்குமெனக் கூறுகின்றனர்கள்.

பிதுர்பாக்கியங் கூறுகின்றது.

பிதுர் ராசியான 9-ஆமிராசியாதிபதி உத்தமனாக இலாபாக்கியஸ்தானங்களில் நட்பாட்சியுச்சம்பெற்றிருக்க, அந்த அதிபதி இராசிகளில்கூடி யிருந்தாலும் பிதுர்பாக்கிய முண்டாமெனக் கூறுகிறார்.

பாக்கியாதிபதியும் பாக்கிய இராசியும் எந்த ஜாதியோ அந்த ஜாதியை யொத்தவர்களால் பாக்கியங்கிடைக்குமெனக் கூறுகிறார்.

பாக்கியாதிபதியுடன் கூடியிருக்கின்றகிரகம் லாபாதிபதியுமாய் லாபாதிபதிக்குத் திரக்கிரகமாக இவர்களிருந்தராசி உத்தமஸ்தானமாக இந்த இராசியாதிபதியும் இந்தப்படியிருந்தால் சூத்திரகிரக மூச்சமானல் இந்த ஜாதகனுக்கு சூத்திரனாலே பாக்கியம் கிடைக்குமெனக் கூறுகிறார்.

9-ஆமிராசியாதிபதியுடன் கூடியிருந்தகிரகம் குருவாய் குரு இலாபாதிபதியுமாய் பிரபல லாபாதிபதிகள் பாரியஸதானத்தி லிருக்கப் பாரியஸதானுதிபதி லாபபாக்கியத்திலிருந்தால் இவனுடைபாக்கியம் இந்தஜாதகன் ஆயுசுவுள்ளளவும் பாக்கியஞ் சித்திக்குமென கூறுகிறார்.

இலாபஸதானுதிபதி சுபனுமாய் இந்த பாரியஸதானுதி பதிக்கு இவன் தனஸ்தானம் உச்சராசியாய் அங்கேஇந்த அதிபதியிருந்தால் இவனிடபாக்கியம் அயிஸ்வரியம் அர்த்தலாபமும் இந்த பாரிக்கு விர்த்தியாகுமென முன்னோர் கூறுகின்றனர்.

இந்தப்படி இராசி 12-க்கும் அதிபதிகளுங்கேரியிருந்தால் தன லாப பூமிவாகனம் இப்படிக்கொத்த இடங்களில் சேர்ந்திருந்தாலும் இந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும் அவரவர் இராசியிலே ஆட்சியாயிருந்தாலும் அவர்களுக்கு தனப்பிராப்தி யுண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

பாக்கியஸதானுதிபதி, லாபஸ்தானுதிபதி, தேகாதிபதிகள் தன லாபகேந்திர திருகோணங்களில் நிற்கில், போகசம்பன்னனாய் யிருப்பானெனக் கூறுகிறார்.

9-ஆமிடத்தில் இரவி-மதி-நிற்கில், அயிஸ்வரியலாபமுண்டென முன்னோர் கூறுகின்றனர்.

செவ்வாயாகில் சேவகவிர்த்தி பூமிலாபமுண்டாம்.

புதனாகில் வித்தை-தனம் - சுகம்-பந்து - பாக்கியமு முண்டாய் ஒருவருக்கு இட்டுண்பானென முன்னோர் கூறுகின்றனர்.

குருவாகில் அயிஸ்வரியம்-புத்திரசுகம்—பாக்கிய சம்பத்துண்டாமெனக் கூறுகிறார்.

சுக்கிரனாகில் பூமிலாபம் - வஸ்திராலங்காரமுண்டு. கோவர்த்தனம் சமஸ்தபாக்கியமு முண்டாமெனக் கூறுகின்றனர்.

சனியாகில் கலகம் சோரதாசிகள் விர்த்தியுண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

குருபலன் கூறுகின்றது.

சுபக்கிரகம் சுபக்கிரகராசியிலிருந்தாலும், உச்சமாதிபதியுடன் கூடியிருந்தாலும், அவருடபார்வையுண்டானாலும், சுபபலன், ஆதியிலேயீனம், அனித்தியத்திலே பிரபலமெனக் கூறுகின்றனர்

இந்த தர்மஸ்தானகிரகம் எந்தஜாதியோ அந்தஜாதியே குருஸ்தானமெனக் கூறுகின்றனர்.

9-ஆமிடத்ததிபதியும், அதிலிருந்தகிரகமும் குருவானால், இந்த தேகி பிராமணன்கையிலுபதேசமும், வித்தையும், பிராமணமுகாந்திரத்தில்வரும் சமஸ்தபாக்கியமுமெனக் கூறுகின்றனர்.

சுக்கிரனானால் பிராமணகுரு இவன்கையில் உபதேசமாகும். இப்படி எந்தெந்தகிரகமானாலும் அந்தந்தகிரகத்தை அடுத்தஜாதியே குருவுபதேசமும் அந்தசாதி மந்திரங்களுமுண்டாமென முன்னோர் கூறுகிறார்.

இந்தகிரகம் தனலாபகேந்திர திருகோணங்களிலிருந்தால், மேற்கூறிய உபதேசவித்தைப்பலிக்குமெனக் கூறுகின்றார்.

6-8-12-ஆமிராசியிலே அஸ்தமானமாயிருந்தால் மேற்கூறியப் பலன் பலியாதெனக்கூறுகிறார்

தருமம் கூறுகின்றது.

தர்மஸ்தானக்கிரகம் குருவானால், பிராமணர்க்கே தானதருமம் பண்ணிக்கொண்டிருப்பானெனக் கூறுகிறார்.

சுக்கிரனானால், பிராமணருக்குத் தர்ப்பணமும், ஆயுதஅப்பியாசமுடையவனுமாயிருப்பானென்க் கூறுகின்றனர்

இப்படி அந்தந்த தர்ம்மஸ்தானகிரகம் எந்தெந்தக்கிரகம் இராசியாச்சுது அந்தந்தக்கிரகசாதி தர்மத்தில்நடக்கும் அந்தந்தசாதிதர்மத்திலேதான் தர்மம்பண்ணுவானெனக் கூறுகிறார்.

அகங்கெடும் நஷ்டங்கூறுகின்றது,

9-ஆமிராசியாதிபதியும், பாக்கியகாரகனாகிய குருவும், பாக்கிய ஸ்தானத்திலிருந்தகிரகமும், இந்தமூன்றுபேரும் நீசசத்துருக்களாய் பாபக்கிரகங்களாய், நீசசத்துருராசிகளிலிருக்கினும், இப்படிக்கொத்தகிரகங்களுடனே கூடியிருக்கினும், இவர்கள்பார்க்கினும், இவர்கள் ராசியில் நிர்க்கினும், 6-8-12-ஆமிராசியில் நிர்க்கினும், இந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும், இவர்கள் பார்வையுண்டானாலும் பாக்கிய நஷ்டம். தனநஷ்டம். குருநஷ்ட முண்டாமெனக் கூறுகின்றனர்.

நிர்ப்பாக்கியன் இரந்துண்பானென கூறுகின்றது.

மேற்கூறிய இடங்களிலிருந்த தனாதிபதியும் மேற்கூறியபடியிருந்தால் இந்தஜாதகன் நிர்ப்பாக்கியனும் இறந்துண்பவனுமாக யிருப்பானெனக் கூறுகின்றார்.

அச்சம்-நோய்-சோரதாரன்-கோள்சொல்லுதல் கூறுகின்றது.

9-ஆமிராசிக்கு 9-ஆமிராசியிடத்ததிபதி கிரகமும்,சூரியனுடன் கூடியிருந்தாலும், சனி-ராகு-கேது-குஜன் கூடியிருந்தாலும் இந்த ஜாதகன் அச்சமும்நோயும் சோரதாரனுமாய் கோள்சொல்வானென முன்னோர் கூறுகின்றனர்.

ஒன்பதாம்பாவம்.

முற்றிற்று.

௩-ஆமிடம் மீனம் சகோதரம்வெற்றி கேள்விகாது அடிமை	௪-ஆமிடம் மேஷமகேந்திரம தாயார் கல்விபூமிபந்து சுகம வியாபாரம்	௫-ஆமிடம் ரிஷபமபுதல்வர்மாதுலன்பிதா ஞானம் புண்ணியம	௬-ஆமிடம் மிதுனமரோகம சத்துருசோரம சிறை வழக்கு
௨-ஆமிடம் கும்பம் நேத்திரவாக்கு தனம் முகம்குடும்பம்	10-வது, மகர லக்கினமானால் இந்தசக்கரத்தை கொண்டு-இராசிவிபரமறிந்துக்-கொள்ளவும்.		௭-ஆமிடம் கடகம கேந்திரம களத்திரம காமம மாரகம நித்திரை
மகரலக்கினம் கேந்திரம் பெண்ராசிசரராசி பாக்கும ராசி இராச் செவிடு காலுதையம.			௮-ஆமிடம் சிங்கம ஆயுள்தீர்க்கவியாதி அபமிருத்து
௰௨-ஆமிடம் தனுசு விரையம சயனம மோக்ஷம அனித்தியம நோய்	௰௧-ஆமிடம் விருச்சிகம சிரேஷ்ட பிராதர் இலாபம இஷ்டம	௰-ஆமிடம் துலாம-கேந்திரம கருமம சீவனமகீர்த்தி ஆதாரம	௯-ஆமிடம் கன்னி தருமம பி தாபிரபுத்துவம பாக்கியம் குரு

பத்தாம்பாவம்.

கர்மபலன்.

—(*)—

10-ஆமிடத்தில் அஷ்டமஸ்தானாதிபதி பாபருடன் கூடியிருக்க 10-ஆமிடத்ததிபன் பெலம்பெற, அவரைப்பாபர்பார்க்க, துர்க்கருமமுண்டாம். 10-ஆமிடத்ததிபன் பலவானும் சுபக்கிரகங்களுடன்கூடி 7-ஆமிடத்திலிருக்க, 4-ஆமிடத்தில் ஜென்மாதிபனிருக்க, கர்மம் முன்னாகுமெனக் கூறுகின்றனர்.

சுக்கிரனும் கர்மஸ்தானாதிபதியும் தனஸ்தானாதிபதியும் புதனும் இவர்கள்கூடி கர்மத்தானமாகிய 10-ஆமிடத்திலிருக்க, பிறந்தஜாதகன் எக்கியம்பண்ணுவானெனக் கூறுகின்றார்.

குருவாகிலும், சுக்கிரனாகிலும், கர்மஸதானத்திலிருக்க, அந்தஸ்தானம் அவர்களுக்கு உச்சஸதானமாகயிருக்க, பிறந்தஜாதகன் எக்கியம் பண்ணுவானென முன்னோர்கூறுகின்றார்.

இராகு 10-ஆமிடமாகிய கர்மஸ்தானத்திலிருக்க, அல்லது சூரியனிருக்கப், பிறந்தஜாதகனுக்கு கங்காஸதானம் லபிக்கும் கர்மஸ்தானம் மீனமாகயிருக்க, அதில் வியாழமாவது, சுக்கிரனாவது, புதனாவது அங்காரகனுடனே கூடியிருக்க, கங்காஸதானம் லபிக்குமென முன்னோர் கூறுகிறார்.

கர்மஸ்தானமாகிய 10-ஆமிடம் சலராசியாக யிருக்க, அதில் வியாழமாவது, சந்திரனாவது நிர்க்க கேந்திரஸ்தானாதிபதி 10-ஆமிடத்தானுடனேசந்திரனாவது சுக்கிரனாவதுகூடி சுபக்ஷேத்திரங்களி லிருக்க, வியஸ்தானமாகிய 12-ஆமிடத்தில் புதன்யிருக்க, பாக்கியாதிபதி கேந்திரத்திலிருக்க, பிறந்தஜாதகன்கங்காஸதானம் பண்ணுவானென முன்னோர் கூறுகிறார்.

சகோதரஸ்தானமாகிய 3-ஆமிடத்தில்சந்திரன் நிர்க்க, அல்லது கர்மாதிபதியுடனேகூடப் புண்ணியவானாகிய புதனாவது குருவாவது செவ்வாயுடனேகூடியிருக்க, அல்லதுப்பார்க்க, திருப்பணிமுடிப்பானெனக் கூறுகின்றனர்.

கர்மாதிபதியுடனே 4-ஆமிடமுடையவன்கூட பிறந்த ஜாதகன் சிரேஷ்டமாகயிருப்பான். திருப்பணிகள் செய்வான். கர்மேசனுடனே சந்திரன் கூடினல் குளந்தடாகம் வெட்டிவைப்பானென முன்னோர் கூறுகிறார்.

கர்மஸ்தானமாகிய 10-ஆமிடத்தில் புதனிற்க, பாக்கியாதிபதியை பாபக்கிரகங்கள் பார்க்க, பிறந்த ஜாதகனுக்கு எக்கியம் லபிக்குமெனக் கூறுகின்றனர்.

கர்மாதிபதியுடனே சந்திரன்கூடியிருக்க, பாக்கியேசன் கேந்திர திருகோணத்திருக்க, இராகு-கேது இவர்களிருவரில் ஒருவனேனும்

பாராமல் கூடாமலிருக்க, பிறந்தஜாதகன் எக்கியத்திற்குக் கர்த்தாவா யாவானென் முன்னோர் கூறுகின்றனர்.

கர்மாதிபதி 6-8-ல் நீசமாகயிர்க்க, பாபக்கிரகங்கள்பார்க்க, இரா குகூட, பிறந்தஜாதகன் எக்கியம்பண்ண நிச்சயிக்கும்போதெல்லாம் விக்கினம்வருமெனக் கூறுகிறார்.

தர்மஸ்தானமாகிய 9-ஆமிடத்தில் அங்காரகன் நிற்க சுபக்கிர கம் 4-ஆமிடத்தில் நிற்க, சோபனாங்கிசமேற, பிறந்த ஜாதகன் ஆக்கி னைப்படுவானென முன்னோர் கூறுகிறார்.

10-ஆமிடத்தில் சூரியனிற்க செவ்வாயுடனேகூட, அல்லது அவர்கள் கேந்திரங்களிலிருந்து அன்யோன்யமாக பிறந்த ஜாதகன் குரூராக்கினைப்படுவானெனக் கூறுகிறார்.

10-ஆமிடத்தில் சனி நிற்க, அஷ்டமாதிபதிகூட, அவர் குரூரா ங்கிசமேற, பிறந்தஜாதகன் தூரதேசத்தில் ஆக்கினைப்படுவானெனக் கூறுகின்றனர்.

கர்மஸ்தானத்தில் இராகும்-குளிகனுமிற்க, அஷ்டமாதிபதியுட னே இராகுகூட, 9-ஆமிடத்தான் நீசமாகி குரூராங்கிசமேற, பிறந்த ஜாதகனுக்கு மேற்சொல்லியபலன் நடக்குமெனக் கூறுகிறார்.

கர்மாதிபதி சுபனாகக் கேந்திரத்தில்நிற்க, குரூரசஷ்டியங்கிசமே ற, பிறந்த ஜாதகன் ஆக்கினைப்படுவானெனக் கூறுகிறார்.

சுகமாதிபதியுடனேகூட, குரு-சுக்கிராள் பார்க்க, பரவதாங்கி ச மேற, பிறந்த ஜாதகன் சர்க்கீர்த்தியுடையவனெனக் கூறுகிறார்.

கீர்த்திஸதானமாகிய 10-ஆமிடத்ததிபதிபுதனாக, சுவக்ஷேத்திர மித்ருவீடுகளிலிருக்க, சவுமியாள் சஷ்டியங்கிசமேற, பிறந்த ஜாதக னுக்கு கீர்த்தியுண்டாமெனக் கூறுகிறார்.

கர்மாதிபதி தேவலோகாங்கிசமேற, அல்லது - சிங்காங்கிசமேற சந்திரனுடனேகூட, சர்க்கீர்த்தியுண்டாமெனக் கூறுகிறார்.

10-ஆமிடத்தில் பாபகிரகமில்லாதிருக்க கர்மாதிபதிபெலத் திரு க்க, சுபகிரகங்கள் சஷ்டியங்கிசமேற, பிறந்த ஜாதகன் கீர்த்தி யுடை யவனாவானெனக் கூறுகின்றனர்.

கர்மாதிபதி நீசனாகயிருக்க, சனியும் மாந்தியுங்கூட செவ்வாய் பார்க்க, பிறந்த ஜாதகன் அபகீர்த்தியுடையவனாவானென முன்னோர் கூறுகின்றனர்.

10-ஆமிடமுடையவன் சோரக்ஷேத்திரனாக, அல்லது சுபாளுடனே கூடியிருக்க, பிறந்த ஜாதகன்இங்கிதவானாகிய ராஜாவாவானென முன்னோர் கூறுகிறார்.

10-ஆமிடத்தில் பாவிகள் இருக்க, அல்லது-பார்க்க, செவ்வாய் கூடியிருக்க, ஜெனனமானவனுக்கு குருநாவாக்கினை வருமென முன னோர் கூறுகின்றனர்.

10-ஆமிடமுடையவன் நீசனாக, பாவிகள் பார்க்கப் பாவராசி தசம்யேற, ஜெனனமானவனுக்கு மானபங்கம் நேரிடுமென முன் னோர் கூறுகின்றார்.

கர்மாதிபன் சந்திரனுடனேகூட, சவுமியாள் பார்க்க, சுபாள்கேந்திர திருகோணத்திலிருக்க, ஜெனனமானவன் சன்னியாசிவானெனக் கூறுகின்றனர்கள்.

கர்மாதிபதியுடனே வியாழன்கூட, பார்க்க, அல்லது-கேந்திரதிருகோணத்திலிருக்க, அல்லது-இலக்கினத்திற்கு 4-ஆமிடத்திலிருக்க ஜெனனமானவன்மு நீஸ்வரனுக்கு ஒப்பாக யிருப்பானென முன் னோர் கூறுகிறார்.

இலக்கினாதிபதி அங்காரகனாக, பாக்கியாதிபதியாலே கர்மாதியைப்பார்க்க, அல்லது கூடிநிர்க்க, ஜெனனமானவன் முனீந்திரனாவானெனக் கூறுகிறார்.

கர்மாதிபதிக்கு சனி திரேகாணமாக, சந்திரனுடனே கூடி நிற்க அல்லது சனியுடனேகூட, கர்மாதிவீட்டு அங்கிசமடுக்க, சந்திரனுடனேகூட, ஜெனனமானவன் தேவேந்திரனுக்குச் சமானமானவனாவானெனக் கூறுகிறார்.

மாதருஸ்தானமாகிய 4-ஆமிடமுடையவன் சந்திரனுடனேகூட, வியாழன் பார்க்க, ஜெனனமானவன் முருத்ரயோகமுடையவனாவானெனக் கூறுகின்றார்.

பத்தாம்பாவம்.

முற்றிற்று.

<table>
<tr><td>௨-ஆமிடம் மீனம நேத்திரம் வாக்கு தனம் முகம் குடும்பம.</td><td>௩-ஆமிடம் மேஷம்-சகோதரம வெற்றி கேள்வி காது அடிமை.</td><td>௪-ஆமிடம் ரிஷபம்கேந்திரம் தாயார் கல்விபூமி பந்துசுகம் வியாபாரம்.</td><td>௫-ஆமிடம் மிதுனம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்.</td></tr>
<tr><td>கும்பலக்கினம கேந்திரமானராசி ஸ்திரராசி தலை உதையம பகல் மூடம இருகால் ராசி.</td><td colspan="2" rowspan="2">11-வது.
கும்ப லக்கின மானல் இந்த சக்கரத்தை கொண்டு இராசி விபரமறிந்துக்கொள்ளவும்.</td><td>௬-ஆடம் கடகம் ரோகம் சத்துரு சோரம்பிரை வழக்கு</td></tr>
<tr><td>௰௨-ஆமிடம் மகரம விரையம்சயனம் மோக்ஷம் அனித்தியம் நோய்</td><td>௭ ஆமிடம் சிங்கம் கேந்திர களத்திரம காமம் மாரகம சித்திரை</td></tr>
<tr><td>௰௧-ஆமிடம் தனுசு சிரேஷ்டபிராதர் லாபம் இஷ்டம்.</td><td>௰-ஆமிடம் விருச்சிகமகேந்திரம கருமம சீவனம கீர்த்தி ஆதாரம.</td><td>௯-ஆமிடம் கன்னிஆயுள் நீர்க்கவியாதி அபமிருத்து</td><td>௮-ஆமிடம் துலாம - பிதா தருமம - பிரபுத்துவம பாக்கியம குரு.</td></tr>
</table>

பதினோராம்பாவம்.

தனலாபம்.

———(*)———

சுபக்கிரகங்கள் மத்தியிலே லாபாதியிருக்கப், பாக்கியாதிபதியாலேபார்க்க, பரவதா அங்கிசமேற, ஜெனமானவன் லாபவிர்த்தியுடையவனாக யிருப்பானெனக் கூறுகிறார்.

இலாபாதிபதியம் திசாதிபதி சுபனாகயிருக்க, கர்மாதிபதியாலேபார்க்கப்பட, ஜெனனமானவன் தனலாபமுடையவனாமென முன்னோர் கூறுகின்றனர்.

இலக்கினாதிபதி உச்சமான கிரகங்களுடன்கூட, ஜெனனமானவன் தனலாபமுடையவனாவானெனக் கூறுகிறார்.

இலாபேசன் 4-ஆமிடமுடையவனுடனே கூடிநிற்க, ஜெனனமானவன் கர்பமுடையவனாவானென முன்னோர் கூறுகிறார்.

2-ஆமிடம் சுக்கிரன்வீடாகப், பாக்கியாதிபதிப்பார்க்க, ஜெனனமானவன் தனலாபமுடையவனாக வாழ்வானெனக் கூறுகிறார்.

இலாபஸ்தானமாகிய 11-ஆமிடத்தில் பாவிகளிருக்க, அல்லது பார்க்க, இலாபாதிபதி குருநாசஷ்டியங்கிசமேற, ஜெனனமானவனுக்கு தனலாபமில்லையாமெனக் கூறுகிறார்.

வேறு ஆயுசுபலன்.

இரவிமதிகளிருவரும் இலாபக்கிரகங்களெனப்பெயர் இவர்களும், இத்தலாபஸ்தானத்திலிருக்கும் கிரகங்களும், இலாபஸ்தானாதிபதியும், நட்பாட்சியுச்சம்பெற்றும். பெலாஷ்டிகளாய் உத்தமஸ்தானங்களிலிருக்க, அல்லது இத்தஸ்தானகிரகங்களுடன் கூடியிருக்கினும், இவர்கள்பார்க்கினும், இவர்களிருந்த இராசியாதிபதி கிரகங்களும், தனலாபகேந்திர திருகோணங்களிலிருந்தால் இந்த ஜாதகனுக்கு ஆயுசும், ஐயிஸ்வரியமும், வெகு இராஜ்ஜியமும் உண்டாமென முன்னோர் கூறுகின்றனர்

திருஷீஸ்தானாதிபதி 3-ஆமிராசியிலிருக்கினும் 3-ஆமிராசியாதிபதியுடன்கூடி நட்பராயிருந்தால், இந்த ஜாதகனுக்கு பிதுர்லாபமும், ஐயிஸ்வரியமும், மோக்ஷத்திற்கினியவாசமும் உண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

மதியுடன் குரு-சுக்கிரன் - இலாபாதியாய்க் கூடியிருக்கினும், இவர்கள்பார்க்கினும், வெகு ஐயிஸ்வரியமும், தனலாபமும், தான்னியலாபமும், வஸ்திரலாபமும், வாகனமுதலாகிய வஸ்துலாபமும், இந்த ஜாதகனுக்கு சம்பூரணமாக வுண்டாமெனக் கூறுகின்றனர்.

இலாபாதிபன் பெந்தஸ்தானகிரகமோ அந்த கிரகத்தையாதல் தனலாபஸ்தானத்தையாதல் சுபக்கிரகம் பார்க்கினும், நிற்கினும், ஜெனனமானவனுக்கு உத்தமபலனெனக் கூறுகின்றனர்.

இலாபஸ்தானகிரகம் உச்சஸ்தானமானல் முக்கால்வரிசைபலன்கொடுக்குமென முன்னோர் கூறுகிறார்.

இலாபாதிபதி நட்பனுகை, தேகலக்கினத்திலாதல், தேகாதிபதியுடனுதல்கூடி நட்பாயிருந்தால், ஜெனனமானவனுக்கு ஐயிஸ்வரியமும், அர்த்தலாபமும், தேகபுஷ்டியும், காந்தியும், சந்தோஷமும், பூரணஆயுளுடையவனுமாயிருப்பானென முன்னோர்கூறுகின்றனர்.

இந்தலாபாதிபதி மித்துருவாய் தனஸ்தனத்தில் நிர்க்கினும்அல்லது தனதிபதியுடன் கூடினும் நட்பருயிருந்தால் அப்போது ஜெனனமானவனுக்கு தனலாபமும் சௌபாக்கியமும் வெகு சம்பந்துமுண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

இலாபாதிபதி நட்பாட்சியுச்சமாய் பிராதுர்ஸ்தானத்தில் நிற்கினும் இராசியாதிபதியுடன் கூடி நட்பாயிருந்தால் இந்த ஜாதகனுர்க்கு பிரதர்லாபமும் அயிஸ்வரியமுமுண்டாய் மோகத்திற்கினியவராயிருப்பாரென முன்னோர் கூறுகிறார்.

பிராதுஸ்தானதிபதியும் இலாபாதிபதியும் தேறிநட்பாய்ப் பிராதுருஸ்தானத்திலிருக்கில் இந்தஜாதகனுக்கு பிராதுர்லாபமுண்டெனக் கூறுகின்றனர்.

தேகாதிபதி பிரபலனுகயிருக்க தேகியிடலாபாதிபதி பிராதுருஸ்தானத்திலிருக்க பிராதுர்ஸ்தானதிபதி க்ஷீணனுயிருக்கஜெனனமானவன் தனத்தை யிந்த பிராதுரு பொசிப்பானென்னனக் கூறுகிறார்.

பிராதுருதிபதி பிரபலனுகயிருக்க தேகாதிபதி க்ஷணனுயிருக்க தேகியிடலாபாதிபதி பிராதுருஸ்தானத்திலிருந்தால் இந்த பிராதுரு தனத்தை இந்தஜாதான் பொசிப்பானென்று முன்னோர் கூறுகின்றனர்.

இலாபாதிபன் பிராதுருஸ்தானம் பூமிஸ்தானங்களில் மித்திரனுகயிருக்கினும் அல்லது - 4-ஆம் இராசியில் இந்தப்படி இவனுக்கு நட்பனுயிருந்தாலும்—4-ஆமிடத்ததிபனும்கூடி யிருக்கினும் அல்லது உத்தமஸ்தானங்களிலிருக்கினும் உத்தமஸ்தானதிபதி கிரகங்களுட

ன்கூடி பிரபலனுயிருக்கினும் இந்த ஜாதகனுடையசகோதரனுக்குவாகனசௌக்கியமும் வித்தையும், புத்தியும் சம்பூரணமாக வுண்டாம், ஆனால் இந்த லாபாதிபன் பிரபலனாக யிருக்கவேண்டுமெனக் கூறுகின்றார்.

இலாபாதிபன் எந்தஸ்தானத்திலிருந்தானே அந்தஸ்தானத்திற் கடுத்தபேர்களிருந்தார்கள் அந்தஸ்தானத்திற்கடுத்தபேர் அயிஸ்வரியமும் அர்த்தலாபமும் இந்தஸ்தானாதிபதிக்குக் கொடுக்குமென முன்னோர் கூறுகின்றனர்.

இலாபாதிபன் சத்ருஸ்தானத்தில் பிரபலனாகயிருக்க சத்ருஸ்தானாதிபன் பலட்சீணனுமாயிருந்தால் அந்தச்சத்ருதனம் இந்த தேகாதிபதிக்குச்சேருமென முன்னோர் கூறுகின்றனர்.

இலாபாதிபன் பகை-நீசட்சீணனாய் சத்ருஸ்தானத்திலிருக்க யிந்ததேகியின் அயிஸ்வரியமும் அர்த்தலாபமும் சத்ருவுக்கேசேருமெனக் கூறுகிறார்.

தனஸ்தானாதிபதி லாபஸ்தானத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்றிருக்கில் ஜெனனமானவன் வெகுதனந்தேடி வாழ்வானென முன்னோர் கூறுகின்றார்.

இலாபாதிபதி பிதுர்ஸ்தானமாகிய-9-ஆமிடம்சேர்ந்தால் இவன் பிதாதேடின தனத்தைப்பார்க்கிலும் அதிகமாகத்தேடுவானென முன்னோர் கூறுகின்றார்.

புத்திரஸ்தானாதிபதி லாபஸ்தானத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்றுச்சேரில் பிறந்த ஜாதகனுக்கு வெகுபுத்திரரும் புத்திரிகளு முண்டாமென முன்னோர் கூறுகின்றார்.

6-8-12 - ஆமிடத்துக் கிரகங்கள் இப்படி லாபஸ்தானத்திலிருந்தால் தங்கள்திசையில் தங்கள்சம்பந்தமானபலன்களை நன்மையேபண்ணுவார்களென முன்னோர் கூறுகின்றார்.

பாரியஸ்தானமாகிய - 7-ஆமிடத்ததிபதி பிரபலனாய் லாபஸ்தானத்தில்சேர்ந்தால் அந்தலாபஸ்தானத்தில் எத்தனைகிரகம்நட்பாய்க்

கூடியிருந்தார்களோ அத்தனைபாரியர்கள் இந்த ஜாதகனுக்குஉண்டா டாமென முன்னோர் கூறுகின்றனர்.

இந்தப்படி யவரவர்களுக்கு-12-பாவத்திற்கும் லாபாதி பனிருக்கும் வகை நன்மை தீமை பார்த்து பலன்காண்பதென முன்னோர் கூறுகின்றார்.

இரவிமதிகள் லாபாதிகளானல் சிங்காசனன் ஆவலனன்டையிந்த ஜாதகன் ஜீவிப்பானென முன்னோர் கூறுகின்றார்.

மேற்கூறியபடி அங்காரகனுல் வலிவினல்தனம்வரும் பூமியினுலுண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

மேற்கூறியபடிபூதனுல் வித்தையினுலும், குமாரர்களாலும், பந்துக்களாலும், கெணிதசாஸ்திரலிபிகளாலும் இந்தஜாதகனுக்குசாதி தனம்வந்துசேருமென முன்னோர் கூறுகின்றனர்.

மேற்கூறியபடி குருவானல் தன்புத்தியினுலும், மக்களாலும், பிரதானிகளாலும், வேதாப்பியாசங்களாலும் இந்த ஜாதகனுக்குலாபங்கிடைக்குமெனக் கூறுகின்றார்.

சுக்கிரனுல் பிரதானிகளாலும், ஸ்திரீஜெனங்களாலும், மிருகாதிகளாலும், வஸ்திரங்கள்ாலும், நவரத்தினங்களினல் - கோவு-அசுவகோஜாதி விக்கிரயங்களினுலும் இந்த ஜாதகனுக்கு அயிஸ்வரியமும், அர்த்தலாபமும் உண்டாமென முன்னோர் கூறுகின்றார்.

சனியானல் சூத்திரர்களாலும், ஈனவிர்த்தியினுலும் ஸதானபேதத்தினுலும் வனவிருட்சகத்தில் காஷ்டகிரய விக்கிரயங்களினுலும், சோரபுத்தியாலும், இங்கிசைகளிலும், ஈனரிடத்துச் சேவகத்தினுலும், இந்த ஜாதகனுக்கு அயிஸ்வரியமுண்டாமெனக் கூறுகிறார்.

தேகாதிபதியும், இலாபாதிபதியும் நட்பாராய்க்கூடி லாபஸதானத்திலாயினும் தேகஸதானத்திலாயினும்உத்தமஸதானத்திலேயாயினும் இருந்து இவாளிருந்த ராசியாதிபதியும் பால்லியராயிருந்தால் இந்த ஜாதகன் தேகமிருக்களவும் அயிஸவரியமும் அர்த்தலாப முண்டாய் சுகியாகயிருப்பானென முன்னோர் கூறுகின்றனர்.

இவர்கள் உச்சருயிருந்தால் மகா அயிஸ்வரியமும் அர்த்தலாபமும் உண்டாமெனக் கூறுகின்ருர்.

தேகாதிபதியும், லாபாதிபதியும் நட்பருயிருந்தாலும் லாபஸதானத்திலிருந்தாலும் அந்தஜாதகனுக்கு உத்தமபலன் கொடுப்பாரென முன்னோர் கூறுகின்றனர்.

மேற்கூறிய யிருவரும் உச்சத்துடன் கூடியிருக்கினும் அல்லது பார்வையுண்டாயினும் இந்தஜாதகனுக்கு பூரணபலனுண்டாமெனக் கூறுகின்றனர்.

இந்த தேகாதிபதியும், இலாபாதிபதியும் இவர்கள் இருவருடனேயும் எந்தெந்தஅதிபதி நட்பாட்சியுச்சமாகக்கூடி யிருந்தார்களோ அவரவர்கள் லாபத்திலிருந்தால் எல்லாகிரகங்களும் அவர்களுடைய திசையில இந்தஜாதகனுக்கு பலன்கொடுப்பாரெனக் கூறுகின்றனர்.

அந்திரதிசையிலும் பிரபலனுகில் தன்னுடைய அந்திரதிசையில் யுகங்களார்க்கடந்திருக்கவல்லவனுப் பாக்கியதேகாதிபதியா யிருப்பானென முன்னோர் கூறுகின்ருர்.

இலாபஸ்தானகிரகங்கள் மூடநீசருய் ஈன்ருய் உத்தமஸ்தானத்திலிருந்தால் மத்திபபலனைக்கொடுப்பானெனக் கூறுகின்றனர்.

இலாபஸ்தானகிரகங்கள் பலயீனருய் 6-8-12-ஆமிடத்தி லிருந்தால் நிஷ்பலன்கொடுப்பாரென முன்னோர் கூறுகின்ருர்.

இலாபாதிபதி பகைநீசட்சீனமூடருய் சத்துருஸதானத்தில்நிற்க இந்தஜாதகன் தேடினதனமெல்லாம் சத்துருக்களுக்கேகொடுப்பானென முன்னோர் கூறுகினருர்.

இலாபாதிபன் வியஸதானத்தில் சேரினும் சத்துருக்களுக்கே தனமெல்லாங்கொடுப்பானென முன்னோர் கூறுகின்ருர்.

இலாபஸ்தானத்தில் கிரகங்கள் சூரியன்சந்திரன் நட்பருய் தனலாபகேந்திர திரிகோணங்களில் தேரிநிர்க்கில் வெகுநன்மையுண்டமுமன முன்னோர் கூறுகின்றனர்.

பதினோராம்பாவம்

முற்றிற்று.

மீனலமகனை. கேந்திரம் பெண் ராசி உபய ராசி பரக்கும் ராசி உடல் உதைய ஊரா மூ	உ-ஆமிடம் மேஷம். கேந்திரய-வாக்கு - தனம்-குடும்பம்	ங-ஆமிடம். ரிஷபம் -சகோதரம்-வெற்றி - கேள்வி-காது- அடிமை.	ச-ஆமிடம் மிதுனம் கேந்திரம் தாயார்கல்பூமி-பந்து-சுகம் வியாபாரம்
கஉ-ஆமிடம் கும்பம் விரையம் - சயனம் - மோட்சம் அ - னித்தியம்நோ	12-வது, மீன லக்கினமானால் இந்தசக்கரத்தை கொண்டு - இராசிவிபரமறிந்துக்-கொள்ளவும்.		ரு-ஆமிடம் கடகம் புதல்வர் மாதுலன் பிதாஞானம்புண்ணியம்.
யக-ஆமிடம் மகரம் சிரேஷ்டம் பிராதுர் இலாபம் இஷ்டம்.			சு-ஆமிடம் சிங்கம் ரோகம சத்துரு சோரம்சிரை வழக்கு
ய-ஆமிடம் தனுசு-கேந்திரம் கருமம் சிவனம்கீர்த்தி ஆதாரம்	கூ-ஆமிடம் விருச்சிகம் தருமம்பிதா பிரபுத்துவம் பாக்கியம் குரு	அ-ஆமிடம் துலாம்ஆயள் தீர்க்கவியாதி அபமிருத்து	எ-ஆமிடம் கன்னி கேந்திரம் களத்திரம் காமம் மாரகம் நித்திரை

பனிரெண்டாம்பாவம்.

தனபலன்.

———(*)———

புயேசன் பாலருடனேகூட அல்லது வியஸதானத்தில்பாவிகள் நிர்க்க பாவக்கிரகம்பார்க்க பிறந்தஜாதகனுக்கு பாவமூலமாயிருந்து தனம்வருமெனக் கூறுகின்றனர்.

சனிகுளிகன் இராகுவெப்பத்திலிருக்க வியஸதானதிபதி குருராங்கிசமேற பாவிகள்பார்க்கப் பாவமூலத்தினாலே தனட்சய முண்டாமென முன்னோர் கூறுகின்றார்.

வியத்தானாதிபதி சுபக்கிரகமாக கேந்திர திரிகோணத்திலிருக்க சுபக்கிரகம்பார்க்க கர்ண்ணபூஷணத்திடனுயுண்டு பாவக்கிரகங்களிருக்க மேற்சொல்லிய பலனில்லையென முன்னோர் கூறுகின்றார்.

இலாபாதிபதியும் வியயாதிபதியும் - 3-ஆமிடத்தில்நிர்க்க சுபக்கிரகம் பூரணமாய்ப்பார்க்கக் கர்ண்ணபூஷணமுண்டாமெனக் கூறுகின்றார்.

வியயாதிபதியும் லாபாதிபதியுங் கூடியிருக்கச் சுபக்கிரகங்கள் பார்க்கத் தீர்க்காயுசும் தனவிர்த்தியுமுண்டாமெனக் கூறுகிறார்.

வியயாதிபதியை பாவிகள்பார்க்கப் பாவிகளுடனேகூட தனநாசமுண்டாமெனக் கூறுகின்றனர்.

இலாபாதிபதியுடனே சுபக்கிரகங்கள்கூடியிருக்கத் தனலாபமுண்டாமெனக் கூறுகின்றனர்:

வியேசன் செவ்வாயுடனேகூட யிந்தஜாதகனுக்கு சகோதரத்தால் தனம் வின்னமாகுமென முன்னோர் கூருகின்றனர்.

புத்திராதிபதியுடனே விரையாதிபதிகூட பெலயீனனாகவிருக்கக் குருராங்கிசமேற இந்தஜாதகனுக்கு புத்திராள்மூலத்தில் தனசேதம் வருமென முன்னோர் கூறுகின்றனர்.

பிதுர்த்தானாதிபதி வியயாதிபதியுடனே கூட சத்துருத்தானாதிபதிபார்க்க பிதுர்மூலத்தால் இந்தஜாதகனுக்கு தனம்சேதம்வருமென முன்னோர் கூறுகின்றார்.

தனாதிபதி வியயாதிபதியுடனேகூடப் பாவர்கள் பார்கக தாயாரின்மூலமாய் தனச்சேதம்வருமெனக் கூறுகின்றனர்.

ஆயுர்த்தானாதிபதியுடனே வியயாதிபதிகூட குருராங்கிசமேற இந்தஜாதகனுக்கு அங்கயீனம்வருமென முன்னோர்கூறுகிறார்.

2 - ஆமிடத்தில் வெகுபாவிகளிருக்க வியயாதிபதி பாவியாக சனி குளிகனுடனேகூட அங்கயீனம்வருமென முன்னோர் கூறுகின்றனர்.

வியேசன் பாவராங்கிசமேற அல்லது குரூராங்கிசமேறப் பாவக்கிரகங்கள்பார்க்கபிறந்தஜாதகன் நரகத்தில்விழுவானென முன்னோர் கூறுகின்றனர்.

வியாதிபதி சஷ்டியங்கிசமேற குரூரனுடனேகூட அல்லதுபார்க்க நரகமுண்டாம் சந்திரன் சூரியன் பெலவானாக வியாதிபதி பெலவானாகக் கேந்திரத்திலிருக்க ஜாதகமானவன் தெய்வீகமான மரணம் அடைவன் சுவர்க்கங்கிட்டுமெனக் கூறுகின்றனர்.

கர்மாதிபதி பெலத்திருக்க வியாதிபதி சுபக்கிரகமாக யிருந்து பார்க்க பீடத்தில் ஒருகிரகம் உச்சனாகயிருக்க ஜாதகமானவனுக்கு சொர்க்கம் உண்டாமெனக் கூறுகின்றார்.

சுபக்கிரகம் ஸ்வட்சேத்திரஉச்சமாக வியத்திலிருக்க வியாதிபதி சௌமியனாகக் கேந்திரத்திலிருக்கத் தெய்வலோகாங்கிசமெடுக்க ஜாதகமானவனுக்கு சொர்க்கங்கிடைக்குமெனக் கூறுகின்றனர்.

கர்மாதிபதியுடனே வியாதிகூட அல்லதுபார்க்க சுபக்கிரகம் திருஷ்டியுண்டாக ஜாதகமானவனுக்கு சொற்கமுண்டாமெனக்கூறுகின்றனர்.

நேத்திராதிபதி சுபனுடனேகூட சுபாங்கிசமேற வியத்தில்சுபாளிருக்க ஜாதகமானவனுக்கு நல்லநேத்திரமுண்டாம் 6-ஆமிடமுடையவன் வியத்திலிருக்க வியாதிபதியும் அப்படியிருக்க தனச்சேதம்வருமெனக் கூறுகின்றனர்.

இலக்கினாதிபதி கேந்திரத்திலிருக்க சந்திரன் ஆருலர்க்க கிரகக்கள்கூட வியத்தில் ஒருகிரகம் உச்சனாகயிருக்க சுவஸ்க்ஷேத்திரமாகிப் பிறந்தஜாதகன் பூபதியாகயிருப்பானெனக் கூறுகின்றனர்.

வியாதிபதி மூலத்திருகோணகேந்திரத்திலிருக்க அவனை மித்திராள்பார்க்க-12-ல்-ஒருகிரகம் உச்சனாகயிருக்க சுவட்சேத்திரனாகப் பிறந்தஜாதகன் பூபதியாகயிருப்பானெனக் கூறுகின்றனர்.

கர்மாதிபதியுடனே வியாதிபதிக்கூடப்பார்க்க மித்துருவாகயிருக்க சத்துருகிரகமில்லாதிருக்க ஜாதகமானவன் இராஜாவாவானெனக் கூறுகின்றனர்.

சுகாதிபதியும் கர்மாதிபதியும் கூடியிருக்க வியாதிபதி சுபக்கிரகமாக கேந்திரதிரிகோணத்திலிருந்து பார்க்க ஜாதகமானவன் இராஜாவாவானெனக் கூறுகின்றனர்.

சந்திரன் கேந்திரத்திலிருக்க 4-ஆமிடம்வியாழன்பார்க்க ஜாதகமானவன் கீர்த்திவானும் சுகசீவியாய் புத்திரமித்திரகளத்திராதிபுடன் விருத்திகரம்பெற்று வாழ்வானென முன்னோர் கூறுகின்றனர்.

பனிரண்டாம்பாவம்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

வியாதி யறியும்படி.

கூறுகின்றது.

இலக்கினதிபதி புதன்-அங்காரகன-இவர்கள் மிதுனம்-கன்னி யிந்த இராசியில் நிர்க்கபுதன்பார்க்க பிறந்த ஜாதகனுக்கு ஆசனரோகமுண்டாம் சந்திரனுக்கு 3-ஆமிடத்ததிபனோடு சூரியன்கூட நோஞ்சைவியாதியுடையவனைப் பலர்முலைப்பாலையும் உண்பானென முன்னோர் கூறுகின்றார்.

3-ஆமிடத்தோனையும் 10-ஆமிடத்தோனையும் சந்திரன்கூட அல்லதுபார்க்கயேக ராசியிலிருக்க 10-மாதிபதிதிசைவருங்காலம் திர ராசியிலிருக்க நீரழிவு ரோகம் வருமெனக் கூறுகிறார்.

உத்தமகிரகங்கள் சென்மம்-8-ஆமிடம் இருக்க பிறந்தஜாதகனுக்கு ஆயுதத்தால் நோயுண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

இலக்கினதிபதி-8-ஆமதிபதி யிவர்களோடு-புதன் - அங்காரகன் இவர்கள் கூடியிருக்கப் பிறந்தஜாதகனுக்கு நீர்தாரைந்துவாரமிரண்டாகுமெனக் கூறுகின்றனர்.

இவர்களுடன் சவுரிகூடில் பிறந்த ஜாதகனுக்கு சலத்துவாரம் கல்லடைப்பு ரோகம்வருமென முன்னோர் கூறுகின்றனர்.

வியாழனும்-இலக்கினதிபதியும்-கருங்கோள் இவர்கள் மூவரும் 3-ஆமிடத்ததிபனோடு சேரினும் அல்லது - 3 ஆமிடத்தி லிருக்கினும் பிறந்த ஜாதகனுக்கு அண்டவாதரோகமுண்டாம்.

ஜென்மலக்கினத்தையும்-கடகத்தையும்-சனிபார்க்கில்சுர நோய் கண்டு அதினாலேயே மரணமடைவானெனக் கூறுகின்றனர்.

6-8-ஆமிடத்ததிபர்கள் நீசத்திலிருக்க பாவக்கிரகங்கள் ஜென்மத்திலிருக்க ஜென்மாதிபன் அவருடன்கூட குளிகனோடிருக்கசந்திரன் சனிகூட-6-12-ஆமிடத்தில் நிற்கப் பிறந்தஜாதகன் வியாதியினால் மரணமடைவானென முன்னோர் குறுகின்றனர்.

8-ஆமிடத்ததிபன்ஜென்மத்திலிருக்க, 2-ஆமிடத்தோன்-8-ல்-நிற்க ஜென்மாதிபதியை சனிகூட சந்திரன் பாவருடனே கூட பிறந்த ஜாதகனுக்கு உருவில்லாத ரோகம் உண்டாம் இலக்கினத்திலும்-8-ஆமிடத்திலும் சூரியனுடன் ஜென்மாதிபதிபுரில் பித்தரோகப் பிணியாமெனக் குறுகின்றனர்.

குளிகன் கருங்கோள் ஜென்மாதிபதி இவர்கள்மூவரும் குடினும் அல்லது ஜென்மத்தி லிருக்கினும் குளிகன் திருகோணத்திலாதல் 8-ஆமிடத்திலாதயிருககினும் குளிகனும், அங்காரகனும்-4-ஆமிடத்தோனுடன் குடியிருக்கினும் இந்த ஜாதகனுக்கு பீஜத்தில் கோழிமுட்டையைப்போல் திரண்டு நாளுக்குநாள்பெருக்குமென முன்னோர் கூறுகின்றார்.

ஜென்மாதிபனுடன் பாவக்கோள்களும், அங்காரகனும் கூடியிருக்கஅல்லது பார்க்கப் பிறந்தஜாதகனுக்குக் கல்லினால் அடிபட்டு அதினால் விரணவாதமுண்டாமெனக் கூறுகின்றனர்.

இலக்கினாதிபன் இராகு-மதி. செவ்வாய்-புதன்-இந்த ஐந்தாகிரகங்களும் இலக்கினத்திலாதல்-6-8 - லாதல் இருக்க பார்க்கப்பிறந்தானுக்கு வெண் குஷ்டமுண்டாம் சூரியன் ஜென்மாதிபதி அங்காரகன்,புதன் இவர்கள் ஜென்மம்-6-8-ல் தேரிநிற்க்க செங்குஷ்டமுண்டாமெனக் கூறுகின்றனர்.

ஜென்மாதிபதியும் சனி-இராகு இவர்கள்-6-8-ல்-யிருக்க பிறந்த ஜாதகனுக்குக் காலில் கருக்குஷ்டம் வருமெனக் கூறுகின்றனர்.

வியாதிதோன்றுமிடம்

கூறுகின்றது.

கிரகங்களைக்கொண்டு வியாதியறியவேண்டில் சூரியன்-சனி-சந்திரன்-முகம்-அங்காரகன்-கண்டம்-புதன் பிடதுகரம் வியாழன வல

துகரம் சுக்கிரன்-மார்பு சனி முழங்கால் பாம்பு கால்-இவ்விதமாக ஜனனகாலத்தில் நிற்கும் கிரகங்களின் நிலைமைக்கண்டுசொல்லவேண்டு மெனமுன்னோர் கூறுகின்றனர்.

சூரியன்-புதன் இவர்கள் பாவருடன்கூடி-2-6-8-ல்-நிற்க இவர்களையும் இலக்கினத்தையும், பாவக்கிரகங்கள்நோக்கப் பிறந்தஜாதகனுக்கு சயரோகமுண்டாமெனக் கூறுகின்றனர்.

அமரபட்சத்துசந்திரன் சலராசியில் பாவருடன்கூடி 6-8ஜென்மத்தில்நிற்கப் பிறந்தஜாதகனுக்கு சயரோகமுண்டாமென முன்னோர் கூறுகின்றார்.

அங்காரகன் ஜென்மத்திலிருக்க புதன்-பாவருடன்கூடி-2-8-ல் இருக்க சுரரோகமுண்டாம் ஜென்மாதிபதி சுக்கிரனுடன்கூடி-8-மிடத்திலிருக்க ஜென்மாதி நீசசத்துருவுடன் ஸ்தானத்திலிருக்கப் பிறந்த ஜாதகனுக்குப் பிரமியநோய்வருமெனக் கூறுகின்றார்.

இலக்கினத்தில் கருங்கோள்நிற்க-3-ஆமிடத்தில் சனிநிற்கப்பிறந்தஜாதகனுக்கு அண்டரோகமுண்டாம், ஜென்மத்தில் சூரியன் சனியுங்கூடிநிற்க குன்மவலியாம் - பார்க்க பெருமூச்சுகாணும் ஜென்மாதிபனும் செவ்வாயுங்கூட தீயோர்கள்பார்க்க தலையில்கல்லடிபடும் அதனால் துன்பமுண்டாமெனக் கூறுகின்றனர்.

இலக்கினத்தில் சனி-ராகு இவர்கள்நிற்கில் பிறந்தஜாதகன் பேய் பயத்தினால் சஞ்சலமுற்றிடுவனும் சனி-குஜன் - ஜென்மத்திலிருக்க அவர்களை தீயோர்பார்க்க அடிவயற்றில் வலியுண்டாம், ஜென்மத்தில் சனியிருக்க சூரியன்-ராகுவுங் கூடிப்பார்க்க ஆயுதத்தினால் வயற்றில் காயமுண்டாகுமெனக் கூறுகின்றனர்.

கருநாகனும் ஜென்மாதிபதியும்-6-மதிபதியும் இவர்கள்மூவருங் கூடிநிற்க-2-ஆமதிபதிதிசையில் அவன் பொசிப்பில் தந்தரோகமுண்டாம் புதன்கூடில் ரோகசரீரனுமாவான் இவர்களை நல்லகிரகங்கள் பார்க்கில் மேற்கூறியரோகங்களுக்குப் பரிகாரமாமெனக் கூறுகின்றனர்.

சூரியனும் சனியுங்கூடி அஷ்டமத்திலிருக்கப் பிறந்த ஜாதகன் மகோதரநோயால் பாதிப்பன் ஜென்மத்திலும்-4 - ஆமிடத்திலும்

சூரியனாதல் அங்காரகனாதல் நிற்க-10-ஆமிடத்தில் சவுரிநிற்க பாவ யிராசியில் தேய்பிறைச் சந்திரனிருக்க பாம்பு திருகோணத்திலிருக்க சூலைநோயால் பாதையுண்டாமெனக் கூறுகின்றனர்.

நாய்கடிகூறுகின்றது.

இரண்டாமிடத்தில் சனியுடன் கூடிநிற்க பாவர்கள்பார்த்திடப் பிறந்தஜாதகன் நாய்களாற்கண்டு பயப்படுவான-2-ஆமிடத்தில்சேனும் 2-ஆமிடத்ததிபனுங்கூட அவாகளை பாவர்சேர நோக்க பிறந்தோனை நாய்கடிக்குமெனக் கூறுகின்றனர்.

பாம்புகடிகூறுகின்றது,

எட்டாமிடத்தில் இராகுவிருக்க-2-ஆமிடத்தில் துஷ்டகிரகங்கள் கூடநோக்கப் பிறந்தஜாதகனுக்கு விஷத்தீண்டுமெனவறிக, ஜென்மாதிபதியும் ஆறுமிடத்தோனும் கருங்கோளும் இவர்கள் மூவரும் ஒருவீட்டிலிருக்கப் பார்பிறனல் நஷ்டமடைவானெனக்கூறுகிறார்.

சந்திரனும்-கரும்பாம்புங்கூடி-7-ஆமிடத்திலும்-8-மிடத்திலும் மேவினும் பிறந்தஜாதகனுக்கு-8-ல்-விஷத்தினால் கண்டமெனக் கூறுகின்றனர்.

ஆயுதவிரணங்கூறுகின்றது.

சந்திரன்-7-ஆமிடத்திலிருக்க-6-மிடத்தோனும் வியஸ்தானத்திலிருக்க பாவக்கிரகங்கள் நோக்கப் பிறந்த ஜாதகனுக்கு காயம்பட்டு ஒருகை துண்டாகுமெனக் கூறுகின்றனர்.

இலக்கினாதிபதியேனும், அட்டமாதிபதியேனும் கூற்றன் ஸ்தானத்தில் குளிகனைக்கூடி-12-8-ல்-நிற்கில் பிறந்தஜாதகனுக்கு கால் இருகூண்டாகுமெனக் கூறுகின்றார்.

எட்டாமிடத்ததிபதியும் செவ்வாயுங்கூடி-6-12-ல்-நிற்கப்பிறந்த ஜாதகனுக்கு துஷ்டர்களின்கைசூரியினால் வெட்டுப்படுவது திண்ணமென முன்னோர் கூறுகின்றார்.

ஜென்மத்தில் சனிபாம்புநிற்க கன்னியில் சுக்கிரன்நிற்கப்பிறந்த ஜாதகனுக்கு கைகால் அறுப்புண்டாமென முன்னோர் கூறுகின்றனர்.

சூரியன்-சந்திரன்-பாம்பு இவர்கள்மூவரும் ஒருவீட்டிலிருக்கப் பிறந்த ஜாதகனுக்கு அவன் ஆவி விண்ணிற்பறக்கும்படியாகசென்னி அறுப்புண்டு பூமியில்விழுமெனக் கூறுகின்றனர்.

சூரியன்ஜென்மத்திலிருக்க அங்காரகன் அஷ்டமத்திலிருக்கஅமாபட்சத்து சந்திரனும்கருப்பாம்பும்ஒருகாலிலுறப்பிறந்த ஜாதகனுடல் இருபிளவாகும் ஜென்மத்தில் சனியிருக்க சந்திரன்-சூரியன் பாம்பு-இவர்கள்கூடில் சரீரம்பிளந்து யிருகூறுமென முன்னோர் கூறுகின்றனர்.

இலக்கினதிபதியும்-8-ஆமாதிபதியும் மித்துருவுங்கூடி யிருக்கப் பிறந்தவன் மேககர்ச்சனையினால் பூமியில் வீழ்ந்துமாள்வன்-6-12-ல்-சூரியனிருக்கவையமுறபடும், அங்காரகன் அரசன்-7-8-ல்-நிற்க-10-மிடத்தில் சேய்-புதன்-சனி-இராகு-இவர்களிருக்க கால் துணிவுபடுமென முன்னோர் கூறுகின்றனர்,

———()———

சீவன்பலன் கூறுகின்றது.

விருத்தம்.

அம்புவியோர்செய்தொழிலால்சீவனமுண்டாகும்
அடையரிலக்கனஞ்சோமனுதவன்மும்மனைக்கும்
தாபமொடுதாம்விட்டாங்கிசையிலிருந்தோர்
தம்மிலதிகப்பலமாய்த்தரித்தவாங்கிசைதான்
வெம்புரவித்தேரொனங்கிசத்தனையான்பலமே
மேவில்பிலவெக்கோனும்விற்றுண்வேகொள்வன்
செம்பொன்விற்பதுராசிப்பலனூருக்கோரை
திக்குபலனுண்டாயிற்செய்வன்வயித்திபங்கள்.

களங்கமிலாவெண்டிங்கிசமேயாகிக்
கமழுமிலக்கினத்திரைக்காணமுதலாகில்
விளங்கியநர்ப்பயிர்த்தொழிலேபுரிந்துணவுகொள்வான்
மேவியரெண்டாந்திரையக்காணமேயாயின்

விளங்கெழுசிந்துவிற்சாம்பான்சிப்பல்சோங்கெட்டி
வாழ்வனமூன்றாந்திரையக்காணமுமேயாயின்
இளம்பிடியோதிமந்தனையும்பருக்கநடைமடவார்
இலக்கத்தாற்சிவனமுண்டென்பரினியோரே.

இனியசெவ்வாயங்கிசத்திலக்கினமேபலமாய்
இரும்புவெள்ளிசெம்பொனும்விற்றிருப்பன்வாக்கிசைத்தான்
நனியபலமாயிடிதக்கினியினுறுதொழிலே
நடந்திடுவன்றிரிங்கிசாங்கிசம்பலமேயாயின்
தனியுருவாயுதம்பிடித்துச்சேவிப்பனேழாம்
தானமதுபலமுறிற்றக்கதொழில்செய்வன்
கனமொழியாயிரவிமுதன்றனிமட்டுமெண்ணிக்
கண்டதசத்தாங்கிசமேயாம்பலன்கண்டீரே.

கண்டபுதனங்கிசத்தின்பலன்வாங்கிசையே
காவியங்கள்பன்னுவாதங்கிசமேயாயின்
மின்னிற்பசாஸ்திரமேயறிந்துணவுகொள்வன்
மேவுந்திரியத்தாங்கிசமேபெழுந்தொழிலான்
கொண்டவறுபதிலோரையங்கிசமேற்கணிதம்
குறித்திடுவன்புதனிருந்தசிதனைப்பிரிந்து
மண்டியறுபதுபங்குசெய்யிலொன்றைப்பங்கில்
வந்துபுதனிருக்கிலெனவேவழுத்தல்வேண்டும்

வேண்டுங்குருவங்கிசத்தன்முதற்றிரைக்காணந்தாம்
விப்பறுபலனிரண்டாந்திரையக்காணந்தான்
பூண்டதேவதைகளினற்பலன்மூன்றாங்காணம்
புண்ணியத்தாற்பயனுகுஞ்சுக்கிரனங்கிசைக்குத்
தாண்டுசுரபிகளெருமைபெருமூன்றாங்காணம்
தக்கவெள்ளிவிற்பனடுத்திரைகாணந்தான்
மீண்டுமுதற்றிரைக்காணமதுவேபாலன்
விரவுனவாத்தினமேவியாபாரஞ்செய்வன்.

செய்யசனியங்கிசத்திரிபலன்சிறுபன்றனும்
செப்பியமித்திராங்கிசமேறதாயாசத்தொழிலாம்

வெய்யபாவக்கிரகம்லக்கினத்தைப்பார்க்கில்
மெத்தவேசுமைசுமந்துபெய்புவைவுகொள்வன்
ஐயவிலக்கினந்தன்னிசேருங்கண்டக்கால்
ஆகாதகாரியங்களவத்தொழிலேசெய்வன்
துய்யசனியங்கிசத்திற்சுபக்கிரகங்கூடில்
துலங்கிடவேசிற்பத்தொழில்செய்துவாழ்வன்.
ஆதவன் சசிலக்கினமிவைமூன்றக்
கதிபரிலதிகமாய்பலத்தோன்
அடைந்தவங்கிசத்தான்பரிதிசெங்கிரக
யம்பொன்னுமலக்கலும்விற்ற
நீதியாய்வைத்தியங்களுஞ் செய்வன்
நீள்விரையங்கிசமாயின்
நீரினில்சோங்குடத்தியேயுய்வன்
நிமலமகனங்கிசமாயின்.
ஓதுமக்கினியாலிரும்புபொன்வெள்ளி
யுருக்கவாயுதவாளினலும்
உணவுகொண்டிடுவன்புந்தியாங்கிசமே
லுரைத்திடுங்கணிதமுங்களாக்கு
தீதருசிற்பத்தொழில்கள்காவியத்தார்
சீவனம்வேந்தனங்கிசைக்கு
தெய்வமாமறையோர்பெரியவனலுஞ்
சீவனமிருதினிலிருப்பன்.

கலிவிருத்தம்.

இருந்தசுக்கிரனங்கிசமேறிலோ
தெரிந்தரத்தினம்வெள்ளியால்சீவனம்
பொரிந்தசின்னங் கிசப்புவீனமாய்
வரிந்திரிந்தொழில் செய்யவளமிலான்.

கேந்திரபலன்கூறுகின்றது.

திக்குப்பலமாவதுசேய்கதிர்
தொக்குருபுத்திலக்கினத்துற்றால்
துக்கச்சனியேழிற்சூழ்ந்திடின்
லக்கச்சினங்கினில்வலியெனச்சொலே.

மாரகதிசை கூறுகின்றது.

மாரகத்திற்றியவருநாள்காந்திசைசனிபேவந்துற்றாலும்
பார்தனக்குச்சுதன்செவ்வாயைந்தாகுந்திசைகாரேபரிந்துற்றாலும்
பேருதித்தலாறுகுந்திசையரசனானாலும்பின்புராகு
சீருதித்தவேழாகுந்திசையானாலும்மரணந்திண்ணந்தானே.

கார்த்திகைமுதலொன்பானாள் கடும்பகல்திங்கள்செவ்வாய்
கார்த்தவிராகுபொன்சுன்கவின்புந்திக்கேதுவெள்ளி
சீர்த்தவர்க்குமுறையாகச்செப்பியதிசைகளாகும்
ஏர்த்தமற்றிரைகாண்மீறுமில்லன்றேகொள்வர்பலர்.
சூரியன்றிசைகண்டாறு திங்கட்குப்பத்துசெவ்வாய்க்
காருமோரேழிராகுக் கரைபதினெட்டுமொன்றுக்
கேருகிரெட்டுமேந்தற் கியம்புபத்தொன்பதாகும்
சீரில்..புந்திக்கோர்பானேழ் சிகிக்கேழ்வெள்ளிக்கைந்நான்கே.

அனுபோக ஜாதகரகசியம்
முற்றிற்று.

இனி மூன்றுங்காண்டத்தில் ஆயுள்பாகம்
அச்சிட்டுக்கொண்டுவருகிறோம்.